

கல்கி
விஜயா.
KALKI
5.3.1961
30
காசு




லட்சக்கணக்கான குடும்பங்கள்
பிரியத்துடன் பருகும் பானம்
SPECIAL HOTEL BLEND
BROOKE BOND
ப்ரூக் பாண்ட்
தேயிலை
புதியது – சிறந்தது
ப்ரூக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்
TBB 3625C

கல்கி பொருளடக்கம்

சார்வரி, மாசி 22 ❋ மார்ச் 5, 1961

நேருஜி அளித்த பதில்	(தலையங்கம்)	...	3
என்ன சேதி ?	...	...	4
சேதி தெரியுமா ? (கார்ட்டூன்)	சாமா	...	5
காங்கிரஸின் பரிதாப நிலை	ராஜாஜி	...	6
ஆவடிக்கு ஒரு பாலிடெக்னிக்	...	...	9
பக்தி நெறி	ராஜாஜி	...	11
அல்லி மகள் (அட்டைப்படக் கதை)	சோமு	...	15
கண்டேன் ராணியை !	நமது நிருபர்	...	19
குருதேவரின் குரல்	பேராசிரியர் அ. சீநிவாசராகவன்	...	27
மணிபல்லவம்	நா. பார்த்தசாரதி	...	30
கண்ணாடி மாளிகை	ஜெயந்தி	...	42
அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்	சோமு	...	50
பிறந்த மண்	ஆதவன்	...	56
அன்பு வழி கண்ட ஆசிரியர்	...	...	65
யாருக்குச் சோதனை ?	கோவி. மணிசேகரன்	...	66
மரகதச்சிலை	விஜு—வாண்டு மாமா	...	70
கல்பனு	காந்தன்	...	74
தாரமங்கலத்துக் கயிலாயர்	தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்	...	77
நல்ல நாடகம் !	கோமதி சுவாமிநாதன்	...	81
சொர்க்கத்தின் நிழல்	ஜெகசிற்பியன்	...	87

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 20 | இதழ் 31

தமிழ்த்திரு நாடுதன்னைப்— பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

நேருஜி அளித்த பதில்

'உன் கண்ணில் பெரிய மரமே இருக்கும்போது எதிராளியின் கண்ணிலுள்ள தூசியைப் பற்றிப் பேசாதே' என்று கிறிஸ்துவ வேதமாகிய பைபிளில் ஒரு மணிவாக்கியம் உண்டு. பண்டித ஜவாஹர்லால் நேரு சென்ற வாரம் ஜனாதிபதியின் பிரசங்கத்தின்மீது எழுந்த விவாதத்துக்குப் பதிலளிக்கையில் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ரங்கா அவர்கள் பேச்சு தர்க்கரீதியாகவும் ஒழுங்காகவும் இல்லையென்று குறை கூறியிருக்கிறார். அதற்குப் பதில் அளித்த நேருஜியின் உரையில் விஷயங்கள் முன்னுக்குப் பின் முரணாகவும் குழப்பமாகவும் இருந்ததை என்னவென்று சொல்வது!

நாங்கள் நாகபுரித் தீர்மானத்தை மறக்கவில்லை; கூட்டுப் பண்ணையை மறந்து விடவில்லை; இப்போது சேவா கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகிறோம்; இதன் காரணமாக உணவு தான்யம் அதிகமாக விளைந்திருக்கிறது; தேசம் கஷ்ட நிலையைக் கடந்து, நல்ல பாதையில் செல்லத் தொடங்கிவிட்டது என்கிறார் நேரு.

விவசாயிக்கு நல்ல விதையும், உரமும் கிடைக்கச் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பதை யாருமே எதிர்க்கவில்லை. நாகபுரித் தீர்மானத்தையும், கூட்டுப்பண்ணை முறையையும் எதிர்த்தவர்கள் அனைவரும் சேவா கூட்டுறவுகளை வரவேற்றிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பருவமழை நன்றாக இருந்ததாலும், உரமும் விதையும் ஓரளவு நல்லபடியாக விவசாயிக்குக் கிடைத்ததாலும் விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது.

இதைக் கொண்டு, பிரதமர் ஜவாஹர்லால் நேரு கூட்டுப் பண்ணையினாலும் சோஷலிஸ முறையினாலும் விவசாயம் பெருகிவிட்டது என்று மார்தட்டிக் கொள்வது விந்தையாக இருக்கிறது.

உண்மையைச் சொல்லப் போனால், நாகபுரித் தீர்மானம் வந்தவுடன் அதனை எதிர்த்து, பெரிய இயக்கம் தோன்றியதாலும், இந்த எதிர்ப்பைக் கண்டு பயந்து சர்க்கார் நாகபுரித் தீர்மானத்தை அமுல் நடத்தத் தயங்கித் தயங்கிப் பின் நின்றதாலும், சோர்வடைந்திருந்த விவசாயி, சற்றுத் தைரியம் அடைந்து தனது பண்ணையில் அக்கறை செலுத்தத் தொடங்கியதனால்தான் இந்த மட்டிலுமாவது விளைவு பெருகியிருக்கிறது.

சோஷலிஸ பாணி விவசாயத்தில்தான் விஞ்ஞானமுறைப்படி விவசாயம் நடத்த முடியுமாம். நம் நாட்டு விவசாயிகள் பத்தாம் பசலிகளாம். முற்போக்கு விவசாய முறையையே கடைப்பிடிக்க மாட்டார்களாம்! இப்படிப் பலவாறாக நமது விவசாயப் பெருங்குடி மக்களைத் தூற்றியிருக்கிறார் பாரதப் பிரதமர். நாட்டின் நடப்பு, அதாவது இன்றைய விளைவுப் பெருக்கமே, அவர் கூற்றைப் பொய்யாக்குகிறது. நம் நாட்டில் விவசாய மக்கள் நல்ல பொது அறிவு பெற்றவர்கள். அதனால்தான் கம்போஸ்ட் உரமும் அதுவும் இதுவும் வாங்கி விளைச்சலைப் பெருக்க ஆர்வத்தோடு இருக்கிறார்கள். நமது கிராமங்களில் பெரிய விவசாயிகள், ஆங்கிலம் தெரியாதவர்களாக இருந்தாலும், மேனாட்டு நவீன விவசாய முறையைப் பற்றி அறிந்திருப்பதோடு அது எவ்வளவு தூரம் நம் நாட்டுக்குப் பயன்படும் என்ற அநுபவ ஞானமும் பெற்றவர்களாக இருக்கிறார்கள். நேருஜிக்கு இவையெல்லாம் தெரியாமற் போனது நமது துரதிர்ஷ்டம்.

அதே பிரசங்கத்தில் சீனா சோஷலிஸ முறையைப் பின்பற்றி வருவதால்தான் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறதாகச் சொல்லுகிறார். இதைச் சொல்லிவிட்டு அடுத்தாற்போல், சீனாவில் கோரப் பஞ்சம் தாண்டவமாடுகிறது என்றும் அவரே சொல்லு

கிறார். சோஷலிஸ முறை விவசாயத்தையும், விஞ்ஞான முறை விவசாயத்தையும் பின்பற்றும் நாட்டில் எப்படி உணவுப் பஞ்சம் தாண்டவமாடலாம்?

சீனாவில் கூட்டுப் பண்ணை முறையைக் கையாண்டதாலும் விவசாயிகளுடைய நில உரிமையைப் பறித்து, அவர்களைக் கம்யூன்களில் அடைத்து, அடிமைகளாக நடத்தியதன் விளைவாகவும் அங்கு இன்று பஞ்சமும் கலவரமும் தாண்டவமாடுகின்றன! இது ஒன்றே போதும், சோஷலிஸ முறை சீனாவில் படுதோல்வி அடைந்துள்ளது என்பதை நிரூபிக்க.

நமது மந்திரி பக்தவத்ஸலம் ருஷ்யாவுக்குச் சென்று வந்து விவசாயத் துறையில் சோஷலிஸம் படுதோல்வி அடைந்துள்ளது என்று சொன்னார்.

ஆனால் நேருஜிக்கு இன்னும் சோஷலிஸம்தான் நாட்டுக்கு நன்மை விளைவிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆயுள் முழுதும் விவசாயியாகவே வாழ்ந்து வந்திருக்கும் சுதந்திரக் கட்சித் தலைவர் ஆசாரிய ரங்கா அவர்களுக்கு, நேருஜி விவசாயத்தைப் பற்றிப் பள்ளிக்கூட வகுப்பு நடத்துகிறார்!

மொத்தத்தில் நேருஜியின் பேச்சே, அவருடைய கொள்கை மிக மிகத் தவறு என்பதை நிரூபிப்பதாய் இருக்கிறது. அவர் அனுபவத்திலிருந்து அறிவு பெறுபவர் அல்ல. ரங்கா அவர்கள் கூறியது போல் தமது கொள்கை தவறு என்று தெரிந்தால் மாற்றிக் கொள்ளும் தைரியமும், துணிச்சலும் பெற்றவர் அல்ல! 'மோகம் முப்பது நாள்' என்பார்கள். நேருஜிக்கு சோஷலிஸத்திடம் பால்யத்திலேயே மோகம் ஏற்பட்டதாம். இத்தனை நாட்களாகியும் அந்த மோகம் அவரை விடவில்லை.

என்ன சேதி?

இதோ ஒரு சான்று


மத்தியப் பிரதேசத்திலுள்ள ராய்பூர் என்ற ஊரில் அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். இந்த மகாநாட்டுக்குப் பல ராஜ்யங்களிலிருந்தும், மத்திய சர்க்காரிலிருந்தும் வந்திருந்த மந்திரிகள் மத்தியப் பிரதேச ராஜ்ய சர்க்காரின் விருந்தினர்களாக மூன்று நாட்கள் தங்கியதன் விளைவாக, ரூ. 22,000 செலவாயிற்றாம். அதாவது மந்திரி ஒருவர் ஒரு நாள் தங்க ரூ. 136 வீதம் செலவழித்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சி. அந்தக் கட்சியின் மகாநாட்டுக்காக வந்த மந்திரிகளுக்கு, ஒரு ராஜ்ய சர்க்கார் செலவழிப்பானேன்? சர்க்கார் செலவு என்றால், பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து செலவு என்று பொருள். அதுவும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ. 136 பிடித்திருக்கிறது என்றால் எவ்வளவு கண்மூடித்தனமாகச் செலவழித்திருக்கிறார்கள் என்பதை ஊகித்தறியலாம். இப்படிச் செலவழித்தவர்கள்தான் ஏழைகளுக்காகக் கண்ணீர் விடும் ஏழைப் பங்காளர்கள்!

சர்க்கார் இலாகாக்கள்

நிலக்கரி போதிய அளவு வந்து சேராததால், சிந்திரி தொழிற்சாலையில் ரசாயன எரு உற்பத்திப் பெருக்கம் குறைந்துவிட்டது என்று சொல்லப்பட்டது. நிலக்கரி ஏன் விநியோகமாகவில்லை என்று ஆராய்ந்தபோது, போதிய ரயில்வே வாகன் கிடைக்காததுதான் காரணம் என்று கூறப்பட்டது. இப்பொழுது ரயில்வே இலாகா, நிலக்கரி இலாகா கேட்ட ரயில்வே வாகன்களைக் கொடுத்ததாகக் கூறுகிறது.

ஆனால் உண்மை நிலை இரண்டு இலாகாக்களின் கூற்றுக்களுக்கும் புறம்பாக உள்ளது. போதிய நிலக்கரி உற்பத்தியாகாமையே பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதற்கு உண்மைக் காரணம். மற்றத் தொழில் துறைகளில் உற்பத்தி பெருகியுள்ளது என்று புள்ளி விவரங்களைக் காட்டி மக்களை மயக்கும் சர்க்காரே, நிலக்கரி விஷயத்தில் உற்பத்தி குறைவு என்பதை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இதில் மட்டும் உற்பத்தி ஏன் குறைந்தது? நிலக்கரிச் சுரங்கங்களில் ஒரு பகுதியைச் சர்க்கார் தங்கள் பொறுப்பிலேயே வைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தச் சுரங்கங்களில், தனியார்த் துறைச் சுரங்கங்களில் நிலக்கரி வெட்டி எடுப்பதுபோல் திறமையாகச் சர்க்காரால் வெட்டி எடுக்க முடியவில்லை. தங்களால் முடியாவிட்டாலும், சாமர்த்தியமாகத் தொழில் புரியக் கூடிய தனியார்த் துறையினருக்கு, இச் சுரங்கங்களில் நிலக்கரி எடுக்கும் உரிமையை விட்டுக் கொடுக்கவாவது செய்யலாமே; அதற்கும் அவர்கள் தயாராக இல்லை. தன்னாலும் முடியாது; மற்றவர்களையும் செய்ய விடமாட்டார்கள் என்ற நிலைமையில் நிலக்கரித் தொழிலைக் காங்கிரஸ் அரசாங்கம் நடத்துகிறது. நிலக்கரிப் பற்றாக்குறையினால் மற்றத் தொழில்கள் வாடினால், அதைப் பற்றி அவர்கள் கவலையுறவில்லை.



சேதி தெரியுமா?
சாமா
தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு வெளியே வந்தால் போதும் என்றேனே! நீங்கள் ஒரு வருஷத்திற்கு முன்னாலேயே வந்து விட்டீர்களே!
ஒரிஸ்ஸா கூட்டு மந்திரி சபை
கணதந்திர பரிஷத்
காங்கிரஸ்
கடைத் தேங்காய்
புத்தர்காத் ஆலயம்
வழிப் பிள்ளையார்
கம்யூனிஸ்ட்
புத்தர்காத் ஆலயத்தை சீனா கேட்கலாம் என்று கம்யூனிஸ்டுகள் சொல்லி வந்ததாக உ.பி. மந்திரி சாண்பிரக் கூறினார்.
ஏனய்யா, அம்மா தண்ணீரை விரயமாக்குகிறீர்கள்? எங்களுக்குக் கொடுத்தாலும் உண்டு.
மிஞ்சினால் தருகிறோம் என்றோம் மிஞ்சாமல் பார்த்துக் கொள்ளுகிறோம்.
தமிழர்
ஆந்திரர்கள்

காங்கிரஸின் பரிதாப நிலை

பணமும் பதவியுமே காங்கிரஸின் மிதப்புக் கட்டைகள்

ராஜாஜி

காங்கிரஸ் கட்சி இன்று பதவியில் அமர்ந்திருக்கிறது. அந்தக் கட்சியினர் தங்களுக்கு வேண்டியவர்கள் என்று பொறுக்கியெடுத்த சில வியக்திகளுக்கு அவரவர்களுடைய சக்திக்குத் தகுந்தபடி வியாபாரத்திலும் மற்றத் தொழில்களிலும் ஏகபோக உரிமைகளையும் சலுகைகளையும் விற்றுத் தமது கட்சியின் பலத்தைப் பெருக்கிக் கொள்வதே இந்த ஆண்டின் வேலை என்ற சங்கல்பம் செய்து கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். 'கட்டுப்பாட்டுப் பொருளாதாரம்' 'சோஷலிச முறைப் பொருளாதாரம்' என்ற போர்வையில் இந்த வேட்டை நடைபெற்று வருகிறது.

கண்ட்ரோல்கள் மிகக் கெடுதல். அவற்றினின்று நன்மை விளையும் என்று தவறாகச் சிலர் நினைக்கிறார்கள். அப்படித் தவறிப் போய் ஏதோ நன்மை விளைந்தாலும், முடிவில் விளையும் தீமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக அற்பமாகவே இருக்கும். அதிலும் இந்தக் கண்ட்ரோல் முறைகளை, ஆளும் கட்சியிலிருப்பவர்களுக்குச் சாதகமாகவும், எதிர்க்கட்சியிலிருப்பவர்களுக்குப் பாதகமாகவும் உபயோகிக்கும் போது அவை கலப்படமற்ற அப்பட்டமான கொடுமையாகவே முடிகிறது!

மக்கள் நான் சொல்வதுதான் உண்மை யென்று அறிவார்கள். ஒவ்வொருவரும் நமது பொருளாதாரம், யுத்தத்துக்குப் பிறகு ஏற்பட்ட இந்த லைசென்ஸ் கண்ட்ரோல் பிசாசினின்று விடுதலை பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தப் பர்மிட் லைசென்ஸ் ஆட்சி ஒழிய வேண்டும் என்று விரும்புகிறார்கள். மிகச் சிரமமான இந்த வேலையைச் செய்து முடிப்பது என்று நான் கங்கணம் கட்டிக் கொண்டு இறங்கியிருக்கிறேன். ஆனால் நான் என்னத்தைக் காண்கிறேன்? இந்தக் கொடுமையை அப்புறப்படுத்துவது கடினமாக இருப்பதோடன்றி, இந்தக் கொடுமைக்குட்பட்டு அவதிப் படுபவர்களும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்யப் பயப்படுகிறார்கள். ஏனெனில், அதன் விளைவாக, உடனடியாகவே காங்கிரஸ் கட்சியினர் தம்மை நிர்மூலமாக்கி விடுவார்களோ என்று அஞ்சுகிறார்கள். என்னுடைய தர்ம யுத்தம் வெற்றி பெறும் என்பது அவர்களுக்கு நிச்சயமில்லை. தோற்றுவிட்டால் விளையக் கூடிய ஆபத்தை நினைத்து, 'தோற்கும் கட்சியில் சேருவானேன்?' என்று அஞ்சுகிறார்கள். கடவுள் அவர்களுக்குப் போதிய தைரியத்தை ஊட்டுவாராக! அவன் அருளினால்தான் அவர்களுக்குத் தைரியம் ஏற்பட வேண்டும். சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், மிகப் பயங்கரமான எதிர்ப்புக்களை யெல்லாம் சமாளித்து அறம் வென்றிருக்கிறது; அவை யெல்லாம் பகவானுடைய அருளினால்தான் சாத்தியமாயிற்று என்பது நமக்குத் தெரியும்.

காங்கிரஸ் கட்சி மூன்று ஆயுதங்களைப் பிரயோகித்து, வெற்றி பெற்றுவிட முடியும் என்று எண்ணுகிறது.

1. தங்களிடம் சரணாகதி அடைந்தவர்களிடம் சுட்டி முனையைக் காட்டி, திரட்டும் பெரிய தேர்தல் நிதி. 2. இந்த நாடு ஜனநாயக ஆட்சி முறைக்கு அனுபவப்பட்டதல்ல. அதிகாரத்திலிருப்பவர்களுக்குத் தலை வணங்கி மரியாதை செலுத்தப் பழக்கப்பட்டது. ஆகவே, அதிகாரத்திலிருப்பதால் கிடைக்கும் அபரிமிதமான செல்வாக்கை உபயோகப் படுத்தி வெற்றி பெற்றுவிடலாம் என்று காங்கிரஸ் கட்சி நினைக்கிறது. 3. ஆளும் கட்சிக்கு எதிராகப் பல கட்சிகள் இருப்பதனால் வோட்டுக்கள் சிதறிப் போய் ஆளும் கட்சி மீண்டும் பதவிக்கு வர நல்ல வாய்ப்பிருக்கிறதுஎன்றும் எண்ணுகிறது.

எதிர்க் கட்சிகள் விழித்துக் கொள்ளும் என்று நினைக்கிறேன். எதிர்க்கட்சிகள், ஒன்றோடொன்று சண்டையிட்டு நிற்பதின் மடமையைச் சீக்கிரம் உணரும் என்று நினைக்கிறேன். தேர்தலில் முக்கோணப் போட்டி ஏற்படவிட்டு, நடுவில் காங்கிரஸ் வெற்றியடைந்து தப்பித்துப் போக வழி விடலாகாது என்பதை உணர்வார்கள்.

பொருமையின் அடிப்படையிலும், செல்வம் எப்படி உற்பத்தியாகிறது என்பதை உணராத ஞான சூன்யத்தின் அடிப்படையிலும் காங்கிரஸின் சோஷலிஸம் அமைந்திருக்கிறது என்பதைப் பொதுமக்கள் சீக்கிரம் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் கூறும் சோஷலிஸத்தை உலகிலுள்ள ஒவ்வொரு நாடும், கட்சியும் ஒதுக்கி விட்டது. காங்கிரஸ் சோஷலிஸம் உண்மையில் சோஷலிஸமல்ல. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஏகபோக உரிமைகளும் சலுகை

களும் அளிக்க, காங்கிரஸ் இந்த சோஷலிஸப் போர்வையை உபயோகித்து வருகிறது. உண்மையான கட்டுப்பாடும் திட்டமும் கொண்ட பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், ஆளும் கட்சியில் இன்று காண்பதை விட அதிக நாணயமும், சீலமும், நேர்மையும் இருக்கவேண்டும். பொருள் உற்பத்தி செய்பவர்களிடையேயும், சுதந்திரப் போட்டி யுணர்ச்சியை உண்டாக்கி விட்டால், பொது மக்கள், அதாவது அப்பொருளை வாங்கி உபயோகிப்பவர்கள், யார் தகுதி வாய்ந்தவர்கள் என்று தீர்மானிப்பார்கள். அந்த உரிமை அவர்களுக்குத் தான் உண்டு. பதவியிலிருந்து கொண்டு, பர்மிட்டுகளையும் லைசென்சுகளையும் விற்கும் கோஷ்டிக்கல்ல!

பயத்தை உதறி, விடுதலையடைய உறுதி பூண்டால்தான் விமோசனம். காங்கிரஸ் மீண்டும் ஒரு முறை வெற்றிபெற்றால், அதன் அகம்பாவம் பன்மடங்காகி, கலப்படமற்ற கொடுங்கோலாட்சி நிர்ப்பயமாக நடத்திக்கொண்டு போகும். சுதந்திர வாழ்வு எதிர்காலத்தில் ஏற்படுவதற்கு வழியே இல்லாமற் போகும். அவர்கள் தங்களுக்கு வேண்டாதவர்களை அநீதி முறையில் எப்படிப் பழிவாங்கிக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்பதைப் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். அந்த அநீதி தேர்தலின்போது, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வேலை செய்யும். ஜனநாயக ஆட்சிநிலவும் நாடுகளில் இருக்கும் சுதந்திரத்துக்கு முற்றும் மாறுபட்ட, இந்தப் பழி வாங்கும் வழக்கம் ஒழிந்து போக வேண்டும். தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில், தங்களுக்கு வேண்டாதவர்களுக்குக் கொடுமை இழைப்பது லாபகரமாக இராது. பொதுமக்கள் அதை ஆதரிக்க மாட்டார்கள். அதனாலேயே வோட்டுக்களை இழப்பார்கள். இதைக் காங்கிரஸ் மேலிடத்தார் நன்கு அறிவார்கள்.

கடைசியாகக் குறிப்பிட வேண்டியது பண பலம். பொது மக்களுக்கு என் தளராத நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காங்கிரஸ்காரர்கள், உருட்டியும் மிரட்டியும் ஏமாற்றியும் திரட்டும் பணத்தைக் கொண்டு வெற்றி பெற ஒருநாளும் கடவுள் அனுமதிக்க மாட்டார். பார்லிமெண்ட் தேர்தல்களில் ஜெயிப்பதற்குப் பணபலம் இருந்தால்தான் முடியும் என்ற நிலை ஏற்படுமானால் இந்த உலகம் வாழத் தகுந்ததல்ல. பணம் ஆறாகப் பெருகி ஓடட்டும். அக்கிரமமான முறையில் சேர்த்த பணம் சீக்கிரம் மக்களிடம் பரவிக் கரைந்து போவதே நலம். அந்தப் பணம் உதவாது. அது விரைவில் பொறாமையையும் பூசல்களையும் வளர்க்கும். மக்களோ, காங்கிரஸின் ஊழல் மலிந்த நிர்வாகத்தையும், வாக்களித்த நன்மைகள் பொய்யாவதையும் கண்டு வெறுத்து, காங்கிரசுக்கு எதிராக வோட்டளிப்பார்கள்.

வோட்டர்களை வோட்டுச் சாவடிக்கு யார் அழைத்துச் சென்றாலும், எந்த விதமான வாகன வசதி அளித்தாலும், எத்தகைய சிறந்த உணவு பானம் முதலியவை அளித்தாலும், லஞ்சம் கொடுத்தாலும், இந்தத் தடவை மக்கள் ஆளும் கோஷ்டிக்கு எதிராகவே புயல் போல் சென்று வோட்டளிப்பார்கள் என்று எண்ணுகிறேன். திரட்டிய பணம் வீண் செலவேயாகும்.

காங்கிரஸ் கட்சி பண பலத்தையே முற்றும் நம்பியிருப்பதும், பதவிகளை மந்திரிகள் தேர்தல் காலங்களிலும் விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருப்பதும், எதிர்க் கட்சிகள் ஒன்று சேராமலிருக்க வேண்டும் என்று கவலைப்படுவதும், காங்கிரஸ் தர்ம நியாயமான முறையில் வெல்ல முடியாது என்பதை அதுவே ஒப்புக் கொள்கிறது என்பதற்குச் சான்றுகளாகும்.

நான் எண்ணுவது தவறாக இருக்கலாம். ஆனால் நான் 'சத்தியமேவ ஜயதே' என்ற கோட்பாட்டில் உறுதியான நம்பிக்கை கொண்டவன்; கடவுள் ஒருவன் உளன், அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற நம்பிக்கை கொண்டவன். அந்தச் சக்தியை நம்பி, வாழ்விலும் தொழிலிலும் மக்கள் சுதந்திரமாக இயங்கச் சுதந்திரப் போர் நடத்துவோம்.

நமது விடுதலைப் போராட்ட காலத்தில் இந்தியாவில் நீண்ட நாட்கள் தங்கியிருந்த ஒரு நண்பர் இப்போது இத்தாலியிலிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். நான் அருள் நெறியைக் கடைப் பிடித்தவன் என்றும் அர்த்தமற்ற சமத்துவ உணர்ச்சியைப் பொய் என்று அறிந்தவன் என்றும் எழுதியிருக்கிறார். அவர் சொல்லுவது முற்றும் சரி. காங்கிரஸ் சொல்லும் சமப்படுத்தும் சோஷலிஸம் முற்றும் தவறான கொள்கை; ஒரு மோசடி; வெறும் தேர்தல் தந்திரம். வோட்டர்களைக் கழுதையாகப் பாவித்து, காங்கிரஸ் அதன் முதுகின் மேல் உட்கார்ந்து சோஷலிஸம் என்ற முள்ளங்கியை முன்னால் நீட்டி ஆசை காட்டி ஓடச் செய்கிறது.


செல்வம் பெருக்குவதற்குரிய வழி என்னவெனில் காங்கிரஸ் வகுத்துள்ள சோஷலிஸத்துக்கு முற்றும் எதிர்மாறான வழி. செல்வம் பெருக்க மக்களிடையே ஊக்கமும் உற்சாகமும் வேண்டும் என்பதையோ, மூலதனம் வேண்டும் என்பதையோ, சிக்கனமான நிர்வாகம் வேண்டும் என்பதையோ காங்கிரஸ் சோஷலிஸம் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அதனால் காங்கிரஸ் கட்சி தான் கைக்கொண்ட சோஷலிஸம் வாயிலாகத் தங்களுக்கு வேண்டிய பணக்காரர்களுக்கு, பர்மிட்டுகளையும் லைசென்சுகளையும் சலுகைகளையும் விற்பனை செய்து அதிக பணக்காரர்களாக்குகிறது.

காங்கிரஸ் ஆட்சி வகுத்துள்ள காரிய சாத்தியமற்ற திட்டங்களை நிறைவேற்ற காகிதப் பணத்தை இஷ்டம் போல் அச்சடித்துப் புழங்க விடுவதால் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்து ஏழைகள் பரம ஏழைகளாக்கப் படுகிறார்கள். ஆகவே காங்கிரஸினுடைய சோஷலிஸம் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்குப் பதில் அதிகப்படுத்தியே வருகிறது.

இவ்விருவரிடையே வர்க்க பேத வெறுப்பும் துவேஷமும் வளர்த்து, பொருளாதார முறையில் மட்டுமல்ல, ஆத்மீக முறையிலும் தீங்கு விளைவித்து வருகிறது.

தனிப்பட்ட முதலாளிகள் தொழில்களில் ஈடுபட்டு, பொருள் உற்பத்தி செய்வதைக் காட்டிலும், தனிப்பட்ட வியாபாரிகள் அப் பொருள்களை விநியோகம் செய்வதைக் காட்டிலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் திறம்படச் செய்வார்கள் என்று காங்கிரஸ் நம்பித் தொழில்களை நடத்துவதைப் போல், தொழிலாளர்களுக்கும் மற்றப் பொது மக்கள் அனைவருக்கும் ஹானியும் நஷ்டமும் விளைவிப்பது வேறில்லை. ஏற்கனவே சர்க்கார் நிர்வாக ஸ்தாபனங்களில் நஷ்டமும் ஹானியும் விளைந்துள்ளன. இவையெல்லாம் அந்நிய உதவி, அந்நியக் கடன்கள், சர்க்கார் கணக்கு வைக்கும் முறைகள் ஆகியவை மூலம் மூடி மறைக்கப்பட்டுள்ளன. அந்நிய நாடுகளின் பெரும் உதவியை நம்பியே வாழ வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் போன்ற இழிநிலை வேறு கிடையாது.

விடுதலைக்குப் பிறகு, காந்தி முறையை விட்டு விட்டு மூடத்தனமான பேராசை அடைந்து பெரும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று தீர்மானித்ததின் விளைவு இது. பொருள் வகையில் நாம் அடைந்த லாபம்தான் என்ன என்று யோசனை செய்து பார்த்தால், மிகப் பரிதாபகரமாக இருக்கும். எந்த வல்லரசுக் கோஷ்டியிலும் சேராத வெளிநாட்டுக் கொள்கை என்று சொல்லிக் கொண்டு, முழுக்க முழுக்க வெளிநாட்டு உதவியையே நம்பி வாழ வேண்டிய நிலையைப் பார்க்கும்போது நமது கொள்கை பற்றி அவமானமாக இருக்கிறது.



ஆவடிக்கு ஒரு பாலிடெக்னிக்

நாட்டின் தொழில்வளம் பெருக வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் தொழிலைத் திறம்பட நடத்துவதற்குத் தேவைப்படும் ஆட்களும். நுணுக்கக் கலை பயின்ற இன்ஜினியர்கள் மட்டுமின்றி, பயிற்சிபெற்ற தொழிலாளிகள் கணக்கின்றித் தேவைப்படுகின்றனர். இவர்களுக்குப் போதிய பயிற்சி அளித்து ஆண்டுதோறும் அனுப்ப வேண்டுமானால் மாவட்டத்துக்கு மாவட்டம் தொழிற் கல்வி நிலையங்கள் வேண்டும், தொழிற் பள்ளிக்கூடங்கள் வேண்டும். ஒரு பாலிடெக்னிக் இருந்தால் பத்துத் தொழிற் பள்ளிகள் வேண்டும்.

இதை உணர்ந்த தொழிலதிபர்கள் ஆங்காங்கே பாலிடெக்னிக் என்ற தொழிற் கல்வி ஸ்தாபனங்களை நிறுவிவருகின்றனர். இந்த வரிசையில் ஒன்று சென்ற பிப்ரவரி 17ம் தேதியன்று ஆவடியில் திறந்து வைக்கப்பட்டது.

நகரத்தார் சமூகத்துக்கு ஒரு திலகம் போல் விளங்கிய காலஞ்சென்ற திவான் பகதூர் அ. மு. முருகப்பச் செட்டியாரின் ஞாபகார்த்தமாக, ஏ. எம். எம். தரும கைங்கரிய ஸ்தாபனத்தின் ஆதரவில் ஆரம்பித்த இப் பாலிடெக்னிக் இரண்டு ஆண்டுகளாகவே ஆவடியில் ''ட்யூப் ப்ராடெக்ட்ஸ்'' கம்பெனியாரின் கட்டடப் பகுதியில் செயலாற்றி வருகிறது. அதற்கென்று சொந்தக் கட்டட நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டு இப்போதுதான் அது பூர்த்தி அடைந்தது. 31 ஏக்கர் நிலப்பரப்பில் 12 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்தப் பாலிடெக்னிக்கில் இப்போது சிவில், மெக்கானிகல், எலெக்டிரிகல் பகுதிகளில் மட்டுமே போதனை முறைகள் இருந்தாலும் போகப்போக மற்றத் துறைகளிலும் பாடங்கள் போதிக்கப்பட்டு ஒரு சிறந்த, எடுத்துக்காட்டான பாலிடெக்னிக்காக இது வளர வேண்டும் என்று வந்திருந்தவர்களை வரவேற்ற சென்னைத் தொழிலதிபர் திரு ஏ. எம். எம். முருகப்பச் செட்டியார் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆவடியையும், அம்பத்தூரையும் தொழில்மயமாக மாற்றிவிட்ட தொழில் பிரமுகர்களில் திரு ஏ. எம். எம். முருகப்பச் செட்டியாரை முதலாவதாகச் சொல்ல வேண்டும். டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை, ஸர் ராமஸ்வாமி முதலியார் உயர் பள்ளி, ட்யூப் ப்ராடக்ட்ஸ் தொழிற்சாலை, ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் தொழிற்சாலை, இவை அவருடைய முயற்சியினால் உருவானவை. பல சிறிய தொழிற்சாலைகளும் உருவாகி வருகின்றன. சீக்கிரத்தில் நவீன முறையில் உள்ள ஒரு வைத்தியசாலையும் ஏற்படவிருக்கிறது.

இத்தகைய தொழில் முன்னேற்றம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும் தனியார்த் தொழிலதிபர்களின் முயற்சிகளைப் பாராட்டி, அவர்கள் முழு உற்சாகத்துடன் செயல் புரிவதில் தடைகளாக இருக்கும் இடையூறுகளை அகற்றி வைப்பது மிகவும் அவசியம். ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு நாட்டு நடப்புகளைப் பற்றிய அறிவும் தொழில் அனுபவமும் இல்லாதவர்கள் காகிதக் கணக்குப் போட்டுத் திட்டம் வகுத்து இன்னல்கள் விளைப்பது உற்சாகத்தை வளர்க்காது என்ற கருத்தை இந்த விழாவுக்குத் தலைமை வகித்த ஸர் ஏ. ராமஸ்வாமி முதலியார் விளக்கினார்.

இப் பாலிடெக்னிக்கைத் திறந்து வைத்த டாக்டர் எம். எஸ். தாக்கர், மந்திரி திரு வெங்கடராமன், ஸர் ராமஸ்வாமிமுதலியார், திரு ஏ. எம். எம். முருகப்பச் செட்டியார் முதலியோரையும் படங்களில் காணலாம்.









60

உருகுமால் நெஞ்சம் உயிரின்
பரமன்றி:
பெருகுமால் வேட்கையும்; என்
செய்கேன் தொண்டனேன்-
தெருவு எல்லாம் காவிகமழ்
திருக்காட்கரை
மருவிய மாயன்-தன் மாயம்
நினைதொறே?

காவி—நீலோத்பல மலர்.

திருக்காட் கரையில் எழுந்தருளியிருக்கிற மாயனுடைய மாயங்களை நினைத்து நெஞ்சம் உருகுகின்றது. உயிரால் பொறுக்க முடியாத ஆசை பெருகுகிறதே. அடியேன் என்ன செய்வேன் என்கிறார்.

'ஆல்' என்பது துக்கத்தின் மிகுதியைக் காட்டுகிறது.

மாயன்—குணங்களினாலும் அழகினாலும் பக்தர்களைப் பிச்சு ஏற்றவல்ல கோவிந்தன்.

நினைதொறே—நினைக்கும்தோறும்.

நினைதோறும், சொல்லும்தோறும்
நெஞ்சு இடிந்து உகும்;
வினைகொள் சீர் பாடிலும் வேம்
எனது ஆர் உயிர்;
சுனைகொள் பூஞ்சோலைத் தென்
காட்கரை என் அப்பா!
நினைகிலேன் நான் உனக்கு
ஆட்செய்யும் நீர்மையே.

சுனை—தடாகங்கள்.

நெஞ்சு இடிந்து உகும்-மனமானது கட்டுக் குலைந்து நீராய்க் கரைகிறது.

வினை கொள்சீர்—பாபங்களைப் போக்கும் உன் கல்யாண குணங்கள்.

பாடிலும் வேம் எனது ஆருயிர்—பாடும்போதெல்லாம் என் உயிர் வேகா நிற்கிறது.

திருக்காட்கரை அப்பனே! உன் குணங்களை நினைக்கும் போதும் எடுத்துச் சொல்லும் போதும் என் உள்ளம் கட்டழிந்து நீராகக் கரைகிறது. உன்னைப் பாடும்போது என் உயிர் வேகா நிற்கிறது. நான் எப்படி அடிமை செய்யப் போகிறேன் என்கிறார்.

என் உயிரை எரிக்கிறது என்று ஆழ்வார் சொன்னதற்கு ஈடு வியாக்கியானக்காரர் எரிக்கப்படாதது என்று உயிரைப் பற்றிக் கீதை சொன்னது நெருப்புக்கு, பகவானுடைய குணங்களுக்கு அல்ல என்று அழகாகச் சொல்லுகிறார். நெருப்பு எரிக்காததையும் பகவானுடைய குணங்கள் எரிக்கும் என்றபடி.

நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப்
புகுந்து, என்னை
ஈர்மை செய்து என் உயிர் ஆய்,
என் உயிர் உண்டான்;
சீர்மல்கு சோலைத் தென் காட்கரை
என் அப்பன்,
கார்முகில் வண்ணன்-தன் கள்வம்
அறிகிலேன்.

என் அப்பனுடைய வஞ்சனையை நான் அறிய முடிய வில்லை—என் நெஞ்சினை வஞ்சித்து என்னுள் புகுந்து என்னைத் தன் குணங்களாலே ஈடுபடுத்தி எனக்குத் தாரகனாய் என் உயிரை உண்டு அனுபவித்து விட்டான்.

நீர்மையால்—தன் கல்யாண குணங்களால். *ஈர்மை செய்து*—பிளந்து ஈடுபடுத்தி. *என் உயிர் உண்டான்*—ஆய்ச்சியர் கடைந்தெடுத்து வைத்திருந்த வெண்ணெயை உண்டது போல் என் உயிரை உண்டான். என் உயிரை அவனுக்கே உரியது என்று கொடுத்து விடும்படி செய்து விட்டான்.

அறிகிலேன்-தன்னுள் அனைத்து
உலகும் நிற்க,
நெறிமையால் தானும் அவற்றுள்
நிற்கும் பிரான்,
வெறி கமழ் சோலைத் தென்
காட்கரை என் அப்பன்,
சிறிய என் ஆர் உயிர் உண்ட
திரு-அருளே

அறிகிலேன் என்ற முதல் மொழியைத் திருஅருள் என்ற பாசுரத்தின் கடைசிச் சொல்லுடன் சேர்த்து,

ராஜாஜியின் வட இந்தியப் பயணம்

சுதந்திரக் கட்சி வேலையாக ராஜாஜி மார்ச் மாதம் மூன்று வாரங்கள் வட இந்தியாவில் பிரயாணம் செய்கிறார். பிப்ரவரி 28-ந் தேதி சென்னையை விட்டுப் புறப்பட்டு பம்பாய்க்குச் செல்கிறார். அங்கிருந்து டில்லிக்குச் சென்று மார்ச் 4, 5 தேதிகளில் நடக்கும் சுதந்திரக் கட்சி மத்திய நிர்வாகக் 'குழு கூட்டத்தில் கலந்து'கொள்ளுகிறார். பின்னர் பிகார் சுதந்திரக் கட்சி மகாநாட்டை டால்சிங்சராயில் திறந்து வைப்பார். பிறகு உத்தரப் பிரதேசம், வங்கம் முதலிய ராஜ்யங்களுக்கும் செல்வார்.

திரு அருளை அறிகிலேன் என்று அமைத்துப் படிக்கவும். பகவானுக்குள் எல்லா உலகங்களும் தங்கி நிற்கின்றன. அவ்வுலகத்து உயிர்களுக்குள்ளும் பொருள்களுக்குள்ளும் தப்பாதபடி எல்லாவற்றிலும் அவன் நிற்கிறான். இத்தகைய பிரான் சிறியேனுகிய உன் உயிரை உண்ட திருவருளை அறிகிலேன்.

அறிகிலேன் – உகப்பாலே உண்டானோ அல்லது இவ்வுயிரை இரண்டற அழிக்கச் செய்தானோ தெரியவில்லை.

திரு-அருள் செய்பவன் போல,
என்னுள் புகுந்து,
உருவமும் ஆர் உயிரும் உடனே
உண்டான்—
திருவளர் சோலைத் தென் காட்கரை
என் அப்பன்,
கருவளர் மேனி என் கண்ணன்
கள்வங்களே !

என் உருவம் என் உயிர் இவ்விரண்டையும் சேர்த்து உண்டான். பகவானுக்குள் என் ஆன்மா இரண்டறக் கலந்துவிட்டது என்கிறார்.

கள்வங்கள் – முதலில் ஒன்றாய் முடிவில் மற்றொன்றாய் இருக்கும் செயல்கள். அடிமை கொள்வானைப் போல் வந்து என் உயிரையும் உடலையும் உண்டானுதலால்.

என் கண்ணன் கள்வம் எனக்குச்
செம்மாய் நிற்கும் ;
அம் கண்ணன் உண்ட என் ஆர்
உயிர்க் கோது இது ;
புன்கண்மை எய்தி, புலம்பி
இராப்பகல்
என் கண்ணன் என்று, அவன்
காட்கரை ஏத்துமே.

என் கண்ணனுடைய வஞ்சனைகள் எனக்குச் செவ்வியனவாகவே தோன்றுகின்றன.

அம் கண்ணன் – என் காதலன் கண்ணன்.

அவன் உண்டு மிகுந்த அடிக்கோது மட்டும் இருக்கிறது. அடிக்கோதான இந்த உயிர் கொஞ்சம் அறிவு பெற்று இரவும் பகலும் புலம்புகிறது. "என் கண்ணன்" என்று புலம்புகிறது. புலம்பித் திருக்காட்கரைப் பிரானை ஏத்துகிறது.

அறுக்கும் வினையாயின – ஆகத்து
அவனை
நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தை
யினார்க்கு;
வெறித் தண் மலர்ச் சோலைகள் சூழ்
திருநாவாய்
குறுக்கும் வகை உண்டுகொலோ—
கொடியேற்கே ?

அவனை ஆகத்து நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தையினார்க்கு வினையாயின அறுக்கும் — சர்வேசுவரனைத் தங்கள் உள்ளத்திலே நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற உறுதியிலே ஒருமைப்பாடுடைய அடியார்களுக்கு வினை என்ற பெயருள்ளவை அனைத்தும் அழிந்து போகும்.

வெறி – வாசனை.

வெறித்தண் மலர்ச் சோலைகள் – வாசனையை வீசிச் சிரமத்தைப் போக்கும் மலர்கள் நிறைந்த சோலைகள்.

குறுக்கும் வகை உண்டு கொலோ?- குறுகச் செய்யும் (அணுகச் செய்யும்) வகை உண்டோ ?

'குறுக்கும்' என்பது பிறவினைச் சொல் என்கிறார் ஈடு வியாக்கியானக்காரர்.

கொடியேற்கு – கொடியவனான எனக்கு.

கொடி ஏர் இடைக் கோகனகத்தவள்
கேள்வன்,
வடிவேல் தடம் கண் மடப்பின்னை
மணாளன்,

நெடியான் உறை சோலைகள் சூழ்
திருநாவாய்
அடியேன் அணுகப் பெறும் நாள்
எவை கொலோ?

கோகனகத்தவள் — தாமரையில் வீற்றிருப்பவளான பெரிய பிராட்டி.

பூங்கொடி போன்ற அழகிய இடையை யுடைய பிராட்டியின் கணவன்.

வேல் போன்ற விசாலக் கண்களை யுடையவளும் மடப்பத்தையுடைய வளுமான நப்பின்னையின் மணாளனுமான திருமால்.

மடப்பம்—பெண்களின் உயர்ந்த குணம்.

நெடியான் உறை சோலைகள் திருநாவாய் — நெடியான் உறையும் சோலைகள் சூழ்ந்த திருநாவாய்.

மணாளன் மலர் மங்கைக்கும் மண்
மடந்தைக்கும்;
கண்ணாளன், உலகத்து உயிர்.
தேவர்கட்கு எல்லாம்;
விண்ணாளன் விரும்பி உறையும்
திருநாவாய்
கண் ஆரக் களிக்கின்றது இங்கு
என்று கொல், கண்டே?

திருநாவாயைக் கண்ணாரக் கண்டு களிப்பது என்றைக்கோ என்கிறார்.

இங்கு — இந்த உலகத்தில், பரமபதத்திலல்ல, இந்தப் பூலோகத்தில்.

கோ ஆகிய மாவலியை நிலம்
கொண்டாய்!
தேவாசுரம் செற்றவனே!
திருமாலே!
நாவாய் உறைகின்ற என் நாரண
நம்பீ!
ஆ ஆ! அடியான் இவன் என்று
அருளாயே.

நிலம் கொண்டாய்—நிலம் கொண்டவனே. தேவாசுரம் செற்றவனே — தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரிலே அசுரர்களை அழித்தவனே!

அருளாது ஒழிவாய்; அருள் செய்து,
அடியேனைப்
பொருளாக்கி, உன் பொன் அடிக்
கீழ்ப்புக வைப்பாய்—
மருளே இன்றி, உன்னை என்
நெஞ்சத்து இருத்தும்
தெருளே தரு தென் திருநாவாய்
என் தேவே!

The following particulars regarding the ownership of the 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication :* Madras
2. *Periodicity of its Publication :* Weekly
3. *Name of Printer & Publisher :* R. Ananthanarayanan

   Nationality : Indian

   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
4. *Name of Editor :* T. Sadasivam

   Nationality : Indian

   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:*

Sri T. Sadasivam, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Srimathi M. S. Subbulakshmi, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri R. Ananthanarayanan, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri K. Rajendran, 1, Fifth St., New Colony, Lake Area, Madras-6. Sri M. P. Kalyanasundaram, 3, Varadarajalu Naidu Road, Madras-8. Sri V. Vaidyanathan, 3, Varadarajalu Naidu Road, Egmore, Madras-8. Sri K. R. Athmanathan, 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10.

1-3-61 *R. Ananthanarayanan*
Publisher

தேவே! அருளாது ஒழிவாய் (அல்லது) அருள் செய்து உன் பொன்னடிக் கீழ் புக வைப்பாய். எதுவாயினும் சரி திருவுள்ளத்தின் படி செய் என்கிறார்.

அடியேனைப் பொருளாக்கி உன் பொன்னடிக் கீழ் வைத்தாலும் சரி, அல்லது அப்படி அருள் செய்யாமல் விட்டாயானாலும் சரி, என் அறிவின் மையைப் போக்கி மருள் இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும் தெருளைத் தருவாயாக என்கிறார்.

மருள் — மயக்கம், அறிவின்மை.

தெருள் — தெளிந்த அறிவு.

தரு — தருக.

அடியேனைப் பொருளாக்கி—" நம்மையும் ஓர் பொருளாக்கி " என்று 'அச்சோவே' பதிகத்தில் மாணிக்கவாசகரும் பாடினார்.

அல்லி மகள்



சோமு

''எல்லாம் வல்ல சித்தர் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட ஒரு தவ யோகமாமுனிவர் இந்த மலைச்சாரலிலே ஒரு பெரிய தவச்சாலை அமைத்துக்கொண்டு புண்ணியம் விளைத்து வந்தார்'' என்று ஒரு கதையை ஆரம்பித்தது ஆலமரத்துக் கிளி! அரச மரத்துக் காகம் ஒன்று, அந்தக் கதையை ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டே எதிரில் உட்கார்ந்திருந்தது.

''சித்தருடைய சீடர்கள் பலர் இந்த ஆலமரத்தின் அடியிலே வந்து நியமங்களோடு கூடிக் கண் மூடி அமர்ந்து, கடுந்தவங்கள் செய்வார்கள். இதனால் மாதம் மூன்று மழை பெய்தது. நாடு செழித்தது. மக்கள் பஞ்சமும் பட்டினியுமின்றி இன்பமாக வாழ்க்கை நடத்தினார்கள்!

''சித்தரின் இந்தப் புனித ஆசிரமத்துக்கு அருகிலே ஒரு பெரிய கானகம். அந்தக் கானகத்துக்கு அருகிலே ஒரு குடிசை. அதில் வேலவன் என்று ஒரு வேடுவன் இருந்தான். தவச்சாலையின் எல்லையில் வன விலங்குகள் வராதபடி இரவும் பகலும் காவல் செய்வதே அவன் வேலை.

''வேடுவ வேலவனுக்கு ஒரு மகள். அல்லி என்று பெயர். ''அல்'' என்றால் இருட்டு என்று சீடர்கள் பொருள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அல்லும் பகலும் அவளுடைய நிறத்தைப் பார்த்தால், கடவுள் அவளைப் படைக்கும்போது இருட்டையே குழைத்து மேனியிலே பூசி யனுப்பினாரோ என்று சொல்லத் தோன்றும்!''

இவ்வாறு கிளி சொன்னதும், காகம் தலையைச் சாய்த்து ஓரப் பார்வையாகக் கிளியைக் கூர்ந்து பார்த்தது! அப்போது கிளி சொல்லும் :

''காக்கையாரே! அல்லி மகளின் நிறம் அப்படி இருந்தது. அதைத்தான் சொன்னேன். நீர் கோபித்துக் கொள்ளாதேயும்!''

''சரி; கதையை மேலே சொல்லும்!'' என்று கரைந்து கனிந்தது காக்கை.

கிளி மேலே சொல்ல ஆரம்பித்தது.

''சித்தரின் ஆசிரமத்துக்கு அருகிலேயிருந்த பூம்புனற் பொய்கையானது காட்டுச் சுனைதான். என்றாலும் சித்தரும் அவருடைய சீடர்களும் நடமாடுகிற சாரலிலே அல்லவா இருந்தது! ஒரு முனிவரின் மனத்தைப் போலத் தெளிவும், அவருடைய பெருங் கருணையைப் போல ஆழமும், அவருடைய சித்தத்தின் நிலையைப் போல் அமைதியும் கொண்டு விளங்கிற்று. அதில் வந்து சேர்கிற ஊற்றுத் தண்ணீர் பய பக்தியோடு வரும்! அதில் நிலைபெற்ற தண்ணீரோ சலனமின்றி மோனமாய் நிற்கும்! அலைகளோ சுழிகளோ ஏதும் கிடையாது!

இப்படிப்பட்ட சுனையிலே மாலை நேரங்களில் குறிஞ்சி நாட்டுக் குறுநில மன்னர்களின் இளவரசர்களும் அரசகுமாரிகளும் படகிலே மிதந்து வருவார்கள். முழு மதி பால் பொழிகிற மோகன இரவுகளில் இயற்கையின் மன்மத எழிலில் வசமாகி, மனப்படகை இன்ப வெள்ளத்திலே

செலுத்தி, வண்ணப் படகுகளிலே விளையாடி வருவார்கள் காதலர்கள்! இந்தக் காட்சிகளைத் தனது குடிசையில் இருந்தவாறு பார்த்து நிற்பாள், அல்லி மகள்! தண்ணீரில் மிதப்பதற்கு ஆயத்தமாகக் காத்திருக்கும் ஒரு பூப்படகு போன்ற பதினாறு வயதுக் கன்னி அவள்.

மலைச் சுனையிலே படகு விளையாட்டில் திளைக்கிற அத்தனை காதலர்களிலும் அல்லியின் கவனத்தைக் கவர்ந்தவர் இருவர்! விக்கிரமசிங்கம் என்ற குறுநிலத்து மன்னவனின் ஒரே புதல்வனான சூரியகுமாரனும் அவனை மாலையிட்ட எழில் மங்கையும்! இவர்கள் இருவரும் பௌர்ணமி இரவுகளில் சுனையின் பரப்பிலே வண்ணப் படகில் மிதந்து செல்வதைப் பார்க்கப் பார்க்க அல்லி மகளுக்கு ஒரு பேருணர்ச்சி உடம்பு முழுதும் அப்படியே பொங்கி ஓடும்!

வேடன் மகளுக்கு இந்த அரச காதலர்களின் கதை நன்றாகத் தெரியும். சூரியகுமாரனை மணந்த அழகுக் கன்னி அரச குடும்பத்தைச் சேர்ந்தவள் இல்லை. அவளுடைய ஒப்பற்ற வனப்பில் மயங்கியே இளவரசன் அவளை மணந்தான் என்றும், அதனால் அரசருக்கும் அவனுக்கும் சில நாட்கள் மன வேற்றுமை இருந்தது என்றும், பிறகு நாளாக நாளாக இந்தச் சுந்தர மங்கையின் அழகுத் திருவிலாசத்தைக் கண்டு கண்டு அரச குடும்பத்திலே அமைதி நிலவியது என்றும் அல்லி கேள்விப்பட்டிருக்கிறாள்! அழகு என்றால் அதன் ஆற்றல் எத்தகையது என்பதை எண்ணி அப்பொழுது அவள் அதிசயித்திருக்கிறாள். பின்னர் இந்தச் சுனையிலே அந்தக் காதலர் இருவரையும் முதன் முதலாகப் பார்த்த நாளிலிருந்து அழகின் வல்லமையை நேருக்கு நேராகவே காணத் தொடங்கினாள் அவள். இப்பொழுது அல்லிக்குப் பொறாமை கூட வந்தது!

நாளாக நாளாக அல்லி மகளின் மன ஆழத்திலே ஒரு விசித்திரமான ஆசை அரும்ப ஆரம்பித்தது. அழகு என்ற ஆற்றல் மட்டும் இருந்துவிட்டால் இளவரசன் என்ன, ஒரு பெரிய அரச பரம்பரையே அதற்கு அடிமையாகி விடுகிறதே; அந்த அரிய ஆற்றலை, அந்த வரப்பிரசாதத்தைக் கடவுள் தனக்கு மட்டும் ஏன் வழங்கவில்லை? — இவ்வாறு எண்ணி ஏங்க ஆரம்பித்தாள் அல்லி என்ற அந்தக் கருநீலக் கன்னி!

இப்படியிருக்கும்போதுதான் ஒரு நாள் மாலை வேடுவத் தந்தை வேலவன் ஒரு கூடையிலே பூவும் பழமும் கொண்டு வந்து அல்லி மகளிடம் கொடுத்தான். தனது அருமை மகளுக்குப் பக்கத்துக் காட்டிலே யுள்ள ஒரு வேடுவர் குடும்பத்தில் திருமணம் பேசியிருப்பதாக அறிவித்தான்! இந்தச் செய்தி அல்லியின் மனத்தை என்னவோ செய்தது. ஒன்றுமே மறுமொழி சொல்லவில்லை அவள்! குடிசையிலே யிருந்த மாடக் குழியில் அந்தக் கூடையைக் கொண்டு போய் வைத்து விட்டு ஒரு மூலையிலே சென்று நீண்ட நேரம் மௌனமாக உட்கார்ந்து விட்டாள் அவள்!

அன்று பௌர்ணமி. வானத்திலே நிலவு எழுந்ததும் அல்லி குடிசையை விட்டுப் புறப்பட்டாள். தெள்ளத் தெளிந்த சுனையை நாடிச் சென்றாள். வழக்கம்போல் அரசப்படகு அதிலே மிதந்து வந்தது. காதலர் இருவரும் ஏதேதோ இன்ப மொழிகள் உரையாடிய வண்ணம் மிதந்து கொண்டிருந்தார்கள். அல்லிக்கு அந்தக் காட்சியைத் தலைதூக்கிப் பார்க்க முடியவில்லை. குனிந்து நின்றாள். சுனையின் தண்ணீரில் தன் நிழல் தெரிந்தது. அதைக் காணவே பிடிக்கவில்லை. விறுவிறு என்று குடிசைக்குத் திரும்பி விட்டாள்!

இரவு முழுதும் படுக்கையில் படுத்துக் கொண்டே பலமாக யோசனை செய்தாள் அல்லி. எல்லாம் வல்ல கடவுள் தன்னை மட்டும் ஏன் இப்படி ஓர் அல்லியாக, ஒரு கன்னங்கரிய காரிகையாகப் படைக்க வேண்டும்? தன்னையும் ஓர் அழகியாக இறைவன் படைத்திருந்தால் தானும் ஓர் அரச குமாரனோடு இந்தப் பௌர்ணமி இரவில் மிதந்து செல்லலாமே—என்றெல்லாம் எண்ணினாள் அவள்! அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

எல்லாம் வல்ல சித்தரை எண்ணிப் பார்த்தாள். கற்களை நவரத்தினங்களாகவும் மரத் துண்டுகளைப் பொற் கட்டிகளாகவும் மாற்றுகிற சித்தர் தனக்கு மட்டும் அருள் செய்வாரானால்? தன்னையும் இந்தப் படகுக் கன்னியைப் போல் அதிரூப சுந்தரியாகச் செய்து விடுவாரானால்? - என்று எண்ணினாள் அவள்!

பொழுது விடிந்ததும் அல்லி மகள் சித்தர் ஆசிரமத்துக்கு வேகமாக நடந்தாள்.

பாதங்களிலே விழுந்து எழுந்திருந்த அல்லியைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார் சித்தர்.

அல்லியின் உதடுகள் படபடத்தன. வெட்கத்தினால் வார்த்தைகள் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டன.

'' காய்ந்து உலர்ந்து போன இந்த மரக் கட்டையினிடத்திலே பேசக்கூட உனக்கு ஏன் இந்தப் புதிய வெட்கம்? சொல்லம்மா, எங்கே வந்தாய் என்று !''

தைரியத்தை வரவழைத்துக் கொள்வது போல் அல்லி மகள் இளவரசனையும் அவனுடைய காதலியையும் தனது மனச் சுனையிலே ஒரு தரம் மிதக்க விட்டுப் பார்த்துக் கொண்டாள். அந்த நினைவுக் காட்சியிலே ஒரு வேகம் வந்து விட்டது அவளுக்கு! அவள் பேசினாள்: '' சுவாமி! கல்லைப் பொன்னாக்கக் கூடிய தங்களுடைய திருக்கரத்தின் அருளை நாடியே வந்திருக்கிறேன். படைப்பிலே ஏற்பட்ட குறையைத் தங்களுடைய தவ வலிமையினால் மாற்றி யருள வேண்டும்!''

சித்தர் சிரித்தார். அல்லியின் மன நிலை அவருக்குப் புரிந்தது!

'' கண்ணே! கவலைப்படாதே. அப்படியே ஆகலாம். ஆனால் அதற்காக அழகுத் தெய்வத்தை நோக்கி நீ தவம் செய்ய வேண்டும். நாளைக் காலையில் சுனையிலே நீராடி விட்டு வருவாயானால் உனக்கு ஒரு மறைமொழியை உபதேசம் செய்கிறேன். ஓராண்டு முயன்றால் சூரியனைப் போன்ற காந்தியும், தாமரை மலரைப் போன்ற மென்மையும் பெறலாம்!''

'' அப்படியே செய்கிறேன், சுவாமி!'' என்று ஒரே வாக்கியத்தில் சொல்லி விட்டுக் குடிசைக்குத் திரும்பினாள் அல்லி!

அன்றிரவும் அவள் தூங்கவில்லை. கற்பனை உலகிலேயே மிதந்தாள். பிறகு தூங்கினாள்.

ஒப்பற்ற அழகு! சூரிய கலசத்திலிருந்து ஒளிப் புனலை யெடுத்து மேனியிலே தெளித்துக் கொண்டது போல் ஒரு பிரகாசம்! தாமரை இதழ்களை முகத்திலே பதித்தது போன்ற ஒரு மென்மை! மானின் விழி! மயிலின் சாயல்! கிளியின் பேச்சு! இத்தனையும் தன்னிடம் கண்டு பெருமிதம் கொள்கிறாள் அல்லி மகள்!

ஒய்யார நடை நடந்து சுனையின் கரையை அடைகிறாள். அங்கே இளங் காதலர் இருவரும், சூரிய குமாரனும் அவன் காதலியும் படகிலே மிதந்து வருகிறார்கள். அல்லி மகள் ஒரு மல்லிகைக் கொடியின் அருகிலே நிற்கிறாள்! பழைய அல்லி யில்லை! ஒப்பற்ற ரூபவதியான அல்லி இப்பொழுது! படகு அவள் நின்ற இடத்துக்கு வந்ததும் அப்படியே நின்றுவிடுகிறது! அரச குமாரன் அல்லியை— அதிரூப வனிதையைக் கூர்ந்து பார்க்கிறான்! அல்லியும் அவனைப் பார்க்கிறாள்! இது என்ன? ஒரு மின்னல் துவள்கிறது சுனையின் தண்ணீர்ப் பரப்பிலே!

மறுநாள். படகில் மிதந்த இருவரும் அல்லி மகள் நின்ற பூங்கொடிக்கு அருகிலே வரும்போது, இருவருக்குள்ளும் ஏதோ தர்க்கம்! இதோ படகு நின்று ஆடுகிறது! இளவரசன் அல்லியைப் பார்த்துக்கொண்டே படகின் துடுப்பை நழுவ விடுகிறான்! பக்கத்திலே யிருந்த காதலி வேகமாக ஒரு கடுஞ் சொல் கூறிவிட்டு நழுவிய துடுப்பைப் பற்றுகிறாள்! படகு நகர்கிறது! இது கண்டு அல்லி மகளுக்கு மனத்தில் ஒரு பெருமிதம், ஒரு வெற்றி யுணர்ச்சி உண்டாகின்றன!

மூன்றும் நாள் மாலை. படகு வருகிறது. பூங்கொடிக்கு அருகிலே வந்ததும் இளவரசனும் காதலியும் சுடுசொற்களைத் தங்களுக்குள்ளே பரிமாறுகிறார்கள். "படகை மேலே செலுத்துங்கள். நிற்காதீர்கள்!" என்கிறாள் அரச காதலி. அவனோ அந்த வார்த்தைகளைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. அல்லி மகள் தன்னுடைய அழகு வெற்றியிலே வாகை சூடி நின்று ஒரு சிறிய புன்முறுவலோடு இளவரசனைப் பார்க்கிறாள்! என்ன ஆச்சரியம்! இவள் நிற்கும் கரையை நோக்கி விரைந்து வருகிறது படகு. என்ன வேகம், என்ன வேகம்! காதலின் வேகமல்லவா அது! அழகுப் படிமமான அல்லி மகளின் பாதங்களிலே வந்து வணங்குவதற்கு விரைவது போலப் படகு தண்ணீரைக் கிழித்துக் கொண்டு 'கிர்' என்று வருகிறது! அவள், அரசனின் காதலி, அவனோடு வாதாடுகிறாள். துடுப்பை மறுபக்கமாக வலிக்கிறாள். அவன் உதறுகிறான். அவள் சீறுகிறாள். அவள் மீண்டும் துடுப்பை இழுக்கிறாள். வெகுண்டு பொங்குகிற காதலி திமிறுகிறாள். அவன் அவள் கையைத் தள்ளுகிறான். என்ன இது! ஏதோ சொல்லிவிட்டுத் திடீரென்று ஒரே வேகத்தோடு ஆழமான சுனையிலே குதித்து விடுகிறாள் இளவரசன் காதலி. சுனையின் நீண்ட கால அமைதி இப்பொழுது ஒரு நொடியிலே கலைகிறது. அழகை உட்கொண்ட சுனையின் புனலானது குமிழிகள் விட்டுச் சுழலும் சுழியுமாகப் பொங்குகிறது! அலைகள் கரையிலே மோத வருகின்றன. இதோ அல்லி நின்ற இடத்தை நோக்கியே தண்ணீர் வேகமாகத் திரை வீசி வருகிறது!

அல்லி மகள் பதறிக் கொண்டு விழித்தாள். கனவுதான்! ஆனாலும் எத்தகைய சுழிகள்! எத்தனை சுழல்கள்!

கண்களைக் கசக்கிக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தாள் அல்லி! சூரியன் உதித்திருந்தான். மாடக் குழியிலே நேற்று மாலை தந்தை கொண்டு தந்த பூவும் பழமும் அப்படியே இருந்தன! சித்தருடைய ஆசிரமத்துக்குச் சென்று திரும்பிய வேகத்தில் கற்பனைப் படகிலே சென்று கனவுச் சுனையிலே இரவு முழுதும் மிதந்து கொண்டிருந்த அல்லியை நோக்கி அந்தப் பூவும் பழமும் பரிகாசம் செய்யாமல் அமைதியாகப் பார்த்தன.

'படபட' வென்று சுனையை நோக்கிப் படர்ந்தாள் அல்லி. புனலிலே மூழ்கி எழுந்தாள். அந்த ஈர உடையோடு சித்தரின் குடிலை நாடி நடந்தாள் அவள்!

"சுவாமி!"

"வந்துவிட்டாயா அல்லி மகளே!" என்று பரிவோடு கேட்டார் எல்லாம் வல்ல சித்தர் பெருமான்!

அல்லி மகள் உடல் முழுதும் தரையிலே படும்படியாக விழுந்து வணங்கினாள்.



"குழந்தாய்! உபதேசம் வாங்கிக் கொள்கிறாயா?" என்று கேட்டார் எல்லாம்வல்ல சித்தர். அவருடைய உதடுகளின் கோடியிலே ஒரு ஞானப் புன்முறுவல் மின்னற் கீற்றுப்போலத் துவண்டது.

"சுவாமி! என்னை மன்னித்தருள வேண்டும்! உபதேசம் பெற வரவில்லை. ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவே வந்தேன். நேற்றே என் தந்தை எனக்குத் திருமணம் பேசி முடித்துவிட்டார். எனக்கு நீங்கள் ஆசி வழங்க வேண்டும்!"

"அல்லி! நீ இந்த உலகில் பிறப்பதற்கு முன்னதாகவே உனக்கு என்று ஒரு குமாரன் ஏற்கனவே பிறந்து விட்டான் அம்மா! நேற்று நீ இங்கே வரும்போது அவனை மறந்திருந்தாய். இன்று நினைவு பெற்றாய். உனக்கு என்னுடைய வாழ்த்து! செந்தாமரைச் செல்விக்கு ஒரு சூரிய குமாரன் இருந்தால், இந்த அல்லிக்கும் ஒரு சந்திரன் உதிக்கிறான் என்பது உலக நியதி!"

கிளி கதையை முடித்தது. மௌனமாக இதுவரையில் கேட்டுக் கொண்டே யிருந்த காக்கை இப்பொழுது சொல்லிற்று:

"கிளியாரே! உம் கதையைக் கேட்டேன். நானுங்கூட உம்மைப் போல் மேனி மினுக்கும், கழுத்தின் ஆரமும், அழகு மூக்கும், இனிய பேச்சும் வேண்டும் என்று ஒரு காலத்தில் ஆசைப்பட்டதுண்டு. ஆனால் இப்பொழுதெல்லாம் அப்படி நினைப்பதில்லை!" என்று கரைந்துகொண்டே பறந்தது காகம்.

வனதேவதையின் கோவிலிலே அப்பொழுது உச்சி காலம்! 'கா கா' என்று கையிலே அன்னத்தை ஏந்திக்கொண்டே காகத்தை வரவேற்றார்கள்!



கண்டேன் ராணியை!

நமது நிருபர்

"கண்டேன் ராணியை" என்றார் நண்பர் அகமும் முகமும் மலர. "நீர் எங்கேயிருந்து ஐயா கிளம்பினீர், திடீரென்று, அனுமாருக்குப் போட்டியாக?" என்று கேட்டேன்.

"நான் ஏனய்யா அனுமாருடன் போட்டி போட வேண்டும்? அந்த அனுமார்தான் என்னோடு போட்டி போடட்டுமே! அவருக்கு இயற்கை பலத்தோடு தெய்வ பலமும் இருந்தது. கடலைக் கடந்து சென்று சீதையைக் கண்டார், ராமனிடம் திரும்பி வந்து 'கண்டேன் சீதையை' என்று பெருமையடித்துக் கொண்டார். எனக்கு இயற்கை பலம் தானுண்டா? அல்லது உம்மைப் போல் பிரஸ் பாஸ் பலம்தான் உண்டா? இத்தனையிலும் ஒழுங்கு முறைகளை 'டிரெஸ்பாஸ்' பண்ணாமலேயே ராணியை நான் பார்த்து விட்டேனென்றால் அந்தச் சாகஸம் உங்கள் அனுமசாகஸத்துக்கு எப்படி ஐயா குறைந்து போய்விடும்?"

சண்டைக்கு வந்து விட்டார் நண்பர். (சண்டை பிடிப்பவர் எப்படி நண்பராக முடியும் என்று கேட்டு விடாதீர்கள்!)

நண்பர் கூறிய தென்னவோ உண்மைதான். சென்னைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் அரசி எலிஸபெத்தை அருகிலிருந்தவாறு அரை நிமிஷ நேரம் பார்க்க அரும்பாடு பட்டவர்கள் அநேகர்.

அவர்களில் பெரும் பகுதியினர் அசலூர்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் காட்டிய ஆர்வத்தை வார்த்தைகளால் விவரித்துச் சொல்வது அசாத்தியம். மவுண்ட் ரோடிலே 'க்யூ'வில் நின்றால்கூட ஒட்டல்களில் சாப்பாட்டுக்கு டிக்கட் கிடைப்பது அரிதாயிருந்தது. பஸ்களில் சில இடமிருந்தாலும் நிறுத்தினால் எங்கே அந்த ஜன சமுத்திரத்தில் நசுங்கிவிடுமோ என்று அஞ்சி நிற்காமலே நேராகப் போய்க் கொண்டிருந்தன. இந்த அசௌகரியங்களை யெல்லாம் பொருட்படுத்தாமல், போலீஸ் பந்தோபஸ்துகளையும் சகித்துக் கொண்டு, பசியென்றும் தாகமென்றும் பாராமல் வெய்யிலில் கால்கடுக்க மணிக்கணக்காக எண்ணற்றவர்கள் நின்றார்கள். முண்டியடித்துக் கொண்டு முன்னால் போகும் முயற்சியில் அடிபட்டு இடிபட்டு மிதிபட்டுத் திணறினார்கள்.

சென்னைவாசிகளோ சென்ற மாதம் பத்தொன்பதாம் தேதி நல்ல சுபயோக சுப தினத்தில் அவரவர்கள் வீட்டிலே வடைபாயஸத்துடன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கையில் சிற்றுண்டிப் பொட்டலம், பிளாஸ்கில் காப்பி சகிதம் சாலை ஓரங்களிலே சௌகரியமான இடங்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பாஸ் வைத்திருந்த அதிர்ஷ்டசாலிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த காலரியில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

"ஸார்! யாரு ஸார் அது?" என்று கேட்டார் பக்கத்தில் இருந்தவர்.

"யாரைச் சொல்கிறீர்கள்?"

"அதோ ராணிக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்படும் பிரமுகர்கள் வரிசையில் நான்காவதாக அமர்ந்திருக்கிறாரே, அவர்தான்!"

"அவரா...? அவரைத் தெரியாது, உங்களுக்கு?"

"தெரியலையே ஸார்!"

"நிஜமாகவா தெரியவில்லை என்கிறீர்கள்? நம்ப முடியவில்லையே ஸார்!"


"உண்மையாகவே தெரியலே ஸார்! யார் அது? கொஞ்சம் சொல்லுங்களேன்!"


'கொஞ்சம் இருங்கள். கேட்டுச் சொல்கிறேன்!' என்று கூற வாயெடுத்தேன். அதற்குள் நம்மூர் திரைப்படக் கதாநாயகி ஒருவர் அந்தப் பக்கமாக நடை பயிலவே, அப்போது ஏற்பட்ட பரபரப்பில் அவரிடமிருந்து தப்பித்துக்கொண்டேன்!

இதற்குள் அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களை ஏற்றி வந்த விமானமும் அரசியின் அந்தரங்க நண்பர்கள் உறவினர்கள் பணியாட்கள் ஆகியோரை ஏற்றி வந்த விமானமும் ஒன்றன் பின் ஒன்றாக வந்து சேர்ந்தன.

சற்று நேரத்துக்குப் பிறகு அரசியின் விமானம் இறங்க வேண்டிய இடத்தில் ஒரு ஜீப் தாறுமாறாகச் சுற்றி அலைவதைக் கண்டதும் 'கபீர்' என்றிருந்தது எனக்கு. அப்புறம் தான் ராணியைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலில் அங்கு வந்து சேர்ந்த ஒரு நாயைத் துரத்தியடிக்கும் நற்பணியில் அந்த ஜீப் ஈடுபட்டிருப்பதைப் புரிந்துகொண்டேன்!

குறிப்பிட்ட நேரத்துக்கு ஐந்து நிமிஷங்கள் முன்னதாகவே — 'முன்னதாகவே வந்திருந்து' என்ற உபசாரச் சொற்றொடர் ராணிக்குத் தெரியுமோ? — பிரும்மாண்டமான பிரிட்டானியா விமானம் அலுங்காமல் நலுங்காமல் அழகாக வந்திறங்கி நின்றது. மூச்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தோம்.












எலிஸபெத் ராணி சென்னையைக்கண்டுகளித்தார், பிப்ரவரி 19, 20, 21 தேதிகளில். அரசியின் விஜயத்தை இங்கே வாசகர்கள் யாவருமே கண்டு களிக்கலாம். 1. விமான நிலையத்தில் எலிஸபெத்தையும், பிலிப் கோமகனையும் கவர்னர் வரவேற்கிறார். 2. முதன் மந்திரியுடன் ராணி கைகுலுக்குகிறார். 3. புகைப்பட ஆல்பத்தைக் கூர்ந்து கவனிக்கிறார் அரசி. 4. பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை ஊழியருடன் உரையாடல். 5. சர்வகலா சாலையின் அன்பளிப்பைத் துணை வேந்தரிடமிருந்து பெறுகிறார். 6. சட்டசபையாளர் அளித்த வரவேற்புக்கு வருகை. 7. பி அண்டு ஸி ஆலையில் பிலிப் கோமகன். 8. பிரிட்டிஷ் தூத












கமிஷனர் அளித்த உபசரிப்பில் ராணி. 9. பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை ஊழியர் ஜாகைக்கு விஜயம். 10. கவர்னர் அளித்த வரவேற்பில் ஸ்ரீமதி கமலா லக்ஷ்மண் அறிமுகம். 11. ஸ்டேடியத்தில் குழந்தைகளுக்கு முகமன் கூறுகிறார். 12. தமது கடைக்குட்டிக்குப் பிறந்ததின வாழ்த்துக்களை அறிவிக்கும் 'கேக்'கை வெட்டி மகிழ்கிறார். 13. பெரம்பூரில் தயாரான ரயில் பெட்டியைப் பார்வையிட்டுத் திரும்புகிறார். 14. விடைபெற்றுச் செல்லும் அரச தம்பதி.











அதோ!

'பளிச்' 'பளிச்' என்று முத்து மாலை ஒளிர, 'பளிச்', பளிச்' என்று காமிராக்கள் இயங்க, சாட்சாத் எலிசபெத் மகாராணியார் விமானத்திலிருந்து வெளிப்பட்டார். கரம் அசைத்து முகமன் கூறினார். கம்பீரமாக இறங்கி நடந்தார். ஆகா! ராஜ நடை, ஹம்ச நடை என்றெல்லாம் சொல்கிறார்களே ஒழிய அவற்றைக் கண்டவர் யார்? அன்று நான் அந்த இரண்டும் கலந்த ராஜஹம்ச— அல்லது ராணி ஹம்ச - நடையைக் கண்டேன்.

தேசிய கீதம் இசைத்தது ராணுவ பாண்டு. நிலைகொள்ளாமல் தவித்தோம். காரணம் காலரியில் உட்கார்ந்திருப்பவர்கள் எழுந்து நிற்க வேண்டாம் என்று உத்தரவு பிறப்பித்திருந்ததுதான். அனைவரும் எழுந்து நின்றால் காலரி சரிந்து விடுமோ என்ற கவலை நியாயமாக இருக்கலாம். ஆனால் தேசிய கீதத்தை அவமதிப்பது அரசியையே அவமதிப்பதற்கு ஒப்பாகுமல்லவா? இத்தனை ஏற்பாடுகளைச் செய்தவர்கள் அந்தக் காலரியையும் உறுதியாக அமைத்திருக்கலாமே?

ராணுவ மரியாதையை ஏற்றுக் கொண்டு அறிமுகப் படலத்தையும் முடித்துக்கொண்டு பத்தே நிமிஷங்களில் ராணி சென்றுவிட்டார் ராஜ்பவனுக்கு. இரண்டு மணி நேரத்துக்கு முன்னதாகவே அங்கு வந்திருந்தோர், இரண்டு மணி பின்னதாகவேதான் வீடு திரும்பினார்கள்! எத்தனை கார்கள், எத்தனை பஸ்கள், எத்தனை வாகனங்கள்! எத்தனை கூட்டம், என்ன நெரிசல்! இவற்றையெல்லாம் நான் தாண்டிக்கொண்டு வருவதற்குள் அரசி நகர்வலம் புறப்பட்டு விட்டார். பாஸ் இருந்தும் எப்படியோ பெயிலாகிவிட்டோமே என்ற துயரத்துடன் கெதீட்ரல் அருகே வந்து நின்றேன். எம்பி எம்பிக் குதித்தேன், ராணி வருகிறாரா என்று பார்ப்பதற்காக. கால்கள் தரையில் பாவாத போது சாலையைப் பார்க்க முடிந்தது. இல்லாவிட்டால் வெறும் தலைகள்தான் புலப்பட்டன.

''அங்கே கொஞ்சம் இடம் இருக்கே!'' என்றான் ஒரு பையன்.

''எங்கே? எங்கே?'' என்று கேட்டவாறே பத்து தலைகள் திரும்பிப் பார்த்தன.

''வேப்பமரத்தின் மேலே!'' என்றான் அந்தப் பையன். அண்ணாந்து நோக்கினேன். அங்கேயும் இடத்துக்குப் பஞ்சம்தான்!

''ராணி எங்கே அப்பா?'' என்று கேட்டது, ஒரு குழந்தை. குழந்தை வாக்கோ, தெய்வ வாக்கோ? சடசட வென்று கரகோஷம் எழுந்தது. குபுக்கென்று பக்கத்தில் ஸ்டாண்டு போட்டு நிறுத்தி வைத்திருந்த ஒரு சைக்கிள் மீது ஏறிக்கொண்டேன்.

அனைவரும் தன்னைக் காண வசதியாகக் கார் ஸீட்டின் முதுகுப் புறத்துக்கு மேல் நல்ல உயரத்தில் அமர்ந்து கழுத்தைச் சுற்றி முத்து மாலையும் அந்த முத்து மாலையுடன் போட்டியிடும் முறுவலுமாகப் பவனி வந்தார் அரசி.

அன்று இரவு சென்னை நகரமே ஒரு சொப்பனபுரியாகக் காட்சி தந்தது. ஆனால் இது நனவு ஆன கனவு! எங்கு பார்த்தாலும் வரவேற்பு நல்கும் வளைவுகள், தோரணங்கள், வண்ண வண்ண விளக்குகள்.

ராஜாஜி ஹாலில் அரசியைப் பேராச்சரியத்தில் மூழ்கடித்தது பெரிய 'கேக்' ஒன்று. அவரது இரண்டாவது மகன் ஆண்டிருவுக்கு அன்று ஆண்டு நிறைவு. அதனை அந்நாட்டவர் பாணியிலே கொண்டாட வசதியாக முன் யோசனையுடன் வைக்கப்பட்டிருந்தது அந்தக் 'கேக்'. ''இரண்டு கைகளையும் உபயோகிக்க வேண்டும் போலிருக்கிறதே, இத்தனை பெரிய 'கேக்'கை வெட்ட!'' என்று தமது மகிழ்ச்சியை வெளிப்படையாகப் புலப்படுத்தினார் எலிஸபெத் அரசி.

அன்றிரவு தமிழ் நாட்டின் அற்புதமான கலைச் செல்வங்களின் ஒரு பகுதியையேனும் ரசித்து மகிழும் அரிய வாய்ப்பு கிட்டியது அரசிக்கு. ராஜ்பவனில் நாட்டிய நிகழ்ச்சிகள் நாகஸ்வர இன்னிசை இவற்றை அனுபவித்தவர் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களை, ''இன்றைக்கு நீங்கள் இங்கே பாடவில்லையா?'' என்று கேட்டு, இயல்பாகத் தமக்குள்ள கலை ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

பெரம்பூரிலுள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலையில், அங்கே முதன் முதலாகத் தயாரித்திருக்கும் முதல் வகுப்புப் பெட்டி ஒன்றும் மூன்றும் வகுப்புப் பெட்டி ஒன்றும் ராணி பார்வையிடுவதற்காகப் புது மெருகு குன்றாமல் தயாராகக் காத்து நின்றன.

சூரியனின் வெங்கதிர்கள் உக்கிரமாக வாட்டும் வேளையில் ராணியார் திறந்த காரிலே வந்திறங்கினார். அவருக்குத்தான் எவ்வளவு பரந்த மனப்பான்மை, மனிதப் பண்பு? பெருந்திரளாகக் குழுமி நின்ற மக்களுக்கு ஏமாற்றமளிக்க மனமின்றித் திறந்த மோட்டாரிலே இவ்வளவு மைல் தூரம் வந்திருக்கிறாரே! இத்தனைக்கும் நமது சீதோஷ்ண நிலையை இதற்கு முன் உணர்ந்தறிந்தவரும் இல்லையே அவர்! குளிர் தேசத்தில் வசதியான வாழ்க்கை நடத்துபவராயிற்றே!

கொஞ்சம் சோர்வடைந்தது போலக் காணப்பட்டாலும் அங்கு கூடியிருந்தோரின் மகிழ்ச்சி ஆரவாரத்தைச் செவியுற்றதுமே அருகிலிருந்த அன்றலர்ந்த மலர்களைப்போல அவர் வதனமும் விகசித்தது!

தொழிலாளி ரங்கராஜன் அரசிக்குப் பூச்செண்டு அளித்தது, உழைப்பாளிகள் சமூகத்தையே உயர்த்தியதுடன் அவர்களை ஆனந்தத்திலும் ஆழ்த்திய ஒரு நிகழ்ச்சி.

''இங்கே நீ செய்யும் காரியங்கள் உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று அரசி வினவிய போது, ''இங்கு வேலையிலிருப்பதிலே நான் பெருமைப்படுகிறேன்'' எனப் பளிச்சென்று பதிலிறுத்தார் ரங்கராஜன்.

எலிஸபெத் அரசியைத் திருப்திப்படுத்தி விட்டோம் என்ற எண்ணத்திலேயே எத்தனையோ நாட்களாக ஒத்திகை நடத்திய சிரமங்களெல்லாம் மறைந்து விட்டிருக்கும் குழந்தைகளுக்கு. ஸ்டேடியத்தில் பல்லாயிரக் கணக்கில் குழந்தைகள் குழுமியிருந்து கடல் நீல நிறத்திலே ஆடை அணிந்து வந்த அழகிய ராணியைக் கண்டு களித்தார்கள். வெய்யிலிலே பச்சிளம் குழந்தைகள் வாடுவதைக் காண நம் மனம் வருந்தினாலும் இளம் இதயங்கள் ஆனந்தக் கூத்தாடின. அன்றையக் கும்மி கோலாட்டம் முதலானவற்றுக்குப்



இப் படத்தின் இனிய பாடல்களை H. M. V. ரிகார்டுகளில் கேளுங்கள்



அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களோடு மந்திரி திரு ஸி. சுப்பிரமணியம்.

புதிதாகப் பாட்டு அமைக்க முயன்றிருக்கவே வேண்டாம்! பாரதியின் பாடல்களில் ஒன்றைப் பாடினும் போதாதா? நல்ல வேளை! அரசிக்குத் தமிழ் தெரியாதது ரொம்ப நல்லதாய்ப் போயிற்று!

தாங்கள் சந்திக்க நேர்ந்தவர்களிடமெல்லாம் சுமுகமாகவும் சாதுரியமாகவும் பேசிப் பழகும் அரிய பண்பினைக் கண்டோம் அரச தம்பதியிடம். ஹாஸ்யமாக வார்த்தையாடுவதிலே மன்னராக விளங்கினார் பிலிப் கோமகனார். ஸெனட் கட்டிடத்திலே வயதான அம்மாள் ஒருவர் 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும்' என்ற ரீதியிலே அவரை ஆசீர்வதிக்க முற்பட்டபோது ஒரு கணம் திகைத்த அவர் 'குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கதி என்ன ஆவது?' என்று திருப்பிக் கேட்கவும் தயங்கவில்லையாம்!

அன்று இரவு நிதி அமைச்சர், இந்த சுற்றுப் பிரயாணத்தைப் பற்றித் தங்கள் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புவதற்கென்றே வந்துள்ள அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு விருந்தளித்தார்.

அப்போது மெல்ல ஒருவரிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். ''இன்றைய இரவு ரொம்ப ஜோராக இருக்கிறது. நல்ல இதமான காற்று'' என்றார் அவர்.

அடுத்தவரிடம் சென்றேன். ''இரண்டு நாட்களாக வெய்யில். இருந்தாலும் கூடவே குளுமையான காற்றும் வீசுவதால் சுகமாக இருக்கிறது'' என்றார் அவர்.

மூன்றாவதாக ஒருவரை அணுகினேன். ''நல்ல நிலவொளியில் பசும்புல் தரையில் இந்த விருந்து அமைந்திருப்பது பிரமாதம்.''

ஒரு பெருமூச்சுடன் மற்றும் ஒருவரை நாடினேன். ''இன்றைக்கு என் மனைவிக்குக் கடிதம் எழுதப் போகிறேன்'' என்று அவர் தொடங்கியதும் 'ஆகா! இதோ ஒருவர் முக்கியமான விஷயம்ஏதோ சொல்லப் போகிறார்' என்று ஆவலுடன் காது கொடுத்துக் கேட்டேன். 'சென்னையில் கடல் காற்றை ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருப்பதைப் பற்றி அவளுக்கு எழுதப் போகிறேன்' என்றாரே. பார்க்கலாம்! அதிகமாக அறிமுகமில்லாதவர்களுடன் ஆங்கிலேயர்கள் சீதோஷ்ண நிலையைத் தவிர வேறெதையும் பற்றிப் பேசமாட்டார்கள் என்பது அப்போதுதான் ஞாபகம் வந்தது.

மறுநாள் 21ல காலையில் ராணியை வழியனுப்ப விமான நிலையத்துக்குச் சென்றிருந்தோம். படை பதைக்கிற வெய்யில் என்று சொல்கிறார்களே, அதை அன்றைக்குத்தான் நிதர்சனமாகக் கண்டேன். விமான நிலையத்தில் நின்ற ராணுவ அணிவகுப்பிலே ஒரு படைவீரர் வெய்யிலைத் தாள முடியாமல் தள்ளாடினார். வேறு ஒருவரை அவருக்குப் பதிலாகக் கொண்டு போய் நிறுத்தினார்கள். நல்ல வேளை! அரசி மீனம்பாக்கத்தை அடையு முன்னரே இந்த ஆள்மாறாட்டம் நடைபெற்று விட்டது!

அறிமுகப் படலம், ராணுவ மரியாதை எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு அரசி விமானத்தில் ஏறினார். ஒருகணம் அவரது கம்பீரமான உருவம் விமான வாயிலில் தென்பட்டது. அடுத்த விநாடி கதவு மூடிக் கொண்டது. விமானம் நகர ஆரம்பித்த போது விடைபெற்றுக்கொள்ளும் பாணியிலே அசைந்த ஒரு கரத்தை மட்டும் கண்ணாடி ஜன்னல் வழியே பார்க்க முடிந்தது.

கண்களுக்கு மறையும்வரையில் விமானத்தை வழி அனுப்பி விட்டுத் திரும்பினேன்.

'வந்தேன், கண்டேன், வெற்றி கொண்டேன்' என்று ஸீஸர் சொன்னானாம். இவ்வார்த்தைகள் இங்கிலாந்திலிருந்து வந்து இந்தியர் நல்லெண்ணத்தை வெற்றிகொண்ட அரசி எலிஸபெத்துக்கும் பொருந்தும்.

பிரிட்டிஷ் அரசி தமிழ்நாட்டிலே தங்கி இருந்தது முழுசாக மூன்று நாட்கள் கூட இல்லைதான். ஆனாலும் வருங்காலத்திலே இந்த விஜயத்தின் சிறப்பைக் குறித்து வருஷக் கணக்காக மக்கள் கதை கதையாகப் பேசிக் கொண்டிருப்பார்கள் என்பது நிச்சயம்.




உதவும் கை
● நூல் அளிப்பது
● கடனும், உதவித் தொகையும்
● வீடு கட்டிக்கொள்ள உதவி
● டிசைன்களும், டைகளும் அளிப்பது
● விற்பனைக்கு மார்க்கெட்
● ஏற்றுமதி பொருள்களுக்கு தரநிர்ணயம்
கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக, அகில இந்தியக் கைத்தறி போர்டு நெசவாளர்களுக்கு இம்மாதிரியான சேவைகள் பல அளித்து வருகின்றது. இதன் மூலம் நெசவாளர் மீண்டும் தேசீயப் பொருளாதாரத்தில் தன் உரிமையை நிலை நிறுத்திக்கொள்ள முடிகிறது.
கைத்தறிகள்
இந்தியப் பொருளாதாரத்தின் இன்றியமையாத ஓர் அம்சம்
DA 40/350



சற்று சிந்தித்துப் பாருங்கள்

குடும்பத்தின் எதிர்கால க்ஷேமங்கள், சொந்தத்தில் ஒரு வீடு, ஓய்வு பெற்ற பிறகு வசதியான வாழ்க்கை. இதெல்லாம் வேண்டுமல்லவா ? இன்றைய உங்கள் சேமிப்பினால்தான் வருங்காலத்தில் இவைகளை அடைய முடியும்.

ஆகவே தவறாமல் சேமிக்கத் தொடங்குங்கள். அச் சேமிப்பை வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தில் டெபாஸிட் செய்யுங்கள். தவறாமல் மாதம் ரூ 5 டெபாஸிட் செய்து வந்தால் வரி இல்லாத வட்டியுடன் மொத்தமாக ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ரூ 325 ம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ 725 ம் கிடைக்கும். ஒவ்வொரு மாதமும் அதிகம் டெபாஸிட் செய்தால் அதிக தொகை மொத்தமாகக் கிடைக்கும்.

வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்

உங்கள் தேவைக்கு உகந்தது

மேல் விவரங்களை அருகில் உள்ள போஸ்ட்மாஸ்டர் அல்லது உங்கள் சமீபத்தில் உள்ள பிராந்திய தேசீய சேமிப்பு ஆபீசரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

குருதேவரின் குரல்

பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

காதல்

உலக இலக்கியப் பெரும் பரப்பை மேலெழுந்தவாருகப் பார்த்தால் கூட, காதலைப் பாடாத கவிஞர் இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது. எந்த மொழியிலும், பழைய பாடல்கள், காதலையும் போரையும் பற்றியே அதிகமாகப் பேசுகின்றன. உலக மகா காவியங்கள் அனைத்தும் காதலின் உன்னதத்தைப் பாடுகின்றன. இத்தாலிய காவியமான 'தெய்வ நாடகம்' என்ற அற்புதப் படைப்பு, அதைப் பாடிய தாந்தே என்ற கவிஞன், பியாத்ரிஸ் என்பவள் பேரில் கொண்ட காதலின் விளைவாகவே எழுந்தது. கிரேக்க மொழியில் உள்ள 'இலியத்' என்ற காவியம், பேரழகி ஹெலன் என்பவள் பேரில் பாரிஸ் என்ற இளவரசன் கொண்ட காதலைப்பற்றியும், அதனால் மூண்ட பெரும் போரைப் பற்றியும் பேசுகிறது. நமது இராமாயணமோ, அதுதான் உங்களுக்குத் தெரியுமே! பாரசீக இலக்கியத்தில், லைலா-மஜ்னூ. ஆங்கில இலக்கியத்தில் ரோமியோ ஜூலியத், தமிழ் இலக்கியத்தில், சங்ககாலத் தலைவனும் தலைவியும்-இப்படி எத்தனை எத்தனை இலட்சியக் காதலர்கள், கவிஞனுடைய கற்பனையில் பிறந்து, அமர வடிவங்களாய் இன்றும் நமது நினைவில் உலாவுகிறார்கள். எத்தனை எத்தனை கவிஞர்கள், எத்தனை எத்தனை விதங்களில், காதலைப் பற்றிப் பரவசக் கவிதை புனைந்திருக்கிறார்கள்! கவிஞர்களும் பாரதியாரின் குயிலைப் போல்,

> **காதல், காதல், காதல்**
> **காதல் போயிற் காதல் போயிற்**
> **சாதல், சாதல், சாதல்.**

என்று முடிவு கட்டினார்களோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

இப்படி, ஆயிரக் கணக்கில், எல்லா மொழிகளிலும் காதற் பாடல்கள் இருந்தும், வள்ளுவர் சொன்னதும் உண்மையென்று எண்ண வேண்டியிருக்கிறது. 'காதல் என்பது ஒரு பூவைவிட மென்மையானது. எவ்வளவு மிருதுவாக மலரை எடுத்து, அதன் அழகையும் மணத்தையும் அனுபவிக்கிறோமோ, அவ்வளவு மிருதுவாக, நயமாக, காதலையும் அணுக வேண்டியிருக்கிறது. சிறிது கவனக் குறைவாக இருந்தாலோ, ஆத்திரப் பட்டாலோ, மலர் கசங்கி வாடி விடும். காதலும் அப்படித்தான். நுட்பமான, மென்மையான உணர்ச்சி அது. ஒரு சிலரே அதன் மென்மையை, அழகை அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்கள்' என்றார் வள்ளுவர்:

> **மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்**
> **செவ்வி தலைப் படுவார்.**

சிறிது நிலை மாறினால், காதல் என்பது வெறும் சதை உணர்ச்சியாகத் தாழ்ந்து விடும். பிறகு, அந்த உணர்ச்சி வெறுப்பாக, அருவருப்பாகத் திரிந்தும் போகும். ஆமாம்! இதோ ஒரு பாட்டைப் பாருங்கள். 'அழகாவது மண்ணாங்கட்டியாவது, பெண்ணுக்கு அழகு வேறு இருக்கிறது? மயங்காதே, தம்பி, மயங்காதே. எல்லாம் ஏமாற்று, எல்லாம் மேற்பூச்சு, எல்லாம் புடவையும், எண்ணெயும், நகையும் செய்கின்ற வித்தை. பல்லிளித்துத் திரியாதே' என்று ஒரு கவிஞர் பாடுகிறார்:

> **செட்டிகளால் அல்லவோ இடையழகு —**
> **வண்ணார்ச்**
> **செக்கர்களால் அல்லவோ சடையழகு**
> **தட்டார்களால் அல்லவோ நடையழகு—மாதர்**
> **உடலழகெல்லாம் பல் கடையழகு.**



"இவர் குமாஸ்தா வேலையை உதறித் தள்ளி விட்டு எழுத்தாளராக மாறினார். பத்தாண்டு காலமாக நூற்றுக்கணக்கான சிறுகதைகளை எழுதிக் குவித்தார். பதினோராவது ஆண்டு தாமே ஆசிரியராகி ஒரு பத்திரிகை தொடங்கினார், தம்முடைய கதைகளைப் பிரசுரிக்க."

– ஒரு பெரு மன்னரின் சரிதை

முன்னரும் பின்னரு மேயிட்டு
முக அழகான நெற்றியிற் பொட்டு
அன்ன நடை எல்லாது கனிதுர்க்கள் கட்டு
அழகு நிலையற் பறந்திடும் சிட்டு

இன்னும் ஏதேதோ அருவருப்பில் பொறிந்து தள்ளுகிறார். அதையெல்லாம் இங்கே சொல்ல நான் விரும்பவில்லை. பெண்ணொருத்தி இதே உணர்ச்சியோடு ஆண்களைப் பற்றி எழுதினால், நீண்ட வசைப் புராணம் ஒன்று அவர்களைப் பற்றிப் பாடிவிட மாட்டாளா?

ஆனால், இதுவெல்லாம் காதலின் மென்மையை உணராமல் பேசுகின்ற பேச்சு. உண்மையான காதலின் குரல் வேறு விதமாகப் பேசும் :

சுட்டும் விழிச் சுடர்தான் — கண்ணம்மா
சூரிய சந்திரரோ ?
வட்டக் கரிய விழி — கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ ?

இது பாரதியார் பாட்டு. இந்தப் பாட்டில் இறைவனைப் பாடுகிறார் என்பது ஒருபுறம் இருக்கட்டும். மண்ணுலகத்துக் காதலன் ஒருவன், காதல் என்ற மென் மலரின் செவ்வியைக் கண்டவன், இப்படித்தான் தன் காதலியைப் பற்றிப் பேசுவான். 'தும்பியைப் பார்த்து, என் காதலியின் கூந்தலை விட நறுமணம் உடைய பூவை நீ எங்கேயாவது கண்டிருக்கிறாயா?' என்று 'குறுந்தொகை'யில் வரும் காதலனைப் போல் கேட்பான் :

செறி யெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே.

ஆனால், பெண்ணின் உடலழகு வெறும் அலங்கார மினுக்குத்தான், வெளி வேஷந்தான் என்று சொல்வதில் உண்மை இல்லையா ? இருக்கிறது. என்றாலும் அது முழு உண்மை இல்லை. பெண்ணொருத்தி கண்ணுக்கு மையிட்டுக் கொள்ளுகிறாள்; கூந்தலைக் கோதி, வாசனைத் தைலமிட்டு, கொண்டை போட்டு, பூவும் சூட்டி அலங்கரிக்கிறாள் ; பட்டுச் சேலை உடுத்துகிறாள் ; பலவிதமான ஆபரணங்களை அணிகிறாள் ; பாதசரம் கொஞ்ச நடந்து வருகிறாள். அதனால் என்ன? கவிச்சக்கரவர்த்தி கம்பன், சீதைக்கு அலங்காரம் செய்வதை வருணிக்க ஒரு படலமே தந்து விட்டானே ! அலங்காரத்தில் தவறில்லை ; அழகுக்கு அழகு செய்வதில் தவறில்லை. எந்த நோக்கத்தோடு பெண்ணொருத்தி இதையெல்லாம் செய்கிறாள் என்பதல்லவா கேள்வி ? தன் கணவனுக உள்ள உயிர்க் காதலனுக்கு, தன் உடலழகாலும் இன்பமூட்ட வேண்டும் என்று நினைப்பது, அவனுடைய காதலின் பெருமையல்லவா ? இதை எண்ணிப் பரவசமடையாத ஆண்மகனும் உண்டா? அதோடு நிற்கிறாளா ? எந்தப் பொருள்களால் தன்னை அலங்கரித்துக் கொள்ள, பெண் நினைக்கிறாளோ, அவற்றைத் தன் அன்பின் காணிக்கையாக அவளுக்குத் தரவும் காதலன் முனைகிறான். ஏன் ? தன் ஆசைப் பெருக்கினாலே தான்.

ஆதி மனிதன், மிருதுவான பெரிய இலைகளையும், வண்ண வண்ண மலர்களையும், பறவைகளின் இறகுகளையும், கிளிஞ்சில்களையும் தன் காதலியின் முன் கொண்டு வந்து கொட்டினான் சில சமயங்களில், தான் கொன்ற மனிதரின் தலைகளையும்கூட, தன் வீரத்தின் அடையாளமாக அவள் முன்னே எறிந்தான். இன்றைய நாகரிக மனிதன், முகப் பவுடரையும், இதழ்ச் சாயத்தையும், நைலான் துணியையும், பட்டையும், பொன்னையும் வருந்தி வருந்திச் சம்பாதித்து, காதற் கோயில் உண்டியலாகச் செலுத்துகிறான். காதல் மட்டும் இருந்தால் இதில் என்ன தவறு ?

அழகு, உடல் அழகு, அழிந்து போகும் என்றுதான், தோன்றி மறையும் மின்னலைப் போல. பெண்ணுக்கும், ஐயோ,

[செறி எயிற்று - நெருங்கிய பல் வரிசை உடைய; அரிவை - பெண்; நறியவும் - வாசனை உள்ளனவும்; உளவோ - இருக்கின்றனவா?]

நாம் காதலிக்கும் பெண்ணுக்கும், முதுமை வரும், சாவும் வரும். வந்தால் என்ன? நம்முடைய மனத்தில் உள்ள காதலால், அவளுக்கு அழியா அழகு தருகிறோம். உலகத்தில் உள்ள அழகுப் பொருள் அனைத்தையும் அவள் பாதத்தில் வைத்து, 'உன் அழகுக்கு அழகு செய்து கொள்' என்று சொல்லி, அவ்வாறு அவள் செய்வதைப் பார்த்துப் பூரிப்படைகிறோம். கடல் முத்தையும், சோலை மலரையும், மண்ணின் நெஞ்சிலிருந்து வரும் பொன்னையும், மணியையும் அவளுக்கே உரியன என்று தேடித் தேடித் தருகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக, நமது ஆசையால், அன்பால் அவளை இலட்சிய வடிவாகச் செய்கிறோம். கவிஞர்கள் இதை, இதையே, பாடுகிறார்கள். ஓவியர்கள் இதன் மங்காத பொலிவை ஒளி வீசும் சித்திரங்களாகத் தீட்டுகிறார்கள். கடவுள் ஏதோ பெண்ணைப் படைத்தான். ஆனால் அவன் படைத்தது பெண் என்ற அதிசயத்தின் ஒரு பாதிதான். மற்றொரு பகுதியைப் படைத்தது யார் தெரியுமா? காதலன். அவன் ஆசைக் கனவுகளின் அலகிலா எழிலே பெண்ணின் மற்றொரு பாதி.

இதைப் பாடுகிறார் குருதேவர் தாகூர். காதல் என்ற உணர்ச்சியின் வழியாகப் பார்த்தால், ஏதோ பேதைமையாகத் தோன்றுவதுகூட, ஆடவருடைய பெருமையாக, பெண்ணின் பெருமையாக உயர்ந்து விடுகிறது என்று கனிவோடு பாடுகிறார். கேட்போம்:

பெண்ணே, உன்னை இறைவன்தான்
    பேணிப் படைத்தான் என்பதிலை.
எண்ணி எண்ணி மண்ணில் உனை
    எடுத்துப் படைத்தார் ஆடவரும்.
நண்ணும் அவர்தம் இதயத்தில்
    நாளும் பெருகும் எழிலையெலாம்
பெண்ணே, அளித்துன் அழகென்றே
    பேசிப் பேசிப் பித்தானார்.
பொன்னும் ஆன இழையால் உன்
    புதுமை நெய்தார் கவிஞரெலாம்.
உன்னை அமரப் புதுப் பொலிவாய்
    ஓவிய வரைந்தார் ஓவியரும்.
மன்னு முத்தம் கடல் ஈயும்;
    மண்ணுட் கனிகள் பொன் அருளும்;
வன்னச் சோலை மலர் தரும் உன்
    வடிவை வரையில் நீக்காக்க.
உன்றன் இளமைத் திறத்தினையே
    உன்னி உன்னி ஆடவரும்
முற்றும் ஆசைப் பெருங் கடலில்
    மூழ்த்த வனப்பாம் அமுதோவியமாய்
உன்றன் அழகை பெருக்கிடுவார்
    உயர்வார் அதனால் உன் வடிவில்
விந்தைப் பெண்மை பாதி அவர்
    வியாக் கனவுன் மறு பாதி.



ம ணிபல்லவம்

15. இளங்குமரன் ஆவேசம்

பட்டினப்பாக்கத்துப் பெரு வீதியின் திருப்பத்தில் இளங்குமரனைக் கண்டதும் கதக்கண்ணனும், மற்ற நண்பர்களும் குதிரைகளை நிறுத்திக் கீழே இறங்கிச் சூழ நின்று கொண்டார்கள். எதிர்பாராத நிலையில் அவர்களை அங்கே சந்தித்த வியப்பு அடங்கச் சில விநாடிகள் ஆயிற்று இளங்குமரனுக்கு.

"கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் என்று பழமொழி கூறுவார்கள். இளங்குமரா! நாங்கள் உன்னைத் தேடித்தான் வந்து கொண்டிருக்கிறோம். அதற்குள் நீயே எதிரே வந்துவிட்டாய். உன்னிடம் அவசரமாகப் பேச வேண்டிய செய்திகள் நிறைய இருக்கின்றன" என்று பேச்சைத் தொடங்கினான் கதக்கண்ணன். இதைக் கேட்டு இளங்குமரன் சிரித்துச் சொல்லலானான்:

'நான் தெய்வமும் இல்லை நீங்கள் என்னைக் கும்பிடுவதற்காகத் தேடி வரவும் இல்லை. நான் மட்டும் தெய்வமாயிருந்தால் இந்தப் பட்டினப்பாக்கம் என்னும் அக நகரத்தை இப்படியே அடியோடு பெயர்த்துக் கொண்டு போய்க் கிழக்கே கடலில் மூழ்கச் செய்து விடுவேன். இங்கே பெரிய மாளிகைகளின் அகன்ற இடங்களில் சிறிய மனிதர்கள் குறுகிய மனங்களோடு வாழ்கிறார்கள். இவர்கள் பார்வை, பேச்சு, நினைவு, செயல் எல்லாவற்றிலும் சூழ்ச்சி கலந்திருக்கிறது: சூது நிறைந்திருக்கிறது"

ஆத்திரத்தோடு இவ்வாறு கூறிக் கொண்டே பின்புறம் திரும்பி, யாருடைய வரவையோ எதிர்பார்க்கிறாற் போல் நோக்கினான் இளங்குமரன். ஆனால் பின்புறம் ஒன்றன்பின் ஒன்றாக வீதியைக் கடந்து சென்று கொண்டிருக்க இரண்டு மூன்று தேர்களின் தோற்றம் அவன் பார்வையை அப்பால் சென்று காணமுடியாமல் தடுத்து விட்டன.



கதக்கண்ணனும், மற்ற அன்பர்களும், இளங்குமரனின் பார்வை, யாரைத் தேடி ஆத்திரத்தோடு, அவ்வாறு பின்புறம் திரும்புகிறதென்று தெரியாமல் மயங்கினர். அப்போது, 'வா அப்பனே! நன்றாகப் பின்தொடர்ந்து வா. ஒரு கண்ணோடு இன்னொரு கண்ணையும் பொட்டையாக்கி முழுக் குருடனாகத் திருப்பி அனுப்பி வைக்கிறேன்' என்று பின்புறம் திரும்பி நோக்கியவாறே இளங்குமரன் மெல்லக் கறுவிக் கொண்டு முணுமுணுத்த சொற்களை அவனுக்கு மிகவும் அருகில் நின்ற கதக்கண்ணன் கேட்க முடிந்தது. பட்டினப்பாக்கத்தில் இளங்குமரனுக்கு ஆத்திரமூட்டக்கூடிய அநுபவங்கள் எவையேனும் ஏற்பட்டிருக்க வேண்டுமெனக் கதக்கண்ணன் நினைத்துக் கொண்டான். இளங்குமரனுக்கு அப்போது நல்ல பசி. பசியின் வேதனையும் ஆத்திரத்தோடு சேர்ந்து கொண்டிருந்தது. நாளங்காடியிலிருந்து தொடர்ந்து ஏற்பட்ட அநுபவங்களால் அவனுக்கு உண்டாகியிருந்த இனம் புரியாத மனக்கொதிப்பும் சேர்ந்து சினமாக மூண்டிருந்தது. பின் தொடர்ந்து வந்த ஒற்றைக்கண்ணன் அருகில் வந்திருந்தால் தனக்கு அப்போதிருந்த சினத்தில் அவனைப் பந்தாடியிருப்பான் இளங்குமரன். அருகில் தென்படாததால் அந்த ஒற்றைக் கண் மனிதன் பிழைத்தான். குதிரைகளையும் அருகில் நடத்திக் கொண்டு இளங்குமரனோடு மேலே தொடர்ந்து நடந்தார்கள் நண்பர்கள். சிறிது தொலைவு சென்றதும், "நேற்று இரவில்" என்று தொடங்கி ஏதையோ அவசரமாகச் சொல்ல முற்பட்டான் கதக்கண்ணன். ஆனால் இளங்குமரன், "அதைப் பற்றி இப்போது இங்கேசொல்லவேண்டாம். பின்பு தனியே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்" என்று கூறி மேலே பேசவிடாமல் கதக்கண்ணனின் நாவை அடக்கிவிட்டான். நெருங்கிய நண்பர்களாகிய தாங்கள் உடனிருக்கும்போது இளங்குமரன் இப்படி நடந்து கொண்டதைக் கண்டு நண்பர்கள் சிறிது திகைப்படைந்தனர்.



'இங்கே பட்டினப்பாக்கத்துக்கு நான் வந்திருக்கிறேனென்று உங்களுக்கு யார் கூறினார்கள்?" என்று இந்தக் கேள்வியை இளங்குமரன் கேட்கும்போது வேறு கவனங்களிலிருந்து நீங்கி முற்றிலும் நண்பர்கள் பக்கம் கவனித்தவனாகத் தோன்றினான். நாளங்காடிப் பூத சதுக்கத்தில் முல்லையைச் சந்தித்ததையும், அவளிடமிருந்து விவரமறிந்து கொண்டதையும் கதக்கண்ணன் இளங்குமரனுக்குச் சொன்னான்.


"கதக்கண்ணா! நானும் முல்லையும் நாளங்காடிக்குப் புறப்படும்போதே உன் தந்தையார் கவலை கொண்டார். 'நான் இறுதி வரையில் முல்லைக்குத் துணையாயிராமற் போய் விடுவேனோ' என்று அவர் பயந்ததற்கு ஏற்றாற் போலவே நடந்து விட்டது. பூத சதுக்கத்தில் நின்று கொண்டிருந்தபோது யாரோ ஒரு கிழவனுக்கு இரக்கம் காட்டப் போய் எப்படி, எப்படியோ வம்புகளில் மாட்டிக் கொள்ள நேர்ந்து விட்டது. முல்லையைத் தனியே விட்டு விட்டு அவளிடம் சொல்லிக் கொள்ளாமலே நான் பட்டினப்பாக்கம் போகும்படி ஆகி விட்டது. பாவம்! முல்லைக்கு என்மேற் பெருங் கோபம் ஏற்பட்டிருக்கும். உன் தந்தையாரிடத்திற் போய் நடந்ததையெல்லாம் சொல்லியிருக்கப் போகிறாள். அவர் முனிவரிடம் என்னைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டிருப்பார். என்மேல் ஆத்திரத்தோடு உன் தந்தையார் என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பார்" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கதக்கண்ணனிடம் கூறினான் இளங்குமரன்.

"தந்தையார் உன்மேல் சினம் கொள்ளும்படியாக முல்லை ஒன்றும் சொல்லியிருக்க மாட்டாள், இளங்குமரா! உன்னை அவர் கோபித்துக் கொள்ளக் கூடாதென்பதில் உனக்கு எவ்வளவு கவலை உண்டோ, அதைக் காட்டிலும் அதிகமாக முல்லைக்கும் உண்டு என்பதை நான் அறிவேன்" என்று ஆறுதலாக மறுமொழி கூறினான் கதக்கண்ணன். மேலே அவனே கூறலானான் :- "இளங்குமரா! இந்திர விழாவின் இரண்டாம் நாளாகிய இன்றைக்கு நானும், நம் நண்பர்களும் உன் நலனைக் கருதி உன்னிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கலாமென நினைக்கிறோம். அதை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளத்தான் ஆகவேண்டும்?"

"உங்கள் வேண்டுகோள் இருக்கட்டும்! அதை அப்புறம் பார்க்கலாம். இந்தக் கணமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய அவசர வேண்டுகோள் ஒன்று எனக்கு இருக்கிறது. அது நிறைவேறி விட்டால் நடந்து கொண்டிருக்கும்

போதே எங்கேயாவது மயங்கி விழுந்து விடுவேன் நான். ஒரே ஒரு முறை தான் சொல்வேன். ஒரு விநாடிதான் சொல்வேன். இதோ கேளுங்கள், நண்பர்களே! மறுமுறை கேட்டால் சொல்ல மாட்டேன்"- என்று இரைந்து சொல்லிக்கொண்டே வந்த இளங்குமரன். குரலைச் சிறிதாக்கிக்கொண்டு இதழ்களில் குறுநகை இலங்க மெல்ல நண்பர்களைப் பார்த்துக் கூறினான்: "இப்போது அடியேனுக்கு நல்ல பசி. வயிறு பஞ்சாய்ப் பறக்கிறது."

இளங்குமரன் என்ன பெரிய வேண்டுகோள் விடுக்கப் போகிறானோ என்று திகைத்திருந்த நண்பர்கள் இதைக்கேட்டு உரக்கச் சிரித்தார்கள். இளங்குமரனுக்கு நண்பர்களும் உற்சாகமும் சேர்ந்து வந்து சந்தித்து விட்டால் இப்படித்தான் நகைச்சுவை பிறக்கும். புதுமையான பேச்சுக்களும் புறப்படும்.



"கதக்கண்ணா! இன்றைக்கு இந்த வம்பெல்லாம் வந்து சேராமல் நாளங்காடியிலிருந்து நேரே முல்லையோடு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருந்தேனானால் மோர்க் குழம்பும், பொரியலுமாக அற்புதமான விருந்து கிடைத்திருக்கும். நான் மிகவும் துர்ப்பாக்கியசாலியாகி விட்டேன் நண்பர்களே! முல்லை கையால் மோர்க் குழம்பும் உணவும் இன்றைக்கு எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அடடா, முல்லையின் மோர்க் குழம்பு - இன்றைக் கெல்லாம் கையில் மணந்து கொண்டிருக்குமே" என்று கூறிக்கொண்டே இளங்குமரன் நாக்கைச் சப்புக் கொட்டியபோது நண்பர்களுக்கெல்லாம் நாவில் சுவை நீர் ஊறியது.

"என் தங்கை படைக்கும் மோர்க் குழம்பு நன்றாக இருக்குமோ, இல்லையோ

நீ அதைப்பற்றிச் சொல்வது மிக நன்றாக இருக்கிறது. இப்போது இதைக் கேட்ட நண்பர்களெல்லாம் என் வீட்டுக்கு முல்லையின் மோர்க் குழம்பை நினைத்துக் கொண்டு முற்றுகை யிட்டுவிட்டால் என்கதி என்ன ஆவது?'' என்று கூறிக்கொண்டே இளங்குமரன் முகத்தைப் பார்க்க நிமிர்ந்த கதக்கண்ணன், அவனுடைய பார்வையும் குறிப்பும் வீதியின் பின்பக்கம் சென்று திரும்புவதைக் கவனிக்கத் தவறவில்லை. வெளியில் மிகவும் சர்வ சாதாரணமாகச் சிரித்துப் பேசிக் கொண்டே உள்ளே தீவிரமாக எதையேனும் சிந்தித்துக் கொண்டிருக்கும் தன்மை இளங்குமரனுக்கு உண்டு என்பது கதக்கண்ணனுக்குத் தெரியும். எந்நேரமும் கண்களிலும், பார்வையிலும், இதழ்களிலும் நகை நயம் விளங்க மலர்ந்து தோன்றும் இளங்குமரன் முகத்தில் இப்போது பசி வாட்டமும், சோர்வும் தெரிவதையும் கதக்கண்ணன் கண்டான். சில சமயங்களில் தன்னுள்ளே ஓடும் நினைவுப் புயலின் வேகத்தை வெளியே தெரிய விடாமல் மறைக்கும் சாதனமாக இந்தச் சிரிப்பையும், கலகலப்பான பேச்சையும் பயன்படுத்தும் வழக்கமும் இளங்குமரனுக்கு உண்டு என்பதையும் கதக்கண்ணன் அறிவான்.

''என்னவோ வேண்டுகோள் விடுக்கப் போவதாகச் சிறிது நேரத்துக்கு முன் கூறினாயே, கதக்கண்ணா!''

தன்னுடைய நினைவுகளிலிருந்தும் வேறு கவனத்திலிருந்தும் விடுபட்டு வந்தவனாக உடன் வந்த கதக்கண்ணன் பக்கமாகத் திரும்பி இந்தக் கேள்வியைக் கேட்டான் இளங்குமரன். இதற்கு உடனே பதில் கூறாமலே தன்னுடன் வந்த மற்ற நண்பர்களின் முகங்களைப் பார்த்தான் கதக்கண்ணன். அப்படிப் பார்த்தவுடனே நண்பர்களில் சிலர் கதக்கண்ணனைச் சிறிது தொலைவு விலக்கி அழைத்துக் கொண்டு போனார்கள். ஏதோ காதும் காதும் வைத்தாற் போல் பேசிக் கொண்டார்கள். பின்பு திரும்பி வந்து மீண்டும் எல்லாருடனும் கலந்து கொண்டார்கள். நண்பர்களின் இந்தச் செயல் இளங்குமரனுக்குப் புதுமையாகவும், வியப்பளிப்பதாகவும் இருந்தது.


''இளங்குமரா! நம் ஆசிரியர்பிரானிடம் இன்று காலையில் நண்பர்கள் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்களாம். அவர் உன்னை இன்று பிற்பகலுக்குள் சந்திக்க விரும்புகிறாராம்.''

''யார்? நீலநாக மறவரா?''

''ஆம்! இப்போது நாம் நீலநாகமறவருடைய படைக்கலச் சாலைக்குத் தான் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''நீலநாக மறவருடைய படைக்கலச்சாலைக்குப் போவதற்கும் நீ இப்போது என்னிடம் கூறுவதற்கிருக்க வேண்டுகோளுக்கும் என்ன தொடர்பு?''

''அந்த வேண்டுகோளை இப்போது இங்கே பொது இடமான நடுவீதியில் வைத்துக்கொண்டு உன்னிடம் கூறுவதைவிடப் படைக்கலச் சாலைக்குச் சென்ற



பின் 'நீல நாகமறவரே உனக்குத் தெளி வாக எடுத்துக் கூறும்படி செய்யலாம்' என்று நண்பர்கள் கருதுகிறார்கள்.''

''நண்பர்கள் கருதுவதைப் பற்றி எனக்கு மகிழ்ச்சிதான். என்னிடம் சொல்லாமலே என்னென்னவோ திட்ட மிட்டுக் கொண்டு செய்கிறீர்கள். எனக் குக் கெடுதலாக ஒன்றும் செய்துவிட மாட்டீர்கள் என்று நான் உறுதியாக நம்பலாம். ஆனால் ஒன்றுமட்டும் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் கவலைப்பட்டுப் பயந்து கொண்டிருப்பதுபோல் இந்தப் பெரிய நகரத்தின் இருண்ட வளைவு களிலோ, ஆள் பழக்கமற்ற கடற்கரை ஒதுக்கங்களிலோ, 'இளங்குமரனை' யாரும் அவ்வளவு எளிதாகக் கொன்று போட்டுவிட முடியாது...''

இப்படி இந்த வாக்கியத்தின் அமங் கலமான கடைசிப் பகுதியை இளங் குமரன் சொல்லி முடிப்பதற்குள் கதக் கண்ணன் அருகில் வந்து அவன் வாயைப் பொத்தி விட்டான்.

''பித்தனைப்போல் இதென்ன பேச்சு, இளங்குமரா? உன்மேல் அன்பும், பற்றும் உள்ளவர்கள் உனக்காக அனுதாபப்படு வதற்குக் கூட உரிமையற்றவர்களா? அந்த அனுதாபத்தையும், அக்கறை யையும் நீ ஏன் தவறாக எடுத்துக் கொள்கிறாய்?''

'சில சமயங்களில் என்மேல் அனு தாபப் படுகிறவர்களுக்காக நானே அனுதாபப்படும்படி நேர்ந்து விடுகிறது. என்னைக் கோழையாக்க முயல்கிற அனு தாபத்தை நான் ஒப்புக்கொள்ள முடிவ தில்லை! என்னைப் பற்றி எனக்கு என் மனத்தில் எவ்வளவு தன்னம்பிக்கையும், உரமும் உண்டோ, அதில் அரைப் பகுதி யாவது மற்றவர்களுக்கும் இருக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறவன் நான். அப்படி இருந்தால்தான் மற்ற வர்கள் என்னைத் தைரியமுள்ள மனித னாக நினைக்கிறார்களென்று நான் பெரு மைப்படலாம். நீங்கள் எல்லாரும் என் அன்புக்குரியவர்கள். பெரு வீரராகிய நீல நாகமறவர் என் மதிப்புக்குரியவர். எனக்கும், உங்களுக்கும், படைக்கலப் பயிற்சியும், போர்த்துறைக் கலைகளும் கற்பித்த ஆசிரியர்பிரான் அவர். ஆனால் அதற்காக நீங்களும் அவரும் சேர்ந்து கொண்டு என்னைத் தெருவில் திரியும் சிறு பிள்ளையாக எண்ணி எனக்கு அனு தாபப் படுவதை நான் ஏற்பதற்கில்லை.''

வலது கையை மேலே தூக்கி ஆட்டிக் கொண்டே ஆவேசத்தோடு பேசினான் இளங்குமரன். அப்போது அந்த நிலையில் அவனை எதிர்த்துப் பேசி மறுமொழி சொல்வதற்கே தயங்கி அஞ்சினார்கள் நண்பர்கள். இதன்பின் பட்டினப் பாக் கத்து எல்லை கடந்து கலகலப்பு மிக்க நாளங்காடிப் பகுதியையும் ஒருவாறு கடந்து மருவூர்ப் பாக்கத்துக்குள் நுழை கிறவரை நண்பர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை

இப்போது மருவூர்ப் பாக்கத்தில் நீல நாக மறவரின் மிகப் பெரிய படைக்கலச் சாலையை நெருங்கிக் கொண்டிருந் தார்கள். மெல்ல மறுபடியும் இளங் குமரனிடம் பேச்சைத் தொடங்கினான் கதக்கண்ணன்.

''பசிக் கோபத்தில் ஏதேதோ பேசி விட்டாய், இளங்குமரா! ஆசிரியர் பிரா னிடமும் அப்படி ஏதாவது ஆத்திரப் பட்டுப் பேசிவிடாதே.''

''பசிக் கோபமல்ல நண்பனே! கோபப் பசி என்றே வைத்துக் கொள்'' என்று பழைய வேகம் குறையாமலே பதில் வந்தது இளங்குமரனிடமிருந்து.

''எதுவாயிருந்தாலும் இருக்கட்டும். ஆசிரியர் பிரானைச் சந்தித்ததும் உன் னுடைய வயிற்றுப் பசி, பசிக்கோபம், கோபப் பசி எல்லாமே நீங்கி விடுகின் றனவா, இல்லையா, பார்'' என்று நகைத்தபடி சொன்னான் கதக்கண்ணன்.

11. திரை மறையில் தெரிந்த திருவடிகள்!

சித்திரசாலைக்குள் அந்த எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத தனிமை நிலை யில் இளங்குமரனுடைய படத்துக்கு முன்னால் தன் தந்தைக்கும், ஓவியனுக்கு மிடையே நிகழும் பேச்சு என்னவாயிருக் கும் என்பதை அறிந்து கொண்டு விடு வதற்குத் தன்னால் ஆனமட்டும் முயன் றாள் படியோரத்தில் மறைந்து நின்று கொண்டிருந்த சுரமஞ்சரி. தன் செவி களின் கேட்கும் ஆற்றலை எவ்வளவுக்குக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்க முடி யுமோ அவ்வளவுக்குக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்க முயன்றாள் அவள். சற்றுமுன் நிலா முற்றத்தில் இருந்த போது தென்றலையும், பால் மழை பொழிவது போல் வெண்மதி தவழும் வானத்தையும், தன் சகோதரியின் இன்னிசையையும் எண்ணி எண்ணி இன்பத்தில் மூழ்கினவளாய் அந்த இனிமை நினைவுகளின் எல்லையாய் இளங் குமரன் என்னும் பேரினிமை நினைவில் இணைத்து மகிழ்ந்த சுரமஞ்சரி இப்போது

சித்திரசாலையின் படியருகே அச்சமும் திகைப்பும் கொண்டு நின்ருள். என்னென்னவோ நிகழக் கூடாதனவும், நிகழத் தகாதனவுமாகிய நிகழ்ச்சிகள், நிகழத் தொடங்கி விட்டாற் போல் அவள் மனத்துள் ஒருவிதமான திகில் சூழ்ந்தது. வெள்ளை விழியும் கருவட்டமுமாகப் பிறழ்ந்து பிறழ்ந்து கொள்ளையழகோடு பார்க்கும் அவளுடைய மை தீட்டிய நளின நயனங்கள் இப்போது பயத்தால் மிரண்டு விரிந்தன.

பெருமுயற்சி செய்தும் தந்தையாரும் ஓவியனும் பேசிக் கொண்டதை அவள் முற்றிலும் அறிய இயலவில்லை. சில சில சொற்கள்தாம் இடையிடையே கேட்க முடிந்தன. ஆனால் அவள் நின்று கொண்டு பார்த்த இடத்திலிருந்து தந்தையின் விலாப்புறமும் ஓவியனின் முன் தோற்றமும் தெரிந்ததனால் தந்தை ஊன்று கோலால் இளங்குமரனின் ஓவியத்தைச் சுட்டிக்காட்டி ஏதோ செய்யச் சொல்லித் தூண்டுவதாகவும், அப்படி அவர் எதைச் செய்யச் சொல்லுகிருரோ அதைச் செய்வதற்கு ஓவியன் அஞ்சித் தயங்குவதாகவும் புரிந்து கொள்ள முடிந்தது. வாயிலோரத்துப் படி விளிம்பில் வலது காற் பெருவிரலை அழுத்தி ஊன்றி அதன் பலத்தில் நின்று கொண்டு தலையை நீட்டிப் பார்ப்பது சிறிது கால் இடறினாலும் தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அப்போது அங்கு வந்து நின்று தான் மறைந்து கவனித்துக் கொண்டிருப்பது தந்தையாருக்குத் தெரிந்தால் அதன் விளைவு எவ்வளவு விரும்பத் தகாததாக இருக்கும் என்பதும் அவளுக்குத் தெரியும்.



காற்பெருவிரல் வலிக்காமல் இருப்பதற்காகத் தலையைப் பின்னுக்குத் திருப்பி உட்புறம் எட்டிப் பார்ப்பதை நிறுத்தி விட்டு வாயிலுக்கு இப்பால் விலகி நன்ருக நின்று கொண்டாள் கரமஞ்சரி. உட்பக்கம் நிகழ்வதைக் காணுமல் இப்படிச் சிறிது நேரம் விலகி நின்று விட்டுப் பின்பு மறுபடியும் அவள் உட்பக்கம் பார்த்தபோது ஓவியனின் முகம் முன்னைக் காட்டிலும் பயந்து வெளிறிப் போயிருந்ததைக் கண்டாள். அவனுடைய முகம் அவ்வாறு பயந்து வெளிறிப் போவதற்குக் காரணமாக உட்பக்கத்தில் தான் பார்க்காதபோது என்ன நடந்திருக்கக்கூடும் என்பதைக் கரமஞ்சரியால் அப்போதிருந்த குழப்பமான மன நிலையில் அநுமானம் செய்ய முடியவில்லை. ஆனால் 'ஏதோ நடந்திருக்கிறது — நடந்திருக்க வேண்டும்' —என்று தேற்றமாகத் தெரிந்தது. ஒன்றும் விளங்காமல் மேலும் குழம்பினுள் கரமஞ்சரி.

இதற்குள் சித்திரசாலைக்குள் நிற்கும் தந்தையும் ஓவியனும் அங்கிருந்து வெளியே புறப்படுவதற்குச் சித்தமாகி விட்டாற்போல் தெரிந்தது. 'இனிமேல் தான் அங்கே படியோரமாக நின்று கொண்டிருப்பது கூடாது'—என்று முடிவு செய்து கொண்டவளாக அடிமேல் அடி வைத்து மெல்ல நடந்து தனது அலங்கார மண்டபத்தில் உடை மாற்றிக் கொள்வதற்கென அமைந்திருந்த தனிமையான பகுதிக்குள் புகுந்தாள் கரமஞ்சரி. அங்கே புகுந்து மறைந்து கொள்வதனால் அப்போது அவளுக்கு இரண்டு விதமான நன்மைகள் இருந்தன. முதல் நன்மை தந்தையார் திரும்பிச் செல்லும்போது அந்தப் பகுதிக்கு வர மாட்டார். இரண்டாவது நன்மை அப்படியே நேரே போக வேண்டிய அவர் அந்தப் பகுதிக்கு வந்து விட்டாலும் அவள் தனிமையாக அலங்காரம் செய்து கொள்ளுவதற்குரிய பகுதியில் அவள் இருப்பதைப் பார்த்து, 'இப்போது நீ இங்கே ஏன் வந்தாய்' என்றோ வேறு விதமாகவோ கேட்டு அவர் அவளைச் சினந்து கொள்ள முடியாது. இவ்வாறு அந்த அணியறைக்குள் புகுவதிலுள்ள இரு நன்மைகளையும் நினைத்தவாறே புகுந்த கரமஞ்சரிக்கு அங்கே இன்னும் ஒரு பேராச்சரியம் காத்திருந்தது.

அறைக்குள் தோழிப் பெண் வசந்தமாலை ஓசைப்படாமல் குத்துக்கல் போல் சிலையாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அப்போது கரமஞ்சரியைக் கண்டதில் வசந்தமாலைக்கு வியப்பு அதிகமா, வசந்தமாலையைக் கண்டதில் கரமஞ்சரிக்கு வியப்பு அதிகமா, என்று ஒப்பிட்டுச் சொல்ல முடியாமல் வியப்புக்களை எதிரெதிரில் சந்தித்துக் கொண்டது போல் அமைந்தது அந்தச் சந்திப்பு. தன் வாயிதழ்களின் மேல் ஆள்காட்டி விரலை வைத்துப் 'பேசாமலிரு' — என்

ஒரு பிரமுகர் சிறைச்சாலையைப் பார்வையிட்டபின் விசிட்டர்கள் புத்தகத்தில் எழுதி விட்டுச் சென்றது இது:


"சிறைச்சாலைச் சுவர்களுக்கெல்லாம் நன்கு வெள்ளையடித்து அழகாக வைத்திருக்கிறார்கள். அறைகளும் காற்றோட்டமுள்ளதாக இருக்கின்றன.



கைதிகளுக்குச் சத்துள்ள உணவு கொடுக்கப்படுவதைக் கண்டு பாராட்டுகிறேன். இவ்வளவு நல்ல முறையில் நடத்தியிருந்தால் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சிறையிலிருந்து நான் தப்பி ஓடியிருக்க மாட்டேன்!"

"பத்துக்கு ஏழு லைட்டுகள் எரியாது. பாத்ரூம் உண்டு; ஆனால் கதவைத் திறக்க ஒரு பயில்வானைத்தான் நியமித்துக் கொள்ள வேண்டும். ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேல் 'திடும் திடும்' என்று மாடியில் சத்தம் கேட்கும். இவ்வளவு குறைகள் உண்டு..."

— வீட்டுச் சொந்தக்காரர் மனம் திறந்து சொன்னது.



"எதில் சார் குறையில்லை? மனிதனிடம் கூடத்தான் குறை இருக்கிறது. என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன். வருஷம் ஐந்து ஆறு ஆனாலும் சரி. வீட்டு வாடகையை மட்டும் தரமாட்டேன். அது என் பழக்கம்."

— வீடு பார்ப்பவர் மனம் திறந்து சொன்னது.

னும் பொருள் தோன்ற வசந்தமாலை சைகை செய்த அதே சமயத்தில் அதே போன்றதொரு சைகையைக் கரமஞ்சரியும் வசந்த மாலைக்குக் காட்டிக் கொண்டே அருகில் வந்தாள்.

சித்திரசாலையிலிருந்து வெளியேறித் தந்தையும் ஒளியனும் நடந்து செல்லும் காலடி ஓசை அறைக்குள் அவர்களுக்குத் தெளிவாகக் கேட்டது. அந்தக் காலடி யோசை வெளியே நடந்து சென்று ஒலி தேய்ந்து மங்கியதும், "நீ எப்போதடி இங்கு வந்தாய்?" என்று வசந்தமாலையைக் கேட்டாள் கரமஞ்சரி.

"நான் வந்து அரை நாழிகைக்கு மேலாகி விட்டதம்மா. நீங்கள் இங்கிருப்பீர்கள் என்று நினைத்துக் கொண்டு உள்ளே வந்தேன். சித்திரசாலைக்குள் தந்தையாரையும் ஒளியனையும் பார்த்த பின் எனக்குப் பயமாயிருந்தது. வெளியே போகலாமென்றால் அதற்குள் உங்கள் தந்தையார் வந்து விடுவாரோ என்று அச்சமாயிருந்தது. நடுக்கத்தோடு பேசாமல் இந்த அறைக்குள் வந்து பதுங்கி விட்டேனம்மா" என்று இன்னும் அந்த நடுக்கம் குன்றாமலே பதில் கூறினாள் தோழிப் பெண் வசந்தமாலை.

"நீ போன காரியம் என்ன ஆயிற்று, வசந்தமாலை? அதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே நீ?"

"அதையேன் கேட்கிறீர்கள், அம்மா? நீங்கள் குறிப்புக் காட்டினீர்களே என்று நான் அவரைப் பின்தொடர்வதற்குப் போனேன். ஆனால் எனக்கும் முன்பாகவே உங்கள் தந்தையார் அவரைப் பின் தொடரச் சொல்லி ஆள் நியமித்திருக்கிறாரேயம்மா!"

—இதைக் கேட்டதும் கரமஞ்சரியின் முகம் இருண்டது. 'தந்தையார் ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்' என்ற கேள்வி அவள் நெஞ்சத்தில் பெரிதாக எழுந்தது.

"அவரைப் பின்தொடர்வதற்குத் தந்தையார் அனுப்பியிருந்த ஆள் யாரென்று உனக்குத் தெரியுமா, வசந்தமாலை....?"

"தெரியாமலென்ன? நன்றாகத் தெரியும் அம்மா! உங்கள் தந்தையார் வாணிகத்துக்காகச் சீனம், யவனம் முதலிய தொலை தூரத்து நாடுகளுக்குக் கடற்பயணம் செய்யும்போதெல்லாம் தவறாமல் உடன் அழைத்துக் கொண்டு போவாரே, அந்த ஒற்றைக் கண் மனிதர் தான் அவரைப் பின் தொடர்ந்தார்."

"யார்? நகைவேழம்பரையா சொல்லுகிறாய்? அவரை இப்படிப்பட்ட சிறிய வேலைகளுக்கெல்லாம் தந்தையார் அனுப்புவது வழக்கமில்லையே!"

"நானென்ன பொய்யா சொல்லுகிறேன்? என்னுடைய இரண்டு கண்களாலும் நன்றாகப் பார்த்ததைத் தானே சொல்லுகிறேனம்மா. அவருக்குப் பின்னால் நானும் தொடர்ந்து வருகிறேன் என்பதைத் திரும்பிப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்கு 'நகைவேழம்பருடைய ஒற்றைக் கண்ணுக் மூடிந்ததோ, இல்லையோ, நான் அவரை நன்றாகப் பார்த்துத் தெரிந்து கொண்டுவிட்டேன். அந்த ஒற்றைக் கண் முகத்தின் இலட்சணத்தைத்தான் ஆயிரம் பேர்கள் கூடிய கூட்டத்துக்கு நடுவில் பார்த்தாலும் நன்றாக நினைவு வைத்துக் கொள்ள முடியுமே!"

"அதிருக்கட்டும். நீ திரும்பி வருவதற்கு ஏன் இவ்வளவு நேரமாயிற்று? அவர் வசிக்குமிடம் இங்கிருந்து நெடுந்தொலைவில் இருக்கிறதோ?"

"அதைத்தான் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. நான் பின் தொடர்ந்து சென்று பார்த்தமட்டில் சொல்லுகிறேன். மருவூர்ப் பாக்கத்தில் உள்ள படைக்கலச் சாலைக்குள் அவரும், அவருடைய நண்பர்களும் நுழைந்தார்கள். அந்திப்போது வரை காத்திருந்தும் அவர்கள் அங்கிருந்து வெளியே வரவில்லை. அதற்கு மேலும் காத்திருப்பதில் பயனில்லையென்று திரும்பி விட்டேன். ஒருவேளை அந்தப் படைக்கலச் சாலையில் தான் அவர் வசிக்கிறாரோ என்னவோ?"


"இருக்கலாம். ஆனால் யாரோ நண்பர்களோடு படைக்கலச் சாலைக்குள் நுழைந்தாரென்று சொல்லுகிறாயே! அவர் இந்த மாளிகையிலிருந்து வெளியேறிச் செல்லும்போது தனியாக அல்லவா சென்றார்."

"நடுவழியில் அவருடைய நண்பர்கள் போலத் தோன்றிய சிலர் அவரோடு வந்து சேர்ந்து கொண்டார்கள் அம்மா. அந்த நண்பர்களில் சிலரை நேற்றுக் கடற்கரையில் நடந்த மற்போரின்போது அவருடன் சேர்த்துப் பார்த்ததாக எனக்கு நினைவிருக்கிறது."

"நகைவேழம்பரும் அவரைப் பின் தொடர்ந்து சென்றதாகக் கூறினாயே வசந்தமாலை; அவரும் நண்பர்களும், படைக்கலச் சாலைக்குள் நுழைந்தபோது நகைவேழம்பர் என்ன செய்தார்? அவர்களைப் பின்தொடர்ந்து அவரும் உள்ளே சென்றாரா? அல்லது உன்னைப் போலவே அவரும் வெளியில் தங்கி விட்டாரா?"

"அதுதானம்மா எனக்கும் தெரியவில்லை! அவர்கள் படைக்கலச் சாலைக்குள் நுழைவதை நகைவேழம்பரும் கவனித்தார். அவர் கவனிப்பதை நானும் பார்த்தேன். ஒரு விநாடி எங்கோ கவனக்குறைவாகப் பராக்குப் பார்த்து விட்டு மறுபடியும் திரும்பி நான் பார்த்தபோது நகைவேழம்பரை அவர் முன்பு நின்று கொண்டிருந்த இடத்தில் காணவில்லை. அதற்குள் எப்படியோ மாயமாக மறைந்து போய் விட்டார் அந்த ஒற்றைக் கண் மனிதர். ஒரு கணப் போதில் அவர் எங்கே மறைந்தாரென்பது எனக்குப் பெரிதும் ஆச்சரியமாயிருக்கிறது. அம்மா!"

"ஆச்சரியத்துக்குரியது அது ஒன்று மட்டுமில்லை, வசந்தமாலை! எத்தனையோ பேராச்சரிய நிகழ்ச்சிகள் இன்று இந்த மாளிகையில் சர்வ சாதாரணமாக நடக்கத் தொடங்கியிருக்கின்றன. மாலையில் தோட்டத்தில் ஓவியம் வரைந்து கொண்டிருந்தபோது தந்தையார் பின்புறத்து மறைவிலிருந்து திடும் பிரவேசம் செய்து பட்டிக்காட்டான் யானை பார்ப்பது போல் அந்த இளைஞரை அநாகரிகமாக உற்றுப் பார்த்தாரே; அது அவருக்கு எவ்வளவு அவமானமாகத் தோன்றியிருக்கும் தெரியுமா? அது தான் போகட்டும். ஏதோ கொலைக்குற்றம் செய்து விட்டுப் போகிறவனைப் பின்தொடர்கிறாற் போல் நகைவேழம்பரை எதற்காக அந்த இளைஞனைப் பின் தொடர்ந்து போகச் செய்ய வேண்டும்? நான் உள்ளே இருக்கும்போதே என்னிடம் சொல்லி அனுமதி கேட்காமல் எனது சித்திரச் சாலைக்குள் நுழையத் தயங்குகிற தந்தையார் இன்று நான் இல்லாதபோதே சித்திரச் சாலைக்குள் நுழைந்திருக்கிறார். மாலையில் தனக்குச் சேரவேண்டியபொற்கழஞ்சுகளை வாங்கிக் கொண்டவுடனே அந்த ஓவியன் இங்கிருந்து வெளியேறிப் போய் விட்டானென்று நான் நினைத்திருந்தேன். இப்போது சித்திரச்சாலைக்குள் தந்தையாரோடு அவன் எப்படி வந்தானென்று தெரியவில்லை. இவையெல்லாமே பேராச்சரியங்கள் தான். ஒன்று, இரண்டா? இப்படியென்று இந்த



"நான் பார்த்து கொடுத்த அல்வாவை சாப்பிட்டீர்களே? எப்படியிருந்தது?" என்று ஆவலுடன் கேட்டாள் மனைவி.



கணவன் பதிலொன்றும் சொல்லாமல் ஒரு காகிதத்தில் எழுதிக் காட்டினார்:

"மடக் கழுதை! அல்வாவா அது? வாயைத் திறக்க முடியாமல் இறுக ஒட்டிக் கொண்டு ஒரே அவஸ்தை. ஓடு! ஓர் இடுக்கியைக் கொண்டு வா, சீக்கிரம்!"



இடியும் மின்னலுமாகச் 'சோ'வென மழை கொட்டிக் கொண்டிருந்தது. மழைக்கு ஒதுங்கிய இரு நாட்டுப்புறங்களில் ஒருவனுக்கு மின்னலைக் கண்டதும் திடீரென்று ஒரு சந்தேகம் பிறந்தது. உடனே தன் சகாவைப் பார்த்துக் கேட்டான்:

"என் அண்ணாச்சி! இந்த மின்னல் ஏன் உண்டாகுதுன்னு தெரியலியே!"

"ப்பூ! இது கூடவா தெரியலே உனக்கு? எங்கே மழை பெய்துகிட்டிருக்குன்னு கடவுள் வெளிச்சம் போட்டுப் பார்க்குறாரு, அண்ணே!

மாளிகையே பேராச்சரியமாகி விட்டது" என்று சொல்லிக்கொண்டே வந்த கரமஞ்சரியின் பவழ மெல்லிதழ்களின் முன்னால் நீண்ட வசந்தமாலையின் பூங்கமலக் கை மேலே பேசவிடாமல் மெல்லப் பொத்தியது. திடீரென்று இருந்தாற் போலிருந்து தோழிப் பெண் தன் வாயைப் பொத்தியதைக் கண்டு கரமஞ்சரிக்கு அடக்கமுடியாத சினம் மூண்டது.

"அம்மா! பேச்சை நிறுத்திவிடுங்கள். யாரோ மிக அருகிலிருந்து நாம் பேசுவதை ஒட்டுக் கேட்கிறார்கள்" என்று கரமஞ்சரியின் காதருகில் இரகசியமாய் முணுமுணுத்தாள் தோழி வசந்தமாலை. இதை முணுமுணுக்கும் போது தோழியின் குரல் அதிர்ச்சியும் நடுக்கமும் விரவியதாயிருந்தது. தோழியின் இந்த எச்சரிக்கைக் குரல் காதில் ஒலித்திருக்கவில்லையானால் திடீரென்று அவள் மரியாதையின்றித் தன் வாயைப் பொத்தியதனால் தனக்கு மூண்டிருந்த கோபத்தில் அவளுடைய கன்னத்தில் பளீரென்று அறைந்திருப்பாள் கரமஞ்சரி.

"அதோ அந்தப் பட்டுத் திரை காற்றில் அசைகிறதே; அதன் கீழே பாருங்கள், அம்மா!" என்று மறுபடியும் கரமஞ்சரியின் காதருகில் முணுமுணுத்தாள் தோழி. அவள் சுட்டிக் காட்டிய திசையில் கரமஞ்சரியின் பார்வை சென்றது. பார்த்தவுடன் அவள் கண்களில் பீதி நிழல் படிந்தது. திடுக்கிட்டாள்.

அலங்கார மண்டபத்தின் முகப்புத் திரைச்சீலை மேலே எழுந்து தணியும் நீரலை போல் அப்போது வீசிய காற்றில் ஏறி இறங்கியது. திரைச் சீலை மேலெழுந்தபோது பூ வேலைப்பாடுகள் பொருந்திய அந்தப் பட்டுத் துணியின் மறுபுறம் யாரோ நின்று கொண்டிருப்பதற்கு அடையாளமாக இரண்டு பாதங்கள் தெரிந்தன. கரமஞ்சரி பார்த்துக் கொண்டிருந்த போதே அந்தப் பாதங்கள் அங்கிருந்து நகர முற்பட்டன.

உடனே ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய், இரவில் படுக்குமுன் தன் பாதங்களுக்கு இட்டுக் கொள்வதற்காக அங்கே அரைத்து வைத்திருந்த வாசனைச் செம்பஞ்சுக் குழம்பின் சிறிது வாரி நகர்ந்து கொண்டிருக்கும் அந்தப் பாதங்களில் போய்த் தெறிக்குமாறு வீசினாள் கரமஞ்சரி. அதனால் அப்போது அந்தப் பகுதி முழுதும் செம்பஞ்சுக் குழம்பின் நறுமணம் கமகமவென எழுந்து பரவியது. தலைவி அப்படிச் செய்ததின் தந்திரக் குறிப்பென்ன என்று புரியாமல் திகைத்து நின்றாள் தோழி வசந்தமாலை. (தொடரும்)

கால்கேட்டின் மூலம்

நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் விசேஷ, ஊடுருவும் தன்மையுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.




நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 32 QT-TAM.

கண்ணாடி மாளிகை



முதன் முதலாக அவரைச் சந்திக்க நேர்ந்தபோது எனக்கு அருவருப்புத்தான் உண்டாயிற்று. அந்தக் கல்லூரி முழுதும் தேடி அலைந்தாலும் அவரைக் காட்டிலும் மோசமான தோற்றம் கொண்ட ஒருவர் தென்பட மாட்டார் என்று தீர்மானித்தேன்.

ஒட்டி உலர்ந்தது போன்ற கன்னங்களிலிருந்து கிளம்பிக் கருகருவென்று நீண்டு வளர்ந்த தாடியை அவருடைய ஒரு கரம் அடிக்கடி தடவிக் கொடுத்தது. ஒற்றை நாடியான சரீரத்தைச் சுற்றிச் சற்று அழுக்கேறிக் கசங்கிக் கிடந்த ஆடைகள். அவற்றை அணியும் விதத்தில்கூட மற்ற மாணவர்களைப் போல் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை அவர். நாஸூக்கு என்பது லவலேசமுமின்றி ஒருவித அலட்சிய சுபாவத்துடன் முரட்டுத்தனமாகக் காட்சியளித்தார்.

மனத்துக்குள் கிளர்ந்தெழுந்த ஓர் உபமானம் மௌனமாக என்னை நகைக்க வைத்தது.

தூரத்தில் இருந்த அந்தப் பொம்மை அசைந்தது. என்னை நெருங்கியது. அந்த நடையிலே இருந்த கம்பீரத்தால் கவர்ந்திழுக்கப்பட்டபோது உண்டான தடுமாற்றத்திலிருந்து நான் விடுபடுமுன்னரே அந்தக் கண்கள்...விசாலமான நயனங்களின் தீட்சண்யமான பார்வை என் இதயத்தை ஊடுருவி நரம்புகளைச் சுண்டி நாதம் எழுப்பியது. அந்த இன்ப வேதனையில் பொறுக்க மாட்டாது விலகிச் சென்று விட்டேன் நான்.

இதற்கு முன்பே எங்கோ அவரைக் கண்டு பேசி நெருங்கிப் பழகி இருப்பதுபோல் ஒரு பிரமை. எங்கே?...எங்கே? மூளையைக் குடைந்து விடையை அறிய முயன்றேன். சட்டென்று எனக்கு நினைவுக்கு வந்தது. லிங்கன்! ஆப்ரஹாம் லிங்கன்தான் இவர்!

“அது யார் அது ஆப்ரஹாம் லிங்கனைப் போல?” என்று கேட்டேன் என் தோழியிடம்.

கொல்லென்று சிரித்தாள் அவள் அடக்க மாட்டாமல். ‘நன்றாகச் சொன்னாய்!’ என்று கூறி விட்டு மீண்டும் சிரித்தாள். அந்தரங்கம் எதையும் காப்பாற்றத் தெரியாத அருமைத் தோழி அவள்.



ஒரே நாளில் கல்லூரி முழுதும் நான் அவருக்குப் பெயர் சூட்டிய செய்தி பரவி விட்டது. எல்லாருமே அவரை லிங்கன் என்று அழைக்க ஆரம்பித்தார்கள். புனைபெயர் வைத்தவள் நான்தான் என்ற விவரமும் வெளியாகி யிருக்க வேண்டும். இல்லாமலா நன்றி தெரிவிக்கத் தாமாகவே என்னை நாடி வந்தார்?

“இன்றைக்குப் புரொபஸர் சிவராமன்கூட என்னை லிங்கன் என்று கூப்பிட்டார்” என்றார் அவர் நகைத்துக் கொண்டே. உவகைப் பெருக்கை உணர்த்த வேண்டிய அந்தச் செயலிலே உயிர் இல்லை. “பெயரளவிலாவது, மிக உன்னதமான நிலைக்கு என்னை உயர்த்தினாயே, ரொம்பச் சந்தோஷம்!” என்றபோது சோகமும் சுயவெறுப்பும் போட்டியிட்டுப் பொங்கித் ததும்ப அவர் நாகமெனச் சீறுவதாகவே எனக்குப் பட்டது.

அவர் போய் விட்டார். அந்தச் சிரிப்பு என்னை விட்டு நீங்கவில்லை. நெஞ்சைச் சூழ்ந்து என்னைச் சித்திரவதைக்குள்ளாக்கியது.

அவரைப் பற்றிய மேலும் பல தகவல்களைச் சிநேகிதிகளிடம் விசாரித்துச் சேகரித்தேன். அவை என்னை நெகிழ வைத்தன.

எம். ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அவர் பரம ஏழை. உற்றார் உறவினர் யாருமில்லையோ அல்லது எக் காரணத்தினாலோ அவருக்கு உதவ முன் வரவில்லையோ, புரியவில்லை. மாதம் பத்து ரூபாய்க்கு ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தன்னந்தனியாக அதில் வசித்து வந்தார். தாடி வளர்ப்பது, தனக்கு ஒரு தனித்தன்மையை உருவாக்கிக் கொண்டு அதன்மூலம் மாணவர்களிடையே ஒரு முக்கியத்துவம் பெறுவதற்காக அல்ல; பிளேடு வாங்க அவர் பொருளாதார நிலை இடமளிக்காததால்! முரட்டுத் துணிகளைச் சற்றும் சங்கோசமின்றி அணிவது சிக்கனத்தை முன்னிட்டு! வண்ணானுக்கு, காப்பிக்கு என்றெல்லாம் வீண் செலவு செய்வதில்லை அவர்! பாண்டையும் சட்டையையும் சோப்புப்போட்டுத் தோய்த்து உலர்த்திய பிறகு பெட்டிக்கடியில் மடித்து வைத்து அதன்மீது உட்கார்ந்து படிப்பதால் தான் அவற்றை உடுக்கும்போது ஓரளவுக்கேனும் மடிப்புக் கலையாமல் இருக்கின்றன என்பது பெரும்பாலோரது ஊகம். மாலை நேரத்தில் அவருடைய அறைப் பக்கமாக நடந்தால் உள்ளேயிருந்து ‘டக் டொக் டக் டொக்’ என்று சத்தம் எழும். பக்கத்துக்கு நாலரை அணா வீதம் தினம் இரண்டு மணி நேரம் அவர் யாருக்கு வேண்டுமானாலும் கடகடத்துப்போன அப் பழங்கால டைப்ரைட்டரில் டைப்படித்துத் தரத் தயார். ஒவ்வொரு நாளும் வேலை இருக்கும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. ஆனாலும் அந்த ஓய்வுநேர உழைப்பைக் கொண்டுதான் அவர் வாழ்க்கையே நடைபெற்று வருகிறது. படித்துப் பட்டம் பெறுவதிலே உள்ள ஆர்வம் அல்லும் பகலும் அவரை ஆட்டிப் படைக்கிறது.

இவற்றையெல்லாம் கேட்டறிந்ததும் மன்னிக்க முடியாத குற்றம் எதையோ புரிந்து விட்டதுபோல் என் இதயம் படபடத்தது. தமக்கென ஒரு லட்சியத்தை வகுத்துக் கொண்டு அதனை எப்பாடு பட்டாகிலும் எட்டிப் பிடிப்பதில் முனைந்திருக்கும் ஒருவரையா ஏளனம் செய்தோம் என்று உள்ளம் நொந்து உடல் குன்றிப் போனேன்.

“உங்கள் மனத்தைப் புண்படுத்தும் எண்ணமே எனக்கில்லை” என்று தயக்கமின்றி அவரிடம் தவற்றை ஒப்புக் கொண்டேன்.

“நான் வருந்துவதாக யார் கதை கட்டி விட்டார்கள்? ஒருவேளை நீயாகவே கற்பனை செய்து கொண்டாயோ?” என்று கேட்டு முறுவலித்தார் லிங்கன் தாடியை மெல்ல உருவி விட்டவாறே. “உண்மையில் உனக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன் நான்.”

சந்தேகத்துடன் என் புருவங்கள் நெரிவதைக் கண்டு அவர் மேலும் தெளிவுபடுத்தினார். அதுவரையில் தன் ஏழைமையைக் குறித்து ஏங்கியவாறே இருந்த அவரது கண்களைத் திறந்து விட்டேனாம், புத்துணர்ச்சி

அளித்தேனும். லிங்கன் என்ற புதுப் பெயர் பிரபலமான பிறகு உண்டான மனமாற்றமாம் அது. "லிங்கன் ஒரு சாதாரண விறகு வெட்டியின் மகன்தான்; ஆனால் நாளடைவில் நாட்டுக்கொரு தலைவராக, மாநிலம் போற்றும் நல்லவராக அவர் விளங்கவில்லையா?" என்று கேட்டார் அவர். "எனக்குத் தன்னம்பிக்கை ஊட்டிய நீயே கவலைப்படுகிறாயே அர்த்தமில்லாமல்."

ஒருவிதத்தில் சாந்தி பெற்ற என் மனம் மற்றொரு வகையில் நிம்மதி இழந்து தவித்தது. அந்தக் கண்கள்...உடலின் அணுக்களைக் கூடக் கூறு போட்டு ஆராயும் சக்தி படைத்த அந்தக் கருவிழிகள் சதா சர்வகாலமும் என்னைத் துன்புறுத்தி வந்தன.

நிலைக்கண்ணாடியின் முன் நின்று என்னை அவருக்காகச் சிங்காரித்துக் கொண்டேன். என் அழகுக்கு அவர் அடிமையாகாமல் இருக்க முடியாது என்ற கர்வம் தலைதூக்க இளஞ்சிவப்பு நிறத்தில் சேலை கட்டி ஒய்யாரமாக நடந்தேன் அவர் முன்னிலையில். மார்புடன் அணைத்தவாறு நான் எடுத்துச் சென்ற புத்தகம் லிங்கனின் வாழ்க்கை வரலாறு பற்றியது. ஏற்கெனவே பன்முறை படித்து அலுத்துவிட்ட ஒன்றுதான். மீண்டுமொரு முறை படிக்க எனக்குப் பொறுமையும் இல்லை. மேல் அட்டையிலிருந்த ஆப்ரஹாம் லிங்கனின் உருவம் நன்றாகத் தெரியும்படி நான் புத்தகத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது என் லிங்கனின் கவனத்தைக் கவர நான் கையாண்ட தந்திரம், அவ்வளவுதான்.

எனக்குக் கிட்டியது தோல்வியே. கொஞ்சமாவது அவர் என்னை லட்சியம் செய்ய வேண்டுமே? கிடையாது! ஆணவம் அடங்கச் சிரம் தாழ்த்திய எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. நாளைக்கொரு பாணியில் என்னை அலங்கரித்துக் கொண்டதெல்லாம் வீணாயின. இறுதியில் கோபத்தைத் தாங்க மாட்டாமல் ஒரு நாள் அவரையே விண்டு கேட்கத் துணிந்தேன். "என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

குறும்புத்தனம் மிக்க கருவிழிகள் இரண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட குதூகலத்தில் தந்தத்தில் கடைந்தெடுத்தது போன்ற என் தேகத்தைக் கட்டி அணைக்க முற்பட்டன. கைகளைப் பின்னால் கோத்துக் கொண்டு மார்பு விம்ம நின்ற நான் அந்த உன்னிப்பான கூர்நோக்கைத் தாங்கத் திராணி இழந்து தொய்ந்தேன்.

"ஒரு செல்வச் சீமானின் செல்வப் புதல்வி நீ என்பது நிதர்சனமாகத் தெரிகிறது" என்றார் லிங்கன் என் கேள்விக்குப் பதிலளிக்கும் மாதிரியில்.

"அப்புறம்...?" என்று அவரைத் தூண்டினேன்.

"வேறொன்றுமில்லை" என்றார் அவர் கடுமையாக.

எனக்குண்டான ஏமாற்றத்துக்கு எல்லையே இல்லை. நிதானமாகத் திரும்பி நடந்தேன்.

"புஷ்பா!"

வெற்றி கொண்ட களிப்புடனும் அளவு கடந்த ஆர்வத்துடனும் கண்கள் மலர இதழ்கள் துடிக்க அவரை ஏறிட்டுப் பார்த்தேன் நான். என்னைப் பெயர் சொல்லி விளித்தபோது அவர் குரலில்தான் எவ்வளவு ஆதுரம் தொனித்தது? அதைக் கண்டு கொள்ளத் தவறவில்லை என் கள்ள நெஞ்சம்.

நாம் ஒருவரை யொருவர் அதிகமாகச் சந்திக்காமல் இருப்பது நல்லது என்று கெஞ்சுவது போலக் கேட்டுக்கொண்டபோது அவரது நாத் தழு தழுக்கத்தான் செய்தது.

மனத்தைக் கட்டி ஆளும் திறமை தனக்குண்டு என்ற நம்பிக்கையை அவர் இழந்து விட்டார்! அதைப் புரிந்து கொண்டதும் ஆனந்தத் தாண்டவம் ஆடியது என் இதயம்.

"ஏன்?" என்று அவரை நான் வினவிய போது என் வாயில் குறுநகை யொன்று குமிழியிட்டது.

"நம்மிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை நான் உணர்ந்திருக்கிறேன் புஷ்பா!"

பரிதாபம் பொங்கிப் பெருகியது எனக்குள்ளே.

"உங்கள் தன்னம்பிக்கை யெல்லாம் என்ன வாயிற்று? விறகுவெட்டியின் மகன் வானளாவப் புகழ் பெற்றதாக அன்று மார் தட்டினீர்களே!"

"அசல் லிங்கன், நேர்மையாக உழைத்துப் பாடுபட்ட விறகு வெட்டியின் மகன். இந்தப் போலி லிங்கனோ..."

வாக்கியம் முற்றுப் பெறு முன்னரே அவர் என் எதிரிலிருந்து அகன்று அப்பால் சென்று விட்டார். அதைப் பற்றி நான் சஞ்சலப்படவில்லை; சிந்திக்கக்கூட இல்லை. என்னை அவர் விரும்புகிறார் என்பது ஐயம்திரிபுக்கிடமின்றி நிரூபணமான பிறகு நான் ஒரு புதிய உலகத்தில் சஞ்சரித்தேன்.

சோலையும் கனியும் மலர்களும் அவற்றின் பல்வேறு மணங்களும் புள்ளினங்களும் அவை இசைக்கும் கீதங்களும் குறைவறக் குடிகொண்டிருந்த அந்த உலகத்தில் மானிட உருவிலே நானும் என் லிங்கனும் மட்டும்தான் இருந்தோம். மறந்து விட்டேனே! அவர் தாடியும் கூடவே இருந்தது!

அசுவமேத யாகத்தில் அப்பாவுக்கு அளவற்ற பற்றுதல். அன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்குமேல் அவருக்கு லாபம். பை கனத்தபோது மனம் இலேசாகி யிருந்தது. ஆயிரம் ரூபாய் என்பது அவருக்கு அலட்சியமானாலும் குதிரைப்பந்தயத்தில் தாம் வெற்றி பெற்றதிலே அலாதியான ஆனந்தம். பொன்னான அந்தச் சந்தர்ப்பத்தைக் கை நழுவவிடவில்லை நான். கிண்டியிலிருந்து அடையாறு நோக்கிக் காரை ஓட்டி வருகையில் அவர் மனத்தைக் கிளறிப் பார்த்தேன்.

"அப்பா! லிங்கனைப் பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டேன்.

"அபிப்பிராய பேதத்துக்கே அதில் இடமில்லையே! மகா மேதாவி! பெரிய மகான்! எதற்குக் கேட்கிறாய் புஷ்பா?"

"அவரைத்தான் அப்பா நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்."

"என்ன? என்ன?" எனக்குச் சித்தப்பிரமை பிடித்து விட்டதோ என்று யோசிப்பதுபோல் முகத்தை வைத்துக் கொண்டார்.

என் விருப்பத்தை அவருக்குக் கோடி காட்டியதற்கப்புறம் விஷயத்தை விண்டுரைப்

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம்	நிலைத் நிதி
ரூ. 2,00,00,000	ரூ. 2,05,00,000

எங்கள்

"ரெக்கரிங் டிபாஸிட்" திட்டம்

பிரதிமாதம் தொடர்ந்து செய்யும் டிபாசிட் தொகையான	ரூ. 10	ரூ. 100	ரூ. 500
கீழ்க்கண்டபடி பெருகும்:			
46 மாதங்களில்	ரூ. 500	ரூ. 5000	ரூ. 25000
86 மாதங்களில்	ரூ. 1000	ரூ. 10000	ரூ. 50000

சேர்மன்
ஜி. டி. பிர்லா

ஜெனரல் மானேஜர்
எஸ். டி. சதாசிவன்

UCO-3/61


நாட்டின் வளமை
தாயின் வளமையைப் பொறுத்திருக்கிறது




கர்ப்பிணி நிலையிலிருந்தாலும் அல்லது குழந்தைக்குப் பாலூட்டும் நிலையிலிருந்தாலும் சரி, ஒரு தாயாரின் ஆரோக்யமான போஷாக்கிற்கு வினோ-மால்ட் பெரிதும் உதவி செய்கிறது. அவசியமான போஷாக்குப் பொருட்சத்திகள் நிரம்பி இருப்பதால், தாய்மைக் காலத்திலுள்ள பெண்மணிகளின் ஆரோக்ய வளர்ச்சிக்கு இன்றியமையாத உணவுப் பொருளாக விளங்குகிறது.

VINO-MALT

பெங்கால் இம்யூனிட்டி
கம்பெனி லிமிடெட்
இம்யூனிட்டி ஹவுஸ், கல்கத்தா-13





விவித பாரதி

ஒவ்வொரு வாரமும் 66 மணி நேரம் இனிய பொழுது போக்கு நிகழ்ச்சியை ஒலிபரப்புகிறது

விவித பாரதி

ஒவ்வொரு மாதமும், 45,000 ரசிகர்களின் தபால்களைப் பெறுகிறது

விவித பாரதி

இந்தியா முழுவதும் ஆசியா, ஆப்ரிக்கா நாடுகளில் பல இடங்களிலும் நேயர்களால் கேட்கப்படுகிறது

DA 60-693

பதில் எனக்குச் சிரமமொன்று மிருக்கவில்லை. அவர் ஒருவாறு புரிந்து கொண்டதும் பரிவுடன் என்னைத் தட்டிக் கொடுத்தார். "வருஷக்கணக்காக என்னிடம் மறைத்துத் தானே வைத்திருந்தாய்?" என்று ஆதங்கத்துடன் வினவிய அவர், "நீதான் என்ன செய்வாய், பாவம்! தாயில்லாப் பெண்!" என்று சமாதானமும் சொன்ன போது அவர் கண்களை நீர்த்திரையிட்டு மறைத்தது.

அன்றிரவு முழுதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாள் காலையில், "அவனை மறந்துவிடு!" என்று அப்பா கண்டிப்புடன் உத்தரவு போட்ட போது நான் அயர்ந்து போய்விட்டேன்.

"அப்பா!" என்று கூவினேன்.

"திருதிருவென்று அவன் விழித்ததைக் கண்டதுமே திருட்டுப் பயல் மகனாக இருப்பானோ என்று நினைத்தேன். அது சரியாகப் போயிற்று!"

உயிரைப் பறிக்கும் திறன் வாய்ந்த அந்தப் பார்வையையா அப்பா பழிக்கிறார்? என் உள்ளத்தில் லிங்கன் ஏற்றி வைத்த காதல் சுடர் ஒளி உமிழ்ந்து பிரகாசித்தபோது உண்டான வேதனையே பொறுக்கக் கூடியதாயிருந்தது. அப்பாவின் கடுசொற்களைத் தாள மாட்டாது துடித்தேன் நான்.

"வீண்பழி சுமத்தாதீர்கள் அப்பா! உங்களுக்கே அது அடுக்காது" என்று பதறினேன்.

"எனக்கென்ன பைத்தியமா, அநாவசியமாக அவனைத் தூற்ற? நல்லது கெட்டதைப் பகிர்ந்துகொள்ள அவனுக்கு யாரும் இல்லை என்றாயே என்பதால் அக்கம்பக்கத்தில் விசாரித்தேன். அவன் அப்பா தாம் காஷியராக இருந்த பாங்கியில் இருபதாயிரம் ரூபாயை அபேஸ் செய்து விட்டுக் கம்பி எண்ணுகிறாராம்! அந்தத் துக்கத்திலேயே அவன் அம்மாவும் செத்துப் போய் விட்டாளாம்! உறவினர்கள் யாரும் அவன் இருக்கும் பக்கமே எட்டிப் பார்க்காததன் காரணமும் இதுவேதான்."

ஸ்தம்பித்து நின்றேன் நான்.


"நான் சொல்வது பொய் என்று உனக்குப் பட்டால் லிங்கனிடமே நேரடியாகக் கேட்டு விடலாம். கிளம்பு!"

"வேண்டாம் அப்பா, வேண்டாம்! அவரைச் சந்திக்க எனக்குத் தெம்பு இடையாது" என்று கூறிவிட்டேன் நான்.

* * *

அப்பாவின் ஜோஸ்யம் அன்று பலித்தது. சொல்லி வைத்தாற் போல் எங்கள் 'புஜுபேபி' மூன்றாவது ரேஸில் முதலில் வந்தது. ஆச்சரியம் தாங்கவில்லை எனக்கு. அவர் கரங்களை இறுகப் பற்றியவாறே சிறு குழந்தை போலத் துள்ளிக் குதித்தேன்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு வீடு திரும்பக் காரில் இருவரும் ஏறிய போது எந்நாளுமில்லாத திருநாளாக அப்பா பின் பக்கத்தில் அமர்ந்தார். அவர் நடத்தை புதிராகத் தோன்றியது எனக்கு. காரைக் கிளப்பியவள் எதிரே பொருத்தப்பட்டிருந்த கண்ணாடியில் தற்செயலாக அப்பாவை நோக்கினேன். இப்படியும் அப்படியும் கள்ளத்தனமாக நோட்டம் செலுத்துவது போலிருந்தது அவர் முகபாவம். பையிலிருந்து யாருமறியாமல் ஒரு நூறு ரூபாய் நோட்டை உருவினார். பின் ஸீட்டில் அவர் உட்கார்ந்தது அவருடைய அந்தச் செய்கைகளை நான் கவனித்து விடக்கூடாது என்பதற்காகத்தானா? கண்ணாடியில் அவரை நான் கண்காணிக்க முடியும் என்பது துரதிர்ஷ்ட வசமாக அப்போது



அவருக்குத் தோன்றவில்லை! எட்டாக அந்த நோட்டை மடித்துத் தமது உள்ளங் கையில் திணித்துக் கொண்டார் அவர்.

மோட்டாரைச் செலுத்த ஆரம்பித்த என்னைச் சற்று நிற்குமாறு கேட்டுக் கொண்ட அவர், தொலைவில் சாம்பல் நிறச் சட்டை அணிந்து நின்ற ஒருவரை, ''மிஸ்டர் பானர்ஜி!'' என்று கூவி அழைத்தார்.

பானர்ஜியுடன் கைகுலுக்கி, ''கங்கிராசுலேஷன்ஸ்'' என்று தமது பாராட்டுதல்களைத் தெரிவித்ததும், ''போகலாம் புஷ்பா'' என்று கூறிக் கார் ஓட்ட அனுமதி கொடுத்தார் எனக்கு.

நூறு ரூபாய் நோட்டை அவர் திரும்பவும் பைக்குள் போட்டுக் கொள்ளவில்லை; யாரிடமும் தரவுமில்லை. எங்கே மாயமாய் மறைந்து போய்விட்டது அது?

''யார் அப்பா அது, பானர்ஜி?''

''குதிரைகள் டிரெயினர், புஷ்பா! புரூ பேரியைப் பழக்குபவனும் அவன்தான்!''

''ஓகோ!'' என்றேன் நான்.

''ஏ—ஒன் மாப்பிள்ளையைக் கண்டு பிடித்திருக்கிறேன். ஐ. ஏ. எஸ் பாஸ் செய்திருக்கிறான். எழுநூற்றைம்பது ரூபாய் சம்பளம். மேலும் உயர வழி வகை உண்டு. ஜோசியரைக் கூப்பிட்டு நான் பார்க்கச் சொல்ல வேண்டியதுதான் பாக்கி'' என்று சொல்லிக் கொண்டே வந்தவர் குதூகலத்துடன் ''அநாவது உனக்கு அவனைப் பிடித்திருந்து சம்மதம் என்றால்...'' என்றும் சேர்த்துக் கொண்டார் என்னைத் திருப்திப் படுத்துவதற்காக.

நான் பதிலுரைக்கவே யில்லை. என் சிந்தனையெல்லாம் வேறெங்கோ இருந்தது.

திங்கட்கிழமை அப்பாவை ஆபீசுக்கு அனுப்பி வைத்து விட்டு அவர் மேஜையைக் குடைந்து துப்பறிந்தேன். நான் எதிர்பார்த்த படியே அவருடைய டயரியில் விலாசங்களைக் குறிக்கும் பகுதியில் பானர்ஜியின் வீட்டு விலாசமும் இருந்தது...

கதவைத் தட்டியபோது அதைத் திறந்தது ஒரு பெண். நிறைமாதக் கர்ப்பிணி. ''மிஸ்டர் பானர்ஜி இருக்கிறாரா?'' என்று குரலில் அன்பு இழையோடக் கேட்டேன்.

''கூப்பிடுகிறேன். இப்படி உட்காா்'' என்று வரவேற்று விட்டு அவள் கணவனுக்குக் குரல் கொடுத்தாள்.

பானர்ஜி என்னை உடனடியாக அடையாளம் கண்டு கொண்டார். ஒரே நாளில் முகம் மறந்து போகுமா, என்ன? பீதி படர்ந்தது அவர் கண்களில்.

'உங்களுடன் சில நிமிஷங்கள் தனிமையில் பேச வேண்டும்' என்று கூற வாயெடுத்தேன். அதற்கு முன்னால் பானர்ஜியே சாமர்த்தியமாக முந்திக் கொண்டார். ''இவள் மிஸ்டர் நடேசனுடைய மகள். காப்பி கொண்டு வருகிறாயா?'' என்று கேட்டார் தமது மனைவியிடம்.

'சிரமப்பட வேண்டாம்' என்று உபசாரத்துக்குக் கூட நான் சொல்லவில்லை. அவள் அப்பால் போனதும், ''உடனடியாக எனக்கு உண்மை தெரிய வேண்டும்'' என்றேன் அதிகார தோரணையில்.

சிலவினாடிகள்தான் தாமதித்தார் பானர்ஜி. போலீஸாரிடம் நான் போனால் முதலில் மாட்டிக் கொள்ளக் கூடியவர் என் அப்பா தானே? அதனால் நான் அப்படி ஏதும் செய்து விட மாட்டேன் என்று நம்பினார். அவருக்குத் தைரியம் பிறந்திருக்க வேண்டும். என் கோரிக்கையை நிறைவேற்றுவதால் தமக்கு நஷ்டமொன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தவராக மர்மத்தை விடுவித்தார்.

''என் மனைவி பூரண கர்ப்பிணி. ஒன்பதரை மாதங்கள் ஆகிவிட்டன. சஸ்திர சிகிச்சை செய்துதான் தாயையும் குழந்தையையும் காப்பாற்ற வேண்டியிருக்கும் என்று அபிப்பிராயப்படுகிறார் டாக்டர். கையில் காலணா கிடையாது. உன் அப்பாவைக் கடன் கேட்டேன். தன் சொற்படி நடந்து கொண்டால் இனாமாகவே நூறு ரூபாய் தருவதாகச் சொன்னார். புளூபேரி வெற்றி அடைய வேண்டுமென்பது வெகு நாட்களாக அவர் கண்டு வரும் கனவு. அதற்குத்தான் என் உதவியை நாடினார்.''

''பிறகு?'' என்று அவரைத் தூண்டி விட்டேன் நான்.

''புளூபேரி நன்றாகவே ஓடும். அதை முந்தக் கூடியது ''லேட்லீஸ்'' ஒன்றுதான். மற்றவற்றை அது தன் கிட்டத்திலேயே அண்ட விடாது. ஆகவேதான்...''

''ஆகவே?...''

''லேட்லீஸுக்கு வைத்த தீனியில் தூக்க மாத்திரைகள் சிலவற்றைப் பொடி செய்து கலந்து விட்டேன். பிறகு புளூபேரி ஜெயிப்பதில் தடை ஏதும் இருக்கவில்லை.''

அவருக்கு மலர்ந்த வதனத்துடன் என் நன்றியைத் தெரிவித்து விட்டு வீட்டுக்கு விரைந்தேன்.

அன்று மாலை என்னைப் பார்ப்பவர்களை வியக்கும்படி சிங்காரித்துக் கொண்டு வெளியே கிளம்பியபோது, ''எவ்வளவு தூரம்?'' என்று கேட்டார் எதிரே வந்த அப்பா.

''லிங்கன் அறைக்குப் போகிறேன், அப்பா!'' என்றேன் இடமாக.

தூக்கி வாரிப்போட அப்பா தலையைக் கோதி விட்டுக் கொண்டார். ''என்ன சொன்னாய்?''

''பெரிய தவறு இழைக்கவிருந்தேன், அப்பா! தகப்பன் செய்த குற்றத்துக்காக மகனையும் வெறுக்க முற்பட்டேன். என்னை அந்தப் பாபத்திலிருந்து காப்பாற்றினீர்கள்!'' என்று கூறிவிட்டு மேலே நடந்தேன். 'சிறையில் வாடும் ஒருவருக்கும் சிறையில் வாழ வேண்டிய ஒருவருக்கும் இடையில் வித்தியாசம் நிறைய இல்லையே?' என்று முணுமுணுத்தது என்னுடைய வாய்.

''புஷ்பா! புஷ்பா! இதென்ன பைத்தியக்காரத்தனமாக உளறுகிறாய்? கொஞ்சம் நில்லேன்!'' என்று அதட்டினார் அப்பா.

வாசல் படிகளில் இறங்கிவிட்ட நான் அவரை ஏறிட்டு நோக்கினேன். ''கண்ணாடி மாளிகைக்குள் இருந்து கொண்டு கல்லெறியக் கூடாது'' என்ற ஆங்கிலப் பழமொழியை அவருக்கு நினைவூட்டிவிட்டு காரில் ஏறினேன்.

அப்பா என்னைத் தடுக்கவில்லை.

லிங்கன் என்னை மறுக்கவில்லை.

அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

சோமு

14. லண்டன் தொழிலாளர்கள்

லண்டன் நகரத்தின் "பேகர் வீதி"யிலே வானத்தையே பூமிக்குக் கொண்டு வந்து, சில மணி நேரங்கள் நம்மை ஆகாய வீதியிலே அழைத்துச் செல்கிறார்கள்! இந்த ஒளி அதிசயம் நடக்கும் இடத்துக்குப் பெயர் "ப்ளானெடேரியம்." இந்த அருமையான காட்சிச் சாலைக்குச் செல்வதற்கு முன்னால், மற்றக் காட்சிச் சாலைகளிலே கண்ட அரிய பொருள்களைப் பற்றி மேலும் இரண்டொரு செய்திகளை இங்கே குறிப்பிட வேண்டும்.

'விக்டோரியா அண்ட் ஆல்பெர்ட் ம்யூஸியம்' காட்சிச் சாலையிலே வைத்துள்ள திப்பு சுல்தானின் பாக்கெட் கடிகாரத்தைப் பற்றி மதுரை நண்பர் விளக்கம் கேட்டிருக்கிறார்:

"திப்பு சுல்தான் காலத்திலேயே பாக்கெட் கடிகாரம் உபயோகப்பட்டதா? அப்படியானால் அது எங்கே செய்யப்பட்டது? அதைப் பற்றி ஏதாவது குறிப்பு அந்தக் காட்சிச் சாலையிலே வைத்திருக்கிறார்களா?"

இவ்வாறு அந்த அன்பர் கேட்டிருக்கிறார்.

திப்பு சுல்தான் உபயோகித்த பாக்கெட் கடிகாரத்தின் கூட்டில் T. L. என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கடிகாரத்தைச் செய்தவர் T. L. என்ற தொழிலாளி யென்றும், அவர் லண்டனில் வாழ்ந்த ஒரு பிரபல கடிகார நிபுணர் என்றும் சரித்திர ஆசிரியர்கள் கணிக்கிறார்கள். தவிரவும், "This watch bears a London Hall mark for 1768 and is inscribed Ellicot London with a series No. 6154" என்ற குறிப்பையும் பார்த்தேன். இதிலிருந்து இந்தத் தங்கக் கடிகாரம் 1768-ம் ஆண்டில் லண்டனிலே செய்யப்பட்டது என்று தெரிகிறது.

இன்னொரு நண்பர், சென்னை நண்பர், லண்டன் டவரிலே உள்ள கோஹினூர் வைரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார். "அதன் காரட் 108 என்று சொன்னீர்களே, அந்தக் காலத்திலேயே இதன் பரிமாணம் நூற்று எட்டுத்தானா?" என்று கேட்கிறார் இந்த நண்பர்.

இந்தக் கோஹினூர் வைரத்தின் போலி ஒன்றைச் சில மாதங்கள் கழித்து பர்மிங்ஹாம் நகரத்துக் காட்சிச் சாலையிலே பார்த்தேன். "A model of Kohincor Diamond" என்ற குறிப்பும் அங்கே வைத்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பில் இந்த வைரம் ஆதியிலே 191 காரட் இருந்தது என்றும் பிறகு இந்த வைரத்தைச் சாணையிலே பட்டை பிடித்ததின் காரணமாக 108.9 காரட்டாகக் குறைந்திருக்கிறது என்றும் எழுதியிருக்கிறார்கள்!

காட்சிச் சாலைகள் தவிர, லண்டனின் தொழிற்சாலைகளைப் பற்றிக் கோயம்புத்தூர் நண்பர் ஒரு சில முக்கியமான தகவல்களைக் கேட்டிருக்கிறார். அவருடைய கேள்விகள் விரிவாக இருப்பதால், லண்டன் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளையே இப்போது பார்க்கலாம்.

தொழில் துறையில் லண்டனிலே என்னை மிகவும் கவர்ந்த விஷயம் சிறு சிறு வேலைகளுக்கும் இயந்திரத்தை உபயோகிக்கிற முறைதான்.

கட்டட வேலைகள் நடக்கும் இடங்களைப் பார்த்தேன். ரோடுகள், நெடுஞ்சாலைகள், பெருவீதிகள் இவற்றைப் பழுது பார்க்கும் பணியைக் கவனித்தேன். ஹோட்டல்களில் நடக்கும் சமையல், பரிமாறல் முதலிய பல வேலைகளையும், அலுவலகங்களின் சில்லறைக் காரியங்களையும் சென்று பார்த்தேன். இவை எல்லாவற்றிலுமே இயந்திர சாதனங்களை மிகவும் நன்றாகக் கையாளுகிறார்கள்!

கையாள், சித்தாள் என்றெல்லாம் நம்மூரில் பல சில்லறைச் சிப்பந்திகள் உண்டல்லவா? இங்கிலாந்தில் ஒரு கட்டடம் கட்டுகிறார்கள் என்றால், கற்களை எடுத்துக் கொடுத்தல், கனமான பொருள்களை மேலே ஏற்றுதல் இவற்றுக்கெல்லாம் இயந்திரங்களையே உபயோகிக்கிறார்கள்! ஒரு பெரிய கொக்கு இயந்திரம் தனது நீண்ட அலகினால் டன் கணக்கில் கற்களை எடுத்துக்கொண்டு மேலே செல்கிறது! ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செத்தைக்காகக் கொண்டுபோய் அப்படியே கொட்டுகிறது!

சாலைகளில் கற்களைப் பெயர்த்து எடுப்பது, ஆழங்கள் தோண்டுவது, குழிகள் போடுவது முதலிய வேலைகளுக்குமே கடப்பாரை கிடையாது! சக்கரங்களும் பற்களும் கொண்ட மெஷினை இந்த வேலையைச் செய்யும்படி ஏவுகிறார்கள்! தெருக்களிலே மின்சாரக் கம்பிகளில் ஓடுகிற மின்சக்தியை இதற்குப் பயன்படுத்துகிறார்கள்!

நான் தங்கியிருந்த விடுதிக்கு எதிரே ஒரு மிகப் பெரிய நான்கு அடுக்குமாடிக் கட்டடம் இருந்தது. அதில் பழுது பார்க்கும் வேலை நடந்தது. புதிய சாளரங்கள் பதித்தார்கள். சிலவற்றைப் புதுப்பித்தார்கள்! இந்த வேலையை என் அறையிலிருந்து பார்த்துக் கொண்டே இருந்தேன். பார்க்கப் பார்க்க மிகவும் ரசமாக இருந்தது. நீண்ட இரும்புக் குழாய்களை நிலத்திலே நட்டுக் கம்பிகளினாலான கயிற்றினால் அவற்றை இறுக்கிப்

பிணைத்து நம்மூரில் சாரம் கட்டுவது போல் கட்டியிருந்தார்கள்: மிக உயரமாக இந்தச் சாரங்களைக் கட்டி இவற்றுக்குமேல் ஏறி நின்று வேலை செய்தார்கள். தளவாடச் சாமான்களையும், வேலை மானத்துக்கு வேண்டிய பொருள்களையும் மின்சாரத்தினால் இயங்குகிற பெரிய தட்டுக்களில் வைத்து ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நகர்த்தினார்கள். சுவரில் பெரிய ஓட்டைகள் போடுவதற்கும், நீண்ட ஆணிகள் அடிப்பதற்கும், திருக்குகள் பதிப்பதற்கும் மின்சார உளிகளை அங்கங்கே இணைத்து அவற்றையே முடுக்கி விட்டார்கள்!

'உடலை வருத்தி வேலை செய்வது' என்று நாம் ஒரு வசனம் சொல்லுகிறோம் அல்லவா? லண்டனில் இயந்திரங்களை நன்றாகப் பயன்படுத்திப் பணத்தையும் பெரும் அளவில் செலவழித்து அதற்கு வேண்டிய கருவிகளை உபயோகித்து, உடம்பின் வருத்தத்தைக் கூடிய அளவுக்குக் குறைக்கிறார்கள்! அந்த நாட்டிலே தொழிலுக்குத் தேவையான மனிதர்களின் எண்ணிக்கை குறைவு! பணச் செழிப்பும் நவீன விஞ்ஞான முன்னேற்றமும் அதிகம்! எனவே இயந்திரங்கள் வந்து மனிதர்களின் வேலையைச் செய்கின்றன.


ஒரு பெரிய விடுதியின் சமையலறைக்குள்ளே போனால் மாவு அரைப்பதற்கு, தண்ணீர் கொட்டுவதற்கு, கிளறுவதற்கு எல்லாம் மின்சார இயந்திரங்கள்! உருளைக் கிழங்குகளை ஒரு பெரிய சட்டியிலே போட்டுவிட்டால், ஒரு கத்தி அவற்றின் தோலை மிகவும் பதமாக உரித்து விடுகிறது! இன்னொன்று அதைப் ''பொடிமாசா''கவோ அல்லது வறுவலுக்கு வேண்டிய துகள்களாகவோ அல்லது பொரியலுக்குவேண்டிய துண்டுகளாகவோ ஆயத்தம் செய்துவிடுகிறது! எல்லாம் இயந்திர மயம்!

இன்னொரு முக்கியமான விஷயம் அநேக அலுவலகங்களில் 'சேவகர்கள்' என்று சொல்லுகிற தொழிலாளச் சகோதரர்களை இல்லை! பாங்குகளில் பார்த்தேன், பெரிய பெரிய ஆபீஸுகளில் பார்த்தேன்! அதிகாரிகள் தாங்களே இந்த வேலைகளைச் செய்கிறார்கள்! பல கிளைகளும் அறைகளும் உள்ள பணிமனைகளில், மாடிக்கும் கீழேயும் கடிதங்களையும் குறிப்புத் தாள்களையும் கொண்டு போவதற்காகச் சிறு சிறு பெட்டிகள், கம்பிகளில் தொங்கிக்கொண்டோ அல்லது தண்டவாளம் போன்ற அதர்களில் நகர்ந்து கொண்டோ, தள்ளி விட்டால் அங்கங்கே செல்லக் கூடிய முறையில் இயங்குகின்றன! இந்த வசதி இல்லாத இடங்களில் பெரிய அதிகாரிகளும் கூட இந்தச் சிறிய வேலைகளைச் செய்வதற்குக் கூச்சப்படுவதில்லை.

இன்னொரு முக்கியமான நல்ல அம்சம் என்னவென்றால், செய்கிற தொழிலினாலும் கூட மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு அந்த நாட்டில் இல்லை! முடி சிங்காரிக்கும் தொழிலாளி, தெருவைக் கூட்டும் தொழிலாளி, ரயிலடியில் மூட்டை தூக்குகிற சகோதரர்கள் எல்லாரும் அவரவர்களுடைய வேலை நேரம் முடிந்ததும், எவ்விதமான ஏற்றத் தாழ்வும் இன்றிச் சரிநிகர் சமானமாக நகர வசதிகளை உபயோகித்துக் கொண்டு சமூக வாழ்க்கையில் கலகலப்போடு எல்லாருடனும் பழகுகிறார்கள்! நடை, உடை, பேச்சு, சமூக நிலை இவற்றில் எவ்வித வித்தியாசமும் காண முடியாது!

தொழிலாளர்கள் என்று நாம் அழைக்கிற சகோதரர்களிடம் ஒரு மிக உன்னதமான பண்பாடு கண்டு வியப்படைந்தேன். அதாவது இன்னொருவர் மேற்பார்ப்பதற்கு அவசியம் இல்லாதபடி அவரவர் தத்தம் வேலையைக் கடமை என்று கருதி யாரும் குற்றம் சொல்லாதபடி செய்து முடிக்கிறார்கள். ஒரு வேலையை ஒரு தொழிலாளரிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக இருக்கலாம். வேலை வேலைக்காகவே, பிறருக்காக இல்லை, தன்னுடைய சம்பளத்துக்காகவோ, தன்னுடைய முன்னேற்றத்துக்காகவோ கூட இல்லை. வேலை வேலைக்காகவே என்ற ஒரு தொழிலாள தர்மம் மிக உயர்வாகக் காணப்படுகிறது!

மனிதர்களுக்குள் உள்ள சரிசமான நிலை ஓரளவு சம்பள முறையிலும் இருக்கிறது. எம்.ஏ. படித்த ஒருவனுக்கு ஆரம்ப காலத்தில் என்ன சம்பளம் கிடைக்குமோ, அது ஒரு தொழிலாளிக்கும் அநேகமாகக் கிடைக்கிறது! மனிதனுடைய வேலை மாறுபடலாம், அவனுடைய இயல்பும் படிப்பும் மாறுபடலாம், ஆனால் ஒரு கல்லூரி ஆசிரியருக்கும் ஒரு தோட்டத்



தொழிலாளிக்கும் தேவைகள் ஒன்றே என்ற முறையில் ஒரு சம நோக்கு சம்பள விகிதத்திலும் காண்கிறது !

அப்படியானும் இங்கே தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்னைகளே இல்லையா என்று கேட்கலாம்! இல்லாமல் என்ன! ''விரலுக்குத் தக்கவே வீக்கம்'' என்பது வசனம் ஆயிற்றே!

நான் இங்கிலாந்தில் இருந்த சமயம் ஒரு பெரிய தொழிற்சாலையில் மாபெரும் நெருக்கடி திடீரென்று ஏற்பட்டது என்று கேள்விப்பட்டேன். ஒரு புதிய பொறி நிபுணர் வேலை செய்து கொண்டிருந்தபோது திடீரென்று இயந்திரம் நின்று விட்டது! உடனே இந்த நிபுணர் மின்சாரத்தை நிறுத்திவிட்டு, 'ப்யூஸ்' பார்த்தார்! அது கெட்டிருந்ததால், 'ப்யூஸ்' போட ஆரம்பித்தார். அவ்வளவுதான்: அந்தப் பிரிவுக்குத் தலைவராக உள்ள மேற்பார்வையாளர் அங்கே வந்து அவரை உடனே மேலிடத்துக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார்! ஒரு மின்சார மெக்கானிக் செய்ய வேண்டிய வேலையை இந்தப் பொறி நிபுணர் எப்படிச் செய்யலாம், இவருக்குச் சம்பந்தமில்லாத இயந்திரத்தை இவர் எப்படிக் கழற்றிப் பார்க்கலாம் என்பதே கேள்வி! இந்தப் பொறி நிபுணர் வெளி நாட்டிலிருந்து அங்கே மேற் பயிற்சிக்குப் போனவர், ''அறியாமற் செய்த குற்றம்'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்! இல்லா விட்டால் அன்று வேலைநிறுத்தமே நடந்திருக்குமாம்!

நான் கேள்விப்பட்ட இன்னொரு நிகழ்ச்சியும் இதுபோலவேதான். ஸ்காட்லாந்தில் ஒரு கப்பல் தொழிற்சாலையில் மின்சாரத் தொழிலாளி ஒருவர் ஒருநாள் மரப் பலகையிலுள்ள ('ஸ்க்ரூவை') திருகைக் கழற்றிப் பார்த்தார் என்று, மர வேலைத் தொழிலாளர்கள் 'வாக் அவுட்' செய்து வெளியேறினார்கள்! வேலை நிறுத்தமே நடந்ததாம்!

விஷயம் என்னவென்றால், எந்தத் தொழிற்சாலையிலும் வேலைகளை அத்தனை கணக்கோடு பங்கிடு செய்திருக்கிறார்கள்! அவரவர் தங்கள் தங்கள் வேலையைத்தான் செய்ய வேண்டும். பிறருடைய வேலையில் தலையிடக் கூடாது. பிறரும் தங்கள் வேலையில் பிரவேசிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் அந்தந்த வேலை நன்றாக நடக்கும், அந்தந்தத் தொழிலாளியின் ஆற்றலும் முன்னேறும் என்ற உண்மையில் ஆங்கில மக்களுக்கு ஆணித்தரமான நம்பிக்கை இருக்கிறது.

இங்கிலாந்தின் தொழிலாளர் உலகிலே இன்னொரு புதிய சிக்கல் இப்பொழுது ஏற்பட்டு வருகிறது. நீண்ட நாட்கள் கல்வி கற்ற ஒருவனுக்கும், சில்லறைத் தொழிலாளிக்கும் அதிக வித்தியாசம் இல்லாமல் போய்க் கொண்டு வருவதால், நாளாக நாளாகச் சில வேலைகளைச் செய்வதற்கு மக்கள் தயங்குகிறார்கள். எல்லாருக்கும் கிட்டத்தட்ட ஒரே சம்பளம் என்ற நிலைமை இருப்பதால், தெருக் கூட்டுவது, பொது இடங்களைச் சுத்தம் செய்வது போன்ற தொழில்களுக்கு ஆங்கிலேயர்களிலே ஆட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதாம்! விஞ்ஞானத் தொழில்களிலும் இன்னொரு புதிய சிக்கல் உண்டாகி வருகிறது. அதாவது சிறப்பான கல்வி முறை கற்றுப் பயின்ற மக்கள் தங்களுக்குக் கிடைக்கும் சம்பளமும் சாதாரண ஆளுக்குக் கிடைக்கிற சம்பளமும் அதிக வித்தியாசமில்லையே என்று நினைத்து, வெளிநாடுகளில் உயர்ந்த சம்பளம் கிடைத்தால் அங்கே போய்விடுகிறார்கள்! எனவே பெரிய அறிவுத் துறைகளிலும், சில்லறைத் தொழில்களில் இருப்பதுபோலவே மனிதர்கள் அகப்படுவது கஷ்டமாகி வருகிறது!

இந்தச் சிக்கலுக்கெல்லாம் மாற்று மருந்து என்ன என்று ஒரு பெரிய தொழில் நிபுணரைக் கேட்டேன். ''மனிதன் இயந்திரத்தை உபயோகிக்கிறான். நாளாக நாளாக இயந்திரம் மனிதனை உபயோகிக்க ஆரம்பிக்கிறது! இந்த நிலை ஏற்படும்போதுதான் சிக்கல்கள் பிறக்கின்றன!'' என்றார் அந்தத் தொழில் நிபுணர்.

உண்மைதான். மனிதன் இயந்திரத்தை உபயோகிப்பது என்றும், இயந்திரம் மனிதனை உபயோகிப்பது என்றும் இரண்டு நிலைகள் உள்ளன. ஆனால், இவற்றைப் போலவே மனிதன் மனிதனை உபயோகிப்பது என்ற ஒரு நிலையும் இருக்கிறதல்லவா? இந்த மூன்றும் ஒன்றை யொன்று விழுங்கிவிடாமல் செயற்படுமானால் இங்கிலாந்து என்ன, மனித குலமே தழைக்கும் என்பது அடிப்படையான உண்மை.

இன்றைக்கும் இங்கிலாந்தில் இது குறித்து ஆராய்ச்சிகள் செய்து கருத்தாக இருந்து வருவதால்தான் சிக்கல் முதிர்ந்து விடாதபடி மேலும் மேலும் பல தொழிற் சாதனைகளை அவர்கள் அங்கே நடத்திக் காட்டுகிறார்கள். பெரிய தொழில்கள் மட்டுமில்லை, சிறிய சிறிய கைத்தொழில்களிலும் கூடப் பல அபூர்வ சாதனைகளை அந்நாட்டிலே பார்க்கிறோம்.

பொம்மைத் தொழில் என்று சொல்கிறோமே, 'மதாம் துஸாட்ஸ்' என்ற நிலையத்தில் மெழுகினால் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பொம்மைகளின் கொலு ஒன்று இருக்கிறது! அந்தத் தொழிலின் கைத்திறமையைப் பார்த்தால் மதி மயங்குகிறது! அந்தச் சொப்பன புரியையும், அதற்குப் பக்கத்திலேயே யுள்ள வானக் காட்சி நிலையத்தையும் இரண்டு மூன்று தமிழர்களுடனேயே சென்று பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது! அந்த அதிசயங்கள் எப்படி இருந்தன என்பதை யாராவது பாட்டாகவே பாட முடிந்தால் பக்கவாத்தியம் வாசிப்பதற்கு இரண்டு தமிழர்கள் இப்பொழுது இங்கே யிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி வைக்கிறேன்! ஏனென்றால் என்னோடு வந்து அந்த அரிய காட்சியை அனுபவித்தவர்கள் இரண்டு சங்கீத வித்துவான்கள். வாத்தியக் கலைஞர்கள்! ஓர் இசைத் திருவிழாவுக்காக லண்டனுக்கு வந்திருந்தார்கள் அவர்கள். லண்டனில் நவராத்திரி கொண்டாடலாம் என்று எண்ணி அவர்களையும் அழைத்துக் கொண்டு, வானக்காட்சி சாலைக்கும் அதன் அருகிலேயுள்ள பொம்மைக் கொலுவுக்கும் சென்றேன்! (தொடரும்)

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

★

எல்லா மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய

ஒரு ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்தை

ஆரம்பித்திருக்கிறார்கள்

★


குறைந்த பட்சம் ரூ. 5/– லிருந்து அதிக பட்சமாக, அதன் பெருக்குத் தொகை ரூ. 500/– வரையில் டெபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

பிரதி மாதம் டெபாஸிட் செய்யும் தொகையான	ரூ. 5	ரூ. 10	ரூ. 50	ரூ. 100
கீழ்க் கண்டபடி பெருகும்				
34 மாதங்களில்	ரூ. 180	ரூ. 360	ரூ. 1,800	ரூ. 3,600
46 மாதங்களில்	ரூ. 250	ரூ. 50)	ரூ. 2,500	ரூ. 5,000
86 மாதங்களில்	ரூ. 500	ரூ. 1,000	ரூ. 5,000	ரூ. 10,000

முழு விவரங்களுக்கு பாங்கின் எந்தக் கிளைக் காரியாலயங்களுக்காவது தயவுசெய்து எழுதவும்:

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்


ஸி. பி. துரைக்கண்ணு
ஜெனரல் மானேஜர்




கும்பகோணம் பாண்டியன் பாங்க் ஏஜெண்ட் திரு என். ராஜகோபால் அவர்களின் புதல்வி செள. பாக்கியலக்ஷ்மி திரு ராஜாமணியை மணந்தார்.



சென்னை ஸூரி அண்ட் கம்பெனியைச் சேர்ந்த திரு ராமமூர்த்திக்கும் செள. சரோஜாவுக்கும் திருச்சியில் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.



துர்க்காபூர் இன்ஜினியர் திரு கே.எஸ். வெங்கட்ராமனுக்கும் செளபாக்கியவதி கமலத்துக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.




பங்களூர் சார்ட்டர்ட் அகெளண்டெண்ட் திரு என். ஆர். பார்த்தசாரதி அவர்களின் புதல்வி செள. வஸந்திக்கும் திரு சம்பத்துக்கும் விவாகம் நடந்தது.

வாழ்க மணமக்கள்



பம்பாய் தி ஆங்கிலோ பிரெஞ்சு டிரக் கம்பெனியின் பிரதிநிதி திரு மகாலிங்கய்யரின் புதல்வி செள. லலிதாவைத் திரு விஜயராகவன் மணம் புரிந்தார்.



சென்னை யுனைடெட் கமர்ஷியல் பாங்கைச் சேர்ந்த திரு என். வி. சீனிவாஸனுக்கும் செள. பாமாவுக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பிறந்த மண்

ஆதவன்

இங்கிலாந்து தேசத்திலே, இலண்டன்மா நகரிலே, நெல்சன் வீதியிலே, இருபத்தேழாம் இலக்க இல்லத்திலே, ஓர் அசையும் சோபாக்கட்டில். அதன் அருகே இலங்கையின் உயர்தர 'டீ'யின் சாயத்திலிருந்து எழும் மணமுள்ள ஆவி கட்சன் துரையையும் அவரது பாரியாள் கிரேஸையும் பரவசமடையச் செய்கிறது. ஆமாம், ஒரு காலத்தில் அவருக்கே சொந்தமாக இருந்த தோட்டத்திலிருந்துவந்த தேயிலைஅல்லவா அது?

அதனால்தானே, கிறிஸ்துமஸ், ஈஸ்டர் பெருநாட்களை இலங்கையின் ஞாபகத்தோடு கொண்டாடுவதற்காகக் கட்சன் குடும்பத்துக்குவேண்டிய அசல் 'சிலோன் டீ' பார்சல் இன்னமும் அவருக்குத் தவறாமல் வந்துகொண்டிருக்கிறது?

இலங்கை சுதந்திரம் அடைந்து வெள்ளையர்கள் வெளியேறிய போது கண்டியிலிருந்த கட்சன் துரையவர்களின் தேயிலைத் தோட்டத்துக்கும் கைமாற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. சிங்களப் பிரமுகர்கள் பலரது கவனத்தில் அந்த நல்லினத் தேயிலைத் தோட்டம் இடம் பெற்றது. போட்டி மேற்போட்டியாக விலை பேசினார்கள். கட்சன் துரையும் மனைவி கிரேயும் பணத்துக்கு அங்கலாய்த்துக்கொண்டு தோட்டத்தைப் பரிமாறவில்லை.

அவர்களது மனத்தின் மாறாத பரிவைப் பெற்றிருந்த சீவன்கள் இரண்டு அந்தத் தோட்டத்தை உருவாக்கி வந்த வரலாற்றை நினைத்தபோது பணம் பெரிதாகத் தோன்றவில்லை. முத்துசாமி, அவன் மனைவி மெனிக்கா இருவரது உழைப்பும் நன்றி பாராட்டிய நல்லுள்ளங்களுக்குத்தான் அதைவிடப் பெரிதாகப் பட்டன. அன்பும் விசுவாசமும் மேவிடத் தோட்டத்தை அவர்களுக்கே மனப்பூர்வமாக அளித்தார்கள்.

தோட்டம் முத்துசாமியின் கைப்பட்டதும், விலை கொடுத்தும் அதைப்பெற முடியாத சிங்களப் பிரமுகர்கள் வேறு அர்த்தமற்ற காரணங்களைக் கற்பிக்கலானார்கள்.

''யௌவனமும் அழகும் வடிவும் மெனிக்காவுக்காகத் துரை தோட்டமல்ல, வேறு எதைத்தான் உதவ மாட்டார்?''

''முத்துசாமியின் வாலிபமும் துடிதுடிப்பும் மிஸஸ் கட்சனை வயது போயும் விட்டு வைக்குமா, என்ன?''

இதோடு நிற்காமல் ஆங்கிலத்தில் கட்சன் தம்பதிக்கு அநாமதேயக் கடிதங்கள் பறந்தன. அந்தக் குடும்பம் இவற்றால் வேறுபடாததைக் கண்டு மௌனத்தில் புகைந்து கொண்டிருந்தன அந்தப் பொறாமைக் கும்பல்கள்.

* * *

மக்கட் பேறு வாய்க்கப் பெறாத கட்சன் தம்பதியர் பிள்ளைப் பாசம் அத்தனையையுஞ் சேர்த்து சுழுத்து இளவஞ்சி மெனிக்காவை வளர்த்து வந்தார்கள். வெள்ளைக்காரக் குடும்பத்துப் பெண்போல் வளர்ந்த மெனிக்காவிடம் அழகும் ஒழுங்கும் கடமை உணர்ச்சியும் நிரம்பி வழிந்தன. பருவத்தின் செழிப்பும் அவளிடம் கொழித்தது.


முத்துசாமி, தன்னைப் பெற்ற தமிழ் நாட்டிலே வறுமையோடு போராடி நோஞ்சலாகத்தான் கட்சன் துரையின் தோட்டத்துள் நுழைந்தான். கானலில் துவண்டு கிடந்த இளம் நாற்று, மழையைக் கண்டு துள்ளி நிமிர்ந்து தளதளப்பதுபோல், தக்க பாத்திரத்திடம் சரண் புகுந்த முத்துசாமியின் வாலிபமும் வனப்படைந்தது.

மெனிக்காவின் பருவக் கண்கள் செய்யும் குறும்பைக் கவனித்து வந்த கட்சன் தம்பதியர் அவளை முத்துசாமியுடன் இணைத்து வைத்து இன்பம் கண்டனர்.

* * *

இலங்கையை விட்டு இந்த வெள்ளைக்காரத் தம்பதிகள் புறப்பட்ட தினம்.

கண்டி நிலையத்தில் புகையிரதம் வந்து நின்றதும் இருவரும் முதல் வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்து கொண்டார்கள். மெனிக்காவையும் முத்துசாமியையும் பார்த்த கண்களைச் சமாளிப்பதற்காக அவர்கள் கைக் குட்டைகள் கண்களோடு உரசிஉரசி நனைந்தன.



தேங்கிய நீரைத் துடைத்துக்கொண்டு கண்ணுக்கு எட்டிய தூரம் செல்லும் வரை புகை வண்டியைப் பார்த்துக் கொண்டே நின்றாள் மெனிக்கா. வறுமையால் வாடியபோதும் கலங்காத முத்துசாமியின் கண்களும் வாழ்வை உயர்த்திய தெய்வங்களுக்காகக் கரைந்து நீராகச் சொரிவதைக் கண்டபொழுது மெனிக்காவுக்கு ஒரு துளிர்ப்பு மனத்தில் படர்ந்தது. ஆண்மையோடு, அன்பும் நிரம்பியவன் அவன் என்று அறிந்தபின் துளிர்ப்பு ஏன் ஏற்படாது? இவ்விருஜோடிக் கண்கள் நீர் பெருக்கிய அதே சமயத்தில் பலர் நெஞ்சில் நெருப்புப் பற்றி எரிந்தது. மெனிக்காவுக்கும் முத்துசாமிக்கும் அடித்த அதிருஷ்டத்தைக் கண்டு ஆங்காரப்பட்டவர்கள் — அந்த ஆங்காரத்தையும் மறைத்துக் கொண்டு கட்சனை வழியனுப்ப வந்தவர்கள்—தாம் அவர்கள்.

* * *

வீட்டுக்குச் சென்ற முத்துசாமி, இன்று வரையில் தன் எஜமானர்களாக இருந்தவர்கள், இத்தனை காலம் வாழ்ந்து வந்த சமுத்தை ஏன் நீத்துச் சென்று விட்டனர் என்று யோசிக்கலானான். அவர்கள் பிறந்த மண்தான் அவர்களை எப்படியோ கவர்ந்து இழுத்து விட்டது.

அவ்வளவுதான்! முத்துசாமியின் உள்ளத்திலும் பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்வட்டமிடத்தொடங்கின.

"மகனே! என் வாழ்க்கைக் கடல் அவ்வளவிலும் தனி ஒருவனாக நீந்தி விளையாடும் உன்னையும் இலங்கைச் சீமைக்கு அனுப்பிவிட்டு எப்படியடா வாழ்வேன்? உன் தாத்தாவையும் அப்பாவையும் அந்த மண்ணிலேதானேயடா பறி கொடுத்தேன்?" என்று சொல்லியவாறு அவனை அவன் தாய் இலட்சுமி அனுப்பி வைத்த காட்சி நெஞ்சிலே நிழலிட்டது.



''ஆம்: பிறந்த மண்ணின் நினைப்பே இல்லாமல் இந்த மண்ணிலே பிசாசு போல் உழைத்தேன். அதற்கெல்லாம் என்ன பரிசு? பரிசும் கட்சன் தந்தார்; ஆனால் அரசு தர வில்லையே! சட்டமாம், திட்டமாம். நாடு தன்னை ஒரு குடியாக ஏற்றுக் கொள்ளுவதே நிச்சயமில்லை!

தோட்டத்தின் உரிமையை ஸ்திரப்படுத்திக் கொண்டு பிரஜாஉரிமைக்கும் ஒரு வழி பார்க்க வேண்டும். அட...அதற்குள் இன்னொரு பிரஜை கூட....ஆம், மெனிக்காதான் இன்னுஞ் சில நாட்களில், தாயாகிவிடுவாளே! ஆசை மருமகளையும் அன்புப் பேரனையும் கண்டால் அம்மா எவ்வளவு பூரிப்புக் கொள்வாள்? தாய்நாடு சென்றுவிட வேண்டியது தான். சமுத்தை நீத்துச் செல்லக் கட்சனை விடத் தனக்கு அதிகக் காரணமுண்டே!

கொஞ்சி விளையாட அந்தக் குழந்தை கோபாலனும் பிறந்து விட்டான்; கூடிக் களிக்க மெனிக்காவும் ஆவலாய்க் காத்து நிற்கிறாள்; என்றாலும் அவன் மனத்திலே மட்டும் அமைதி இடம் பெறவில்லை. சூதும் பொறாமையும் மலிந்த கூட்டத்தின் மத்தியிலே அது எப்படி அமைதி பெறும்?

கட்சன் தோட்டத்தின் (நன்றியின் சின்னமாக முத்துசாமி வைத்த பெயர் அது) அபிவிருத்திக்காக முத்துசாமி எடுக்கும் முயற்சிகளுக்கெல்லாம் பல முட்டுக்கட்டைகள் குறுக்கே போடப்பட்டு வந்தன.

ஒரு நாள் கூலிக் குழப்பம்; வேறொரு தினம் கங்காணி கறுவுவான்; இன்னொரு வேளை, கொண்டக்டர் கங்காணி கைகலப்பு! இப்படியே சச்சரவுகள் நடந்தபடியிருக்கும். பொறுமைப் பொருமல்களுக்கு இடையே மாதங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

* * *

தேநீர் கொண்டு வரும்படி மனைவியிடம் சொல்லி விட்டு, அன்றையத் தபாலில் கொழும்பிலிருந்து வந்திருந்த தினசரிப் பத்திரிகையை எடுத்துப் பிரித்தார் கட்சன் துரை. அதில் வெளியாகியிருந்த ஏதோ ஒரு செய்தியில் அவரது கண்கள் நிலைகுத்திட்டுப் போயின. அவர் நெஞ்சம் துடித்தது.

''கண்டி கட்சன் தோட்டத்துத் தேயிலை ஸ்டோரில் நீ விபத்து சம்பவித்து அதன் உரிமையாளராகிய...'' மேலே வாசிக்கக் கண்கள் கனத்து விட்டன.

இதயமெல்லாம் அப்படியே உலர்ந்து கொண்டிருந்த கட்சன் துரையின் நாவின் வறட்சி தீர்க்கத் தேநீர் வந்து நின்றது இரே ரூபம்.


''இதைப் பார்'' என்று சொல்லிப் பத்திரிகையை அவளிடம் நீட்டினார். அதை வாங்கியவள் 'ஐயையோ!' என்று அலறியே விட்டாள்.

''யார் மனத்தில் மூண்ட தீ இப்படிப் பற்றியதோ! அந்தப் பெண்—என் மெனிக்கா—எங்கே தவிக்கிறாளோ?'' என்று குரல் தழுதழுக்க விம்மினாள்.

கட்சன் துரை கண்ணாடித் தம்ளரில் ஊற்றி வைத்த தேயிலைச் சாயத்தைப் பார்த்தார். இரத்தம் போலத் தளதளத்த அது. அதைப் பயிராக்குவதற்காக முத்துசாமி சிந்திய இரத்தத்தை நினைப்பூட்டியது. தேநீரிலிருந்து ஆவி சென்று கொண்டேயிருந்தது. அதில் மெனிக்கா ஆவி சோர விடும் பெருமூச்சைக் கண்டார் கட்சன் துரை.

* - *

காலை இளங் காற்றில் மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்த தனுஷ்கோடிக் கப்பலில் ஓர் ஓரமாகக் கடல் பரப்பைப் பார்த்தபடி மெனிக்கா தனது குழந்தையுடன் நின்றாள். அடிவானத்தில் அப்பொழுதுதான் ஆதவன் உதயமாகிக் கொண்டிருந்தான். இயற்கை, எழில் வர்ணங்களைப் பரப்பி அழகழகாகக் கோலம் எழுதியிருந்த தோடு வானில் ஆதவன் தன்ஒளிக் கதிர்களை வீசி,



ஓர் அக்கினிக் கோளமாகச் சுழன்று சுழன்று மேலே எழுந்து கொண்டிருந்தான். அந்த உதய மோகனத்தில் உற்சாகம் மேலிட்ட கடல் அலைகள் துள்ளிக் குதித்தன.

இந்த வைகறைப் புலர்ச்சியோ அல்லது பிரயாணிகளின் ஆரவாரமோ மெனிக்காவின் கண்களுக்குப் புலப்படவில்லை.

பரந்த கடல் பரப்புக்கு அப்பால் அவள் முதல் தடவையாகப் பார்க்கப் போகும் தமிழகத்தையும், அவளுடைய ஆசைக் கணவனின் அன்புத் தாயாரையும் அகக் கண்ணால் கற்பித்துப் பார்த்துக் கொண்டாள்.

கணவனது தாயையும், தாயகத்தையும் நினைத்தவள், மரங்களடர்ந்த சாரலிலே, சலசலக்கும் தேனருவி மாவலிகங்கையையும், அந்த எழில் கண்டு இறுமாந்து நிற்கும் தனது பிறந்த மண்ணையும் பற்றி எண்ணலானாள். அந்த மண்ணைப் பார்த்து மெதுவாக ஒரு பெருமூச்சு விட்டாள். அந்த மூச்சு, அவளை அந்தப் பூமியிலிருந்து பிரித்துச் செல்லும் கப்பலின் குழல் கக்கும் புகை மூச்சாயிற்று.

நிலப் பிரதேசமும் பசிய விருட்சங்களும் படிப்படியாகக் கீழே ஆழ்ந்து பார்வையிலிருந்து மறைந்து போய்க் கொண்டிருந்தன. அவள் இரு கண்களையும் அகல விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த போதே அவளைச் சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் தென்பட்டதெல்லாம் தண்ணீர்—தண்ணீர்—தவிப்புக்கு ஒரு வாய் பருக முடியாத உவர்ப்புத் தண்ணீராக மாறியது.

தள்ளிப் போகப் போகப் பிறந்த நாட்டுப் பாசம்தான் எப்படி மேன்மேலும் வளர்கிறது? அந்தப் பாசத்தை யெல்லாம் உதறிவிட்டுக் கணவனின் தாயையும், தாயகத்தையும் தேடிச் செல்கிறாள்.

அவளுக்குத் தாயில்லை: இனி தாயகமும் இல்லை. இதோ அவள் குழந்தை கோபாலனுக்குத் தாயார் இருக்கத்தான் செய்கிறாள்: ஆனால் தாயகம் இல்லை. தந்தையகம்தான் அது காணப் போவதெல்லாம். அப்படித் தானே முத்துசாமி அவளுக்குப் பணித்திருந்தான்? பிறந்த மண் என்பது ஒரு நாடு மட்டுமில்லை. நாம் உருவானோமே தாய் என்ற ஓர் உடலிலிருந்து. அதுவும் தான் பிறந்த மண் என்றல்லவா அவன் சொல்வான்? அந்தத் தாயிடம்தான் அவனுக்கு எவ்வளவு பாசம்? தான் காணமுடியா விட்டாலும், தன் மனைவியும் குழந்தையுமாவது அவளைச் சேர வேண்டுமென்பதல்லவா அவனது மாளாத ஆசை? இதோ...அவன் குரல்கூடக் கேட்கிறதே இந்தக் கடலின், கப்பலின் அரவத்துக்கும் மேலாக!

''மெனிக்கா! இங்கிருந்து தலைமன்னார் கோச்சில் ஏறினாயானால் பொழுது விடிய தனுஷ்கோடிக் கப்பலைப் பிடித்து விடலாம். தனுஷ்கோடியில் கப்பலை விட்டு இறங்கியதும் அங்கே காத்து நிற்கும் கோச்சில் ஏறிக்கொள். அங்கிருந்து மதுரை செல்லும் மார்க்கத்தில் கோவில் குளம் புகை வண்டி நிலையம் இருக்கிறது. பெரிய எழுத்திலே பெயர் எழுதி யிருப்பார்கள். நீதான், தமிழ் எழுத்துக்களைக் கொள்ளை ஆர்வமாய் எழுதிப் படிக்கப் பழகி விட்டாயே! ஆகவே, அந்த நிலையத்தைப் பார்த்து இறங்கி விடு. வயசாகிப் போன எனது தாயார், கடிதத்தில் கண்ட உனக்காக ஆவலோடு காத்து நிற்பாள்.

''கண்காணாச் சீமைக்குப் போய் மாண்டு போன தனது அருமை மகனின் ஆசைக் குழந்தையையும் அன்பு மனைவியையும் கண்ட மாத்திரத்தே இருவரையும் கட்டி அணைத்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுவாள் என் தாயார். அவளது அன்பு உங்களுக்கு வாழ் நாள் முழுதுமே நிழல் தந்து ஆதரித்துக் கொண்டிருக்கும்.......''

முத்துசாமியின் குரலை மட்டும்தானா கேட்டாள் மெனிக்கா? துக்ககரமான எத்தனையோ நிகழ்ச்சிகளும் அவள் முன் நிழலாடின.

* * *

மாலை விளக்கேற்றியாகி விட்டது. வீட்டுக்குத் திரும்பிய முத்துசாமி நீராடிச் சாப்பிட்டுவிட்டுக் குழந்தையையும் குலாவிக் கண்ணயர்த்தி விட்டு முற்றத்தில் போய் அமர்ந்து வெற்றிலை போட்டான்.

மலைத் தோட்டங்களின் திரை மறைவிலிருந்து வெளிப்பட்ட சந்திரன் எங்கும் அமுத நிலவைப் பெய்து கொண்டிருந்தது. இனிய மென்காற்று மலைச் சாரலில் தவழ்ந்து வந்து முற்றத்தில் நின்ற ரப்பர் மரத்தின் இலைகளைச் சலசலக்கச் செய்தது. அவன் கையால் அருமையாக வளர்த்திருந்த தென்னையின் ஓலைக் கீற்றுக்கள் பால்போல் வடிந்தோடும் சந்திரிகையைக் கண்டு களி கொண்டு துள்ளுவதுபோலச் சட சட என்று அடித்துக் கொண்டன. இந்த இன்பப் பூரிப்புக் களினூடே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில ஆந்தைகள் 'உம்' கொட்டிக் கொண்டிருந்தன. ஆந்தையின் அவலக் குரல் முத்துசாமியின் உள்ளத்தில் ஒளிந்திருந்த கலக்க உணர்ச்சியைத் தூண்டிக் கொண்டேயிருந்தது. அந்தத் தேன் நிலவிலே முத்துசாமியின் நிழலோடு நிழலாக ஒட்டித் தழுவிய மெனிக்காவை ஓர் உலுப்பு உலுப்பியது. முத்துசாமி முன்கூட்டியே சூசனையாக அறிந்திருந்த ஏதோ ஓர் ஆபத்தைப் பற்றிய உணர்வு. அதோடு துன்பச் சூழ்நிலைகளைக் கற்பிக்கும் வகையில் அவன் கண்ட கனவும் நினைவில் வந்தது. மெனிக்காவிடம் அதைச் சொல்ல ஆரம்பித்தான்.

''பிரஜாவுரிமைப் பதிவுக் காரியாலயத்துக்குப் போய்ப் பெரிய அதிகாரியின் அறைக்குள் நுழைந்து, அவர் மேசை முன் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தேன். கனவிலேதான் சொல்கிறேன், மெனிக்கா. 'ஆட்டத்துக்கு என்ன பணயம் கட்டுகிறாய்?' என்று கேட்டார் அவர். 'எனது பிறப்புரிமையைப் பணயமாக வைக்கிறேன்' என்றேன் நான். அதாவது ஆட்டத்தில் நான் வென்றால் மறு பேச்சின்றி என்னை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்; தோற்றால் அவர் உத்தரவுப்படி நடப்பதாகக் கூறினேன்.

''தோற்றே விட்டேன், மெனிக்கா! அந்தக் கல் நெஞ்சக்காரன் கொஞ்சங்கூடத் தயவு

தாட்சிண்யம் பார்க்காமல், 'ஏ! கள்ளத் தோணி ஓடு உன் ஊருக்கு' என்றான்.

"'கள்ளத் தோணி' என்ற ஏச்சு என்னை என்னவோ செய்து விட்டது. மேசையில் சிதறிக் கிடந்த சொக்கட்டான் காய்கள் ஒவ்வொன்றிலும் எனது பாட்டனாரின் முகம் தெரிந்தது. தலைமுறை தலைமுறையாகத் தங்கள் வாழ்வையே பணயம் வைத்து இந்நாட்டைச் செழிக்கச் செய்த முந்தையர் நினைவெல்லாம் வந்தது. அவர்களையே பகடைக் காயாக உருட்டி, என் பிரஜா உரிமைக்காக விளையாடுவதாகத் தோன்றியது. அந்த ஆவேசத்தில் 'அட மிருகமே! யார் கள்ளத் தோணி? இதோ பார், இத்தனை நேரமும் நீ கையிலெடுத்தாடிய காய்கள், இந்த நாட்டிலேயே, நாட்டுக்காகவே உயிரை விட்ட என் பாட்டனாரின் எலும்புத்துண்டுகள்' என்றேன்....."

மெனிக்கா 'வீல்' என்று கத்திவிட்டாள். அதைத் தொடர்ந்தாற் போலச் சமீபத்தில் எங்கிருந்தோ பல குரல்கள் எழுந்தன.

ஆ! அவனுடைய தேயிலை ஸ்டோரில் தீப்பற்றிக் கொண்டு விட்டது!

முத்துசாமி இராம பாணம் போல் 'விர்' என்று பாய்ந்து ஓடினான்.

"ஐயோ, நில்லுங்கள்! நானும் வருகிறேன்" என்று மெனிக்கா கத்தியது அவன் காதில் விழவில்லை.

ஓடிப்போன முத்துசாமி மறுபடியும் அவளிடம் திரும்பி வரவேயில்லை. பிறப்புரிமை தர மறுத்த இந்தப் பொல்லாத உலகை விட்டே ஓடிப்போய் விட்டான்.

மெனிக்கா குழந்தையையும் தூக்கித் தோளிற் போட்டுக்கொண்டு ஓடினாள். பல லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஸ்டோரை, அக்கினி தன் கொடிய நாக்குகளை நீட்டி மளமளவென்று விழுங்கிக் கொண்டிருந்தது. மனத்தில் நெருப்பு மண்டிய அருவைக் காரர்கள் காரியம்தான் அது. அந்த வட்டாரத்துத் தொழிலாளர் சக்தி அத்தனையும் ஒன்று திரண்டு, அக்கினியின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியும் பிரயோசனம் இல்லாமலே போய் விட்டது.

"காவற்காரக் கிழவன் உள்ளே அகப்பட்டுக் கொண்டான். காப்பாற்றுங்கள்!" என்று ஒரு குரல் எழுந்தது. ஆனால் தீயும் புகையுமாகக் கக்கிய எரிமலைக்குள்ளே தலை கொடுக்க யாருக்குத் தைரியம் வரும்?

ஒருவருக்கு அந்தத் தைரியமும் வரத்தான் செய்தது. மின்னி மறையும் வேகத்தில் அந்த உருவம் எரியும் நெருப்பினூடே ஓடிச் சென்றது. மறுகணம் உள்ளேயிருந்து ஒரு கிழவனின் உடல் வெளியே தூக்கி வீசப் பட்டது. ஆனால் அதற்காக வேறோர் உயிர் தானம் அளிக்கப்பட்டது.

"முத்துசாமி! வெளியே ஓடி வந்துவிடு: அதோ தலைக்குமேலே உத்தரம் புரளுகிறது. ஒரே பாய்ச்சல், எட்டிப் பாய்ந்துவிடு" என்றெல்லாம் வெளியே நின்றவர்கள் கூச்சல் போடத்தான் செய்தார்கள். எந்த ஒரு நிகழ்ச்சியை வெறும் வாய்க்கூச்சல் ஒரு சிறிதேனும் மாற்ற முடியாதோ, விதியின் அந்த நிர்ணயமான நிகழ்ச்சி நடந்தே விட்டது.

உருகிய உருக்குத் துண்டம்போல் தகதக என்ற பிரபையுடன் அந்த உத்தரம்....

மெனிக்காவிடம் கடைசி முறையாக ஏதோ சொல்ல வாயெடுத்தான் முத்துசாமி. ஆனால் அவனால் ஏதும் கூற முடியவில்லை. அதனால் என்ன? அவனது வாழ்வில் பிடிவாதமாக இருந்த அந்தப் பிரதிக்ஞையைத்தான் மெனிக்கா புரிந்து கொண்டு விட்டாளே!

முத்துசாமியின் பிறந்த மண்....

ஆம், கோவில் குளம்; அங்கே அவன் குடியிருந்த கோவில்—அதாவது அவனைப் பெற்ற தாய்...லட்சுமி!

அந்த லட்சுமியைத் தேடிக் கோவில் குளம் வந்தே சேர்ந்துவிட்டாள் மெனிக்கா, இளமையிலேயே கைம்மையும், கையிலே குழந்தையுமாக. ஆனால் அந்த லட்சுமிதான் அங்கே இல்லை அவளை வரவேற்பதற்கு.

அண்டை வீட்டுக்காரர்கள் விஷயத்தைச் சொன்னார்கள்.

லட்சுமிக்கு அடிக்கடி ஏதோ உருவெளித் தோற்றங்கள் தெரிந்தனவாம். முத்துசாமி வான வெளியில் தோன்றித் தோன்றி அவளைத் தன்னிடம் வருமாறு அழைத்தபடி இருந்தானாம். பிறந்த மண்ணுயிற்றே! பஞ்ச பூதங்களில் முதலில் நிற்பது அதே பஞ்ச பூதங்களில் கடைசியில் நிற்கும் வானில் தன் செல்வ மகனுடன் கரைந்து விட்டதாம்.


* * *

இங்கிலாந்து தேசத்திலே, இலண்டன் மாநகரிலே, நெல்சன் வீதியிலே, இருபத்தேழாம் இலக்க இல்லத்திலே அதே பழைய சொக்கட்டான் அருகே இலங்கையின் உயர் தர டீ சாயம் ஆவி பரப்பியது. இனி அடுத்த வேளைக்குக்கூட அந்தத் தேநீர் கட்சன் துரைக்குக் கிடைக்க முடியாது. கடைசி பார்சலின் கடைசி தேயிலையில் தயாரானது அது.

தேநீர் நிரம்பிய கோப்பை சீனக் களிமண்ணால் ஆனது; அதன் அடித்தட்டம் ஆங்கிலக் கயோலின் மண்ணால் ஆனது. எந்தெந்த மண்ணெல்லாமோ ஒன்று சேர்கின்றன. அவற்றை மாறி மாறிப் பார்த்தபடி நிற்கிறது இந்திய - இலங்கை மண்கள் ஒட்டி உருவான கோபாலன் என்னும் குழந்தை. அவனை மடியில் சாய்த்தவாறு சோகமே உருவாக அமர்ந்திருக்கிறாள் மெனிக்கா.

இந்த இங்கிலாந்து அவன் பிறந்த மண் அல்லவே? பின் அவனை இங்கே சேர்ப்பித்தது எது? அது அவனுக்குப் புரியவில்லை. அறியாப் பெண்ணாகிய அவளுக்குப் புரியாதுதான்.

பிறந்த மண் என்பதை நாடு என்ற உருவில் ஸ்தூலமாகத் தான் அவன் கண்டான். முத்துசாமி, அதை அன்னை என்ற தத்துவத்தில் சூட்சுமமாகவும் கண்டான். ஆனால் இவற்றுக்கெல்லாம் காரணமாக ஒரு மூல மண் இருக்கிறதே! அதிலேதானே கண்ணில் தெரிவதெல்லாம் தோன்றுவதும், வளர்வதும், பின்பு, அதோடேயே, அப்படியே மட்கிப் போவதும்? அந்த மண்ணின் அடிவாரத்தில் ஓடும் அன்புப் பெருக்கு அங்கங்கே மேலெழுந்து கசியும்போது ஓர் ஆங்கிலேயரும் ஒரு சிங்கள மெனிக்காவும் ஒன்று கூடுவதில் அதிசயம் என்ன இருக்கிறது?


எழில் மிளிர
சுகுமாரி
ரெமி
பவுடர்
Aykan

அன்பு வழி கண்ட ஆசிரியர்

தலைமை ஆசிரியரின் அறைக்குள் நிலை கொள்ளாமல் அமர்ந்திருந்தான் அந்த மாணவன்.

துணிச்சலுள்ள மாணவன்தான் அவன். துணிச்சல் மட்டுமா? குறும்புத்தனமும், விஷமமும் கூட உள்ளவன். அந்த விஷமமே அல்லவா இன்று விஷமாகி விட்டது?

அவனுடைய அந்தக் குறும்பு எத்தனையோ ஒரு மூர்க்கச் செயலுக்குக் காரணமாகிவிட்டது? அந்த மூர்க்கத்தனத்துக்கு ஆளாகி எலும்பு முறிந்து போன மாணவனை வைத்தியசாலையில் சேர்த்து விட்டுத் தலைமை ஆசிரியரும் தமது அறைக்குத் திரும்பினார்.

"நீங்களெல்லாம் வெளியில் இருங்கள்" என்று அங்கிருந்த ஆசிரியர்களைப் பார்த்துச் சாந்தமாகக் கூறினார் அவர். கட்டளைக்குக் கீழ்ப்படிய அவர்கள் தயங்கினார்கள். இந்த முரட்டுக் கட்டையிடம் அவர் தனிமையில் சிக்கிக் கொண்டால் என்ன அவமானம், ஆபத்து நேரிடுமோ?

"தயவு செய்து நீங்கள் வெளியே இருக்கலாம்" என்றார் தலைவர் உறுதியாக.

ஆசிரியர்கள் மனமின்றி வெளியேறினர்.

மாணவனைப் பெயர் சொல்லி அழைத்தார் தலைமை ஆசிரியர்.

தலை நிமிர முடியவில்லை அவனால்.

"ஒருவருக்கும் தெரியாதென்று எண்ணியே பலமுறை நீ செய்த குறும்புகளைப் பற்றி அறிந்தும் கூடப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். ஆனால் இன்று விளையாட்டு எவ்வளவு விபரீதமாகி விட்டது?... சரி, வகுப்பில் என்னதான் நடந்தது, சொல்."

பதிலில்லை.

தலைவரே பேசத் தொடங்கினார்.

"உனக்கு அடுத்த மாணவன் கணக்குப் போட்டு முடித்தவுடன், ஆசிரியரிடம் விடையைக் காட்ட எழுந்தான். உண்டா?"

'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான் மாணவன்.

"அவன் முதல் மாணவனாகக் கணக்கை முடித்துச் செல்வது பிடிக்காமல் அவனைத் தடுக்க எண்ணினாய். அப்படித்தானே?"

ஒத்துக்கொண்டதற்கு அடையாளமாக மீண்டும் தலையசைத்தான் மாணவன்.

"எண்ணினவன், அவன் கையைப் பிடித்து அப்படியே இழுத்துவிட்டாய்."

"ஆமாம், சார்!" என்று கூவிவிட்டான்.

"அதனால் அவன் எலும்பே ஒடிந்துவிட்டது. எப்படித் துடிதுடித்தவாறு அவன் வைத்தியசாலைக்குச் சென்றான், பார்த்தாயல்லவா?"

பின்னர் சிறிது நேரம் அங்கு பேச்சே இல்லை. அவர் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தார்.

பின்னர், "தம்பீ! நீ எத்தனை ஆண்டுகளாக இப்பள்ளியில் படிக்கிறாய்?" என்று கேட்டார் எதையோ நினைத்துக் கொண்டவர் போல்.

"ஆறு ஆண்டுகளாக. ஆமாம்... முதல் படிவத்திலிருந்து" என்றான் மாணவன்.

'ஓஹோ' என்றார் தலைவர். அவர் குரலை ஏதோ ஒரு சோகம் கவ்வியது. சுதாரித்துக் கொண்டார்.

"ம்... சரி, அதோ உன் பக்கத்திலிருக்கிறதே மணிப் பிரம்பு, அதை எடு" என்றார் அழுத்தமான, இரக்கமற்ற குரலில்.

எவ்வளவு செம்மையாகத் தன்னை 'வாங்க'ப் போகிறாரோ என்று நடுங்கியபடி பிரம்பை எடுத்து அவரிடம் நீட்டினான் மாணவன். நீட்டிய அவரது கரத்தில் அதை மெல்ல வைத்தான்.

"இல்லை. இதை இப்படி வைக்காதே" என்றார் தலைவர். "ஆமாம், இப்படி சொருசாக வைக்காதே. அந்தப் பிரம்பால் என் கையில் நன்றாகப் போடு. ஆறு வருஷங்களாக நீ இங்கு படித்தும், உனக்கு நல்ல பழக்கங்களைப் பயிற்றுவிக்காத என் கையில் நன்றாகச் சாத்து அந்தப் பிரம்பால்."

பிரம்போடு அவர் கையையும் இறுக்கிப் பிடித்தபடி கதறி விட்டான் மாணவன்.



"என் வாழ்வில் இதுவே கடைசித் தவறாக இருக்கும் சார்! என்னை மன்னித்துவிடுங்கள்" என்று அழுகையிடையே இக்கினான் அவன்.

தலைவர் கண்ணிலிருந்தும் நீர் சிந்தியது. அது அந்தக் காளையின் விஷமத்தையும் துடைத்து எடுத்தது.

இது ஏதோ கற்பனைச் சம்பவம் இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன் மதுரை ஐக்கிய கிறிஸ்துவ உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிதான் இது. தலைமை ஆசிரியர்களில் தலை சிறந்தவராகத் தம்மை வெளியிட்டுக்கொண்ட அந்த உத்தம புருஷர் திரு சுவாமிநாதன் அவர்கள் தற்போது சென்னை, புரசவாக்கத்திலுள்ள ஈ. எல். எம். ஃபெப்ரீஷியஸ் உயர்நிலைப் பள்ளியின் தலைவராகப் பணியாற்றி வருகிறார். அவருடைய சேவையின் வெள்ளி விழா ஜனவரி 19ந் தேதியன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. அப்போது அறிஞர் பலர் பாராட்டிய அவரது தொண்டுக்கு இதோ நாமும் போடுகிறோம் ஒரு ஜே!

கி. பி. பதினாறும் நூற்றாண்டின் தொடக்கம்:

தன்னிகரில்லாத் தனிப் பெரும் தலைநகராய் விளங்கிய விஜயநகரம் முழுதும் சோகக் களையால் சொர்ண வடிவமிழந்து—சொர்க்க வாழ்வை மறந்து சுந்தரத் தெலுங்கின் சொகுசான பேச்சை இழந்து தனியாய்த் தவித்தது.

இத்தனைக்கும் காரணம் எங்கிருந்தோ முளைத்து விடவில்லை. பகைவர்களின் பதற்ற மெல்லாம் அடங்கிய நேரம். அப்படி ஓரிரண்டு முளைத்து ஓலமிட்டாலும் அதற்காக உற்சாகம் இழக்கும் நிலையில் விஜயநகர ஆட்சி அப்போதைக்கு இல்லை.

மாவீர மன்னரான வீர நரசிம்மர் நோய்ப் பிடியால் பஞ்சணையில் தஞ்சம் புகுந்திருந்தார். அவருடைய உடல் நலம் காக்கப்படுமா என்பதே மக்களின் பெருத்த கேள்வி. அரண்மனை மருத்துவர்கள் பலர் வருவதும் போவதுமாக இருந்தனர். அரச வீதி நெடுக மக்கள் அவ்வப்போது செய்தி யறியவேண்டி வருவார் போவாரை விசாரித்த வண்ணமாக இருந்தனர். அவர்களுடைய கண்களில் ஒளியில்லை. நாக்கில் ஈரமில்லை. மூச்சு நிலையில்லை! மனத்திலோ துணிவற்ற நம்பிக்கை துளைத்தவண்ணமிருந்தது. இந்த நிலை கூடாதுதான். அடுத்து நாட்டைக் காக்கப் பல நல்லவர்கள் இருந்தார்கள். ஒரு வல்லவனும் இருந்தான். அவன்தான் பிற்காலப் பொற்காலம் கண்ட கிருஷ்ணதேவராயன். எனினும் ஓர் இழையோடிய பீதி. என்ன நடக்குமோ? யார் அரசைக் கைப்பற்றுவரோ? எந்த நேரத்திலும் சுல்தான்கள் நுழைவால் சுந்தரத் தெலுங்கு அந்தரத்தில் ஊஞ்சலாடும் திரிசங்குச் சொர்க்கத்தின் நிலை அடையலாம் என்ற நம்பிக்கை. அதுதான் துணிவற்ற நம்பிக்கை.

வீர நரசிம்மர் மிகச் சிறந்த போர்வீரர். வாட்போரில் தனித்து நின்று போரிட்டு வெல்வதில் இன்பம் கண்டவர். அந்நாளையில் எவனாவது வாள் சண்டையில் தலைநிமிர்ந்தால், அவனை உடனடியாக விளித்துத் தனிமைப் போருக்கு அழைப்பார். இந்நிலை ஒரு காலத்தில் பிரஞ்சு நாட்டுக்கே பெரும்பாலும் உரித்தாக இருந்தது. இதனைத் தம்முடைய காலத்தில் நம் நாட்டில் கையாள நினைத்து வெற்றி கண்டு வேந்தர்க்கு வேந்தராகித் திகழ்ந்தவர் வீர நரசிம்மர். இதனால் நாடு முழுதும் வாட்போருக்கு ஆயத்தமான வீரர்கள் பலர். நிறுவிய கூடங்கள் பல. சிறந்த வாட்போர் வீரர்களுக்குப் பரிசுகளை வாரி வழங்கியவர் மன்னர் வீர நரசிம்மர்.

வீர வாழ்க்கையே தம்முடைய லட்சிய வாழ்க்கையாகக் கொண்ட மன்னர் படுக்கையில் பரிதவிக்கிறார் என்ற செய்தி மக்களை ஏன் சோகத்தில் ஆழ்த்தாது? மக்களால் அழகு காணும் நகரை ஏன் களையிழக்கச் செய்யாது?

மன்னர் நரசிம்மர் பிழைக்க மாட்டார் என்ற செய்தியே நகரில் பெரிதும் பரவியது. கண்கலங்கிக் கதிகலங்கிக் கதறிய மக்களைக் காணப் பிரதானியாருக்கு, அமைச்சர்க்கு மனம் புழுங்கலாயிற்று. அரச நம்பிக்கையும், ஆட்சியை நிர்வகிப்பதில் அபார இராச தந்திரமும் நிறைந்த பிரதானியார் சாளுவ திம்மராயரை நாமென்ன, வரலாறே புகழ்ந்துரைக்கிறதே!

வீரநரசிம்மர் படுக்கையருகே, எந்நேரமும் பிரதானியார் திம்மராயர் பாதுகாத்த வண்ணமாக இருந்தார். அடிக்கடி மருத்துவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுத் திட்டமிட்டுக் கொண்ட சாளுவ திம்மராயருக்கு இப்போது நம்பிக்கை பூரணமாக ஒளிந்து கொண்டது.

துளுவ மரபின் கடைசி மன்னராக மறையப் போகும் வீர நரசிம்மர் பிரதானியாரை நோக்கினார்:

''சாளுவ திம்மராயரே! இன்னமும் என் உயிர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா?'' பிரதானியார் பொங்கி வந்த கண்ணீரைப் பொறுமையுடன் துடைத்துக் கொண்டார். அவர் பேசவில்லை. தலையசைத்தார். அது ஏக்கத்தை காட்டியது. ஆனால் நம்பிக்கையைத் தெளிவிக்கவில்லை.



வீர நரசிம்மர் மெல்லச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் மரணக் களை தாண்டவமாடியதை நன்கு உணர்ந்தனர் அனைவரும். சுற்றிலும் கவனித்த மன்னர் அனைவரையும் போகும்படி சைகை காட்டினார். மனைவிமார்கள் மனமில்லாமல் சென்றனர். உடன் சூழ்ந்த அனைவருமே சென்றனர். ஆனால் அன்னை நாகம்பிகா மட்டும் அழுத கண்ணீருடன் அருகே நின்று கொண்டிருந்தாள்.

அவளையும் போகும்படி உத்தரவிட்டார். கடைசியாகப் பிரதானியாரை அருகில் அமரச் செய்தார்.

''பிரதானியாரே! ராஜ விசுவாசத்தில் தங்களை விட நான் யாரையும் நம்பவில்லை. என்னுடைய துளுவ மரபு என்னுடன் மறையக் கூடாது என்பதைத் தெரியப்படுத்தவே உங்களைத் தனிமையில் நிறுத்தினேன். நான் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேட வேண்டும். இம்மடி நரசிம்மனைக் கொன்று இந்தப் பரந்த சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றினேன். ஆனால், என்னை யாரேனும் வஞ்சித்து என்னைப் போலவே இந்தச் சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றுவார் என்று நான் நினைத்தது நடக்காமல் போய்விட்டதில் ஒரு மகிழ்ச்சி. ஆனால், நோய் என்னைச் சிறுகச்

யாருக்குச் சோதனை?

சிறுகக் கொல்ல செய்கிறது. திம்மராயரே! எனக்கடுத்து என் மகன் அரசாள வேண்டும். ஆனால், என் மகன் திருமலைத்தேவனோ எட்டு வயதுச் சிறுவன். அவனைத் தங்கள் பாதுகாப்பில் விட்டு, உரிய வயது வந்ததும் அவனை அரியணையில் அமர்த்த வேண்டுகிறேன். செய்வீர்களா?''

திம்மராயர் ஒரு கணம் விழித்த நிலையடைந்தார். இதனைக் குறிப்பால் உணர்ந்து கொண்டார் மன்னர் வீரநரசிம்மர். அந்த நிலையிலும் அவருடைய அரச தந்திரம் நோய்வாய்ப்பட்டு விடவில்லை.

''ஏன் திம்மராயரே, தயக்கம்?''

திம்மராயர் தம்முடைய தவறான நிலையைப் புரிந்து கொண்டார்.

''ஒன்றுமில்லை, மகாராஜா! வீணாக ஏன் தங்களுக்கு உயிர்மேல் இப்படி நம்பிக்கையற்ற முடிவு ஏற்படுகிறதோ என்ற தயக்கம் என் வாயைப் பொத்திவிட்டது. மற்றப்படி வேறொன்றுமில்லை.''

திம்மராயர் சமாளித்துக் கொண்டார். ஆனால் இதனை மன்னர் வீரநரசிம்மர் உணர்ந்துகொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை. அவர் உயிரற்ற சிரிப்புச் சிரித்தார், அந்த நேரத்திலும்!

''பிரதானியாரே! என்னுடைய உயிரின் நிலையில் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பாராட்டுகிறேன். ஓர் உண்மையான பிரதானிக்கு இருக்க வேண்டிய லட்சணங்கள் தங்களிடம் இருக்கக் கண்டு பெருமிதப்படுகிறேன். ஆனால் இந்த உயிர் நாளைக் காலை வரையில் இருக்குமோ என்ற ஐயம் மட்டும் சூரியனைப் போன்ற உண்மை!''

''அப்படி வெல்லாம் சொல்லாதீர்கள், மகாராஜா!'' என்றார் திம்மராயர்.

''இருக்கட்டும். என் கருத்துக்குத் தாங்கள் தரும் வாக்குறுதி என்ன?''

''கேளாமலேயே செய்யக் கூடியவன் நான் என்பது தாங்கள் அறியாததல்ல!''

''அறிவேன் பிரதானியாரே. அறிவேன். எனினும் வாக்குறுதி தேவை. அத்துடன்...''



"அத்துடன்...?"

"அத்துடன் பட்டத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் கிருஷ்ணராயனுடைய கண்கள் தேவை. அப்போதுதான் என் உயிரின் கண்கள் நிம்மதியாக நெடிது துயிலும்!"

திம்மராயர் இம்முறை ஒரு கணம் அதிர்ந்து விட்டார். அவர் அப்படி அதிர வேண்டும் என்பதற்காகத்தானே மன்னர் வீர நரசிம்மரும் இவ்வாறு கேட்டுக் கொண்டது! மன்னருடைய உள்ளக்கிடக்கையை யாரே அறிவர்?

"ஏன் பிரதானியாரே, உறுக்கம் கண்டு விட்டீர்கள்?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. கிருஷ்ணராயனுடைய கண்கள்மூலம் காரியம் இனிது நடைபெறுமானால், அட்டியின்றி வரவேற்கிறேன். என்றாலும் காரணத்தை விளக்க வேண்டுகிறேன்!"

வீர நரசிம்மர் நமட்டுச் சிரிப்புடன் மெல்லிய குரலில் சொன்னார்:

"சாளுவ திம்மராயரே! போரில் புலியாகிய உமக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. நானே என் நிலை சாய்ந்ததும் கிருஷ்ணராயன் என் மகனுடைய வயதைக் காட்டி அரியணை ஏறி விடுவான். முடிவில், என்னை அண்ணன் என்றும் பாராமல், இப்பிடி நரசிம்மனைக் கொலைசெய்து பறித்த அரியணை இது என்று மகனிடம் காரணம் காட்டி விடுவான். ஆகவேதான் அவனுடைய கண்களைப் பறிக்க ஆசைப்படுகிறேன்!"

"சுத்த வீரனாயிற்றே அவன்."

"ஆனால் சுயநலத்துக்குக் களங்கம் உண்டு!"

"என்னை நம்பலாம், அல்லவா?"

"மனிதன் நாளைப் பற்றி நம்பக் கூடாதவன்....!"

"அப்படியென்றால், நாளைக் காலையில் தாங்கள் கிருஷ்ணராயனுடைய கண்களில் விழிக்கலாம்!"

திம்மராயர் விடைபெற்றார். வீர நரசிம்மர் மெல்ல நகைத்துக் கொண்டார். ஆனால், உள் மனம் மட்டும் இந்த விஷப் பரீட்சையின் மூலம் ஏதாவது அவல நிலை ஏற்பட்டுவிட்டால், பிறகு கண்களைப் பெற முடியாத கபோதி நிலை விஜயநகரத்துக்கே ஏற்படலாம் என்று அறிவுறுத்தியது. உண்மையில் வீர நரசிம்மர் கண்களை மூடிவிட்டால், பிறகு திறந்திருக்க வேண்டிய கண்கள் வீரக் கண்களாக மட்டுமல்ல, அரச மரபுக் கண்களாகவும் இருக்க வேண்டும். அதற்காகவே மன்னர் ஓர் ஏற்பாட்டின் கீழ் விஷப் பரீட்சையில் இறங்கலானார். அன்பின் விலை தெரிந்தவர் வீரநரசிம்மர் என்று வரலாற்று அறிஞர்களும் தெலுங்குக் காவியங்களும் புகழும்போது, மாவீரனான கிருஷ்ணராயனுடைய கண்கள் தாமா குரூரமாக இருக்கப் போகின்றன?

சாளுவ திம்மராயரின் மனக் கலக்கத்தைப் போலவே அரண்மனைக் கூடத்துச் சர விளக்குகள் மங்கிய ஒளியைப் பரப்பின. அவருடைய சிந்தனைஅலைகள் அரசியல் அலைகளுடன் மோதி இரத்த நுரையைக் கக்கிக் கொண்டிருந்தன.

கிருஷ்ணராயனுடைய கண்களைப் பறிப்பதா? சே! சே! மாபெரும் வீரனாயிற்றே! அரச தந்திரியாயிற்றே! மக்கள் மனமறிந்தவனாயிற்றே! சகல கலா வல்லுநன் ஆயிற்றே! இவனுடைய கண்களைப் பிடுங்கினால் பின் விஜயநகரப் பேரரசின் கண்களையே பிடுங்குவதற்குச் சமமாகும் அல்லவா?

"பிரதானியாருக்கு என் வணக்கம்!" குரல் கேட்டுச் சாளுவ திம்மராயர் சிந்தனையிலிருந்து விடுபட்டுத் திரும்பிப் பார்த்தார். மலர்ந்த முகத்தில் அறிவார்ந்த கண்களை அகல விரித்துத் தாழ்மையைத் தெரிவித்த வண்ணம் அருகில் வந்து நின்று கொண்டிருந்தான் கிருஷ்ணராயன்.

"வா, கிருஷ்ணராயா! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயமாகப் பேசவே உன்னை அழைத்தேன்!"

"சொல்லுங்கள், பிரதானியாரே! தாங்கள் சொல்லும் எதுவும் வேத வாக்குக்கு ஒப்பானது என்பதை நானறிவேன். அண்ணாவுக்கு உடல் நிலை எப்படி இருக்கிறது? என்னைத் தான் வந்து பார்வையிடக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவின் மூலம் தடை செய்து விட்டார். செய்தியையாவது நான் அறியலாமல்லவா?"

திம்மராயர், கிருஷ்ணராயனை உற்றுக் கவனித்துச் சொன்னார். "கிருஷ்ணா! நரசிம்மர் பிழைக்க மாட்டார்!"

"ஆ! என்ன சொன்னீர்கள்!" கிருஷ்ணராயன் துடிதுடித்துப் போய் விட்டான். இத்தனைக்கும் உடன் பிறந்தவரல்லர்; பெரியம்மையின் புதல்வர் நரசிம்மர்.

"ஒன்றும் சொல்ல வில்லையே! இனித்தான் சொல்லப் போகிறேன். கிருஷ்ணா! அடுத்துப் பட்டத்துக்கு நீ வரவேண்டும் என்று ஆசைப் படுகிறாய். ஆனால் மன்னரோ, தம்முடைய எட்டு வயதுச் சிறுவன் அரியணை ஏறவேண்டும் என்று ஆசைப்படுகிறார்!"

"இது முடிகிற காரியமா, பிரதானியாரே? அப்போது..."

"ஆட்சியின் பொறுப்பைத் திருமலைத் தேவன் பக்குவமடையும் வரையில் என் வசம் ஒப்படைத்திருக்கிறார்!"

"அப்படி என்றால், நான்?"

"இப்படி ஏதேனும் கேட்டு வெறி கொள்வாய் என்று எண்ணித்தான் உன்னுடைய கண்களைப் பிடுங்கும்படி தண்டனை வழங்கியுள்ளார், மன்னர்."

"அவரா அநீதிக்கு ஆளாகிறார்?"

"அநீதிக்கு ஆளாகித்தானே ஆட்சியையே கைப்பற்றினார்?"

"பிரதானியாரே! இன்னொரு முறை என்னெதிரில் சொல்லாமலிருக்க வேண்டுகிறேன். இப்போது என்னுடைய கண்கள் தாமே தேவை? அண்ணாவின் ஆத்மா இவற்றின் மூலம் சாந்தியடைவதானால், இதோ பிடுங்கிக் கொள்ளுங்கள்!"

"பொறு வீர மகனே! பொறு! உன்னை நான் அறியாதவனல்லவே?"

"அறிவீர்கள். ஆனாலும், அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டும். என் வழியிலோ இந்த விஜயநகர ஆட்சி நிலைக்க வேண்டும்! அதற்கு என்னுடைய தியாகம் இந்த இரு கண்களாக அமையட்டுமே?"

"ஆம்! விஜயநகரமே உன்னுடைய இரு கண்களினால்தாம் உலகை நோக்க இருக்கின்றன, கிருஷ்ணராயா!"



அழகுச் சாதனங்களான "ஆப்கன் ஸ்னோ" முகப் பூச்சு, உதட்டுச் சாயம், நகச் சாயம், கூந்தல் தைலம் முதலிய உயர் தயாரிப்புக்களை மக்களுக்கு அளித்து இந்தியாவில் மட்டுமின்றிப் பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிலும் புகழுடைந்துள்ள பட்டன்வாலா கம்பெனியின் பொன்விழா சமீபத்தில் பம்பாயில் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்களுடைய தொடக்க உரையுடன் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

சாளுவ திம்மர் அலட்சிய நோக்குடன் மெல்லச் சிரித்துக் கொண்டார். அந்தச் சிரிப்பில் பல சிந்தனை ரேகைகள் படர்ந்தன.

துங்கபத்திரை ஆற்றைப் பொன் மயமாக்கப் புறப்பட்டான் தங்கமயமான கிழக்கின் தலைவன். முந்திய நாளை விட மக்கள் கூட்டம் ராஜபாட்டைகளில் நெருக்கமாகக் காணப்பட்டன. அவர்களிடையே யாரோ தவறுதலான திடீர்ச் செய்தியை முன் கூட்டியே பரப்பி விட்டார்கள். அது மன்னர் வீர நரசிம்மர் இறந்து விட்டார் என்ற செய்திதான்!

சிற்சில இடங்களில் பரபரப்புகள் காணப்பட்டன. நெருப்பு என்று சொல்வதற்குள் சுடுபட்டவர்கள் போல் துடிதுடிக்கும் பேர் வழிகள்தாம் எந்த நாட்டிலும் ஏராளம் ஆயிற்றே?

அரண்மனையுள் மன்னர் வீர நரசிம்மருடைய விழிப்புக்கு எதிர்நோக்கி நின்று கொண்டிருந்தார், பிரதானியார் திம்மராயர்.

வீரநரசிம்மர் துயிலிலிருந்து மெல்ல விழித்தார். எதிரே பிரதானியார் அமைதியுடன் நின்று கொண்டிருந்தார். அவருடைய கையில் ஒரு வட்டில் இருந்தது. அதில் உதிரம் தோய்ந்த கண்களும் இருந்தன.

வீரநரசிம்மர் அந்தக் கண்களைக் கண்டு எந்தவிதமான எதிர் நடிப்பையும் காட்டிக் கொண்டாரில்லை.

"கிருஷ்ணன், இப்போது குருடன்!"

இவ்வளவுதான் அவர் முணுமுணுத்தது.

சில கணங்கள்—

சட்டென்று திம்மராயரை நோக்கி, "பிரதானியாரே! இவை கிருஷ்ணனுடைய கண்கள்தாமே?" என்று கேட்டார். திம்மராயர் சற்றும் தயங்காமல், "ஆம், மகாராஜா!" என்றார். வீர நரசிம்மர் கலகல வென்று சிரிக்க முயன்றார். ஆனால் முடியவில்லை. முடிவில் இருமலே கலகலத்தது.

"திம்மராயரே! வெற்றி உமக்கே! என்னுடைய விஷப் பரீட்சை என்னை அமைதி தேடச் செய்து விட்டது!"

திம்மராயர் விழித்தார்.

"விழிக்க வேண்டாம், பிரதானியாரே! இவை ஆட்டின் கண்கள் என்பதை நானறிவேன்! வேண்டுமானால் அந்தக் குருட்டு ஆட்டை இப்போது கொண்டு வரச் செய்கிறேன்! பயப்படாதீர்கள். முதலில் நான் சந்தேகித்தது கிருஷ்ணராயனை அல்ல; உங்களைத்தான். என் காலத்துக்குப் பிறகு உங்கள் மனம் மாறுதலடையுமோ என்று எண்ணியே கிருஷ்ணராயனுடைய கண்களைக் கேட்டேன். அவ்வாறான சதித் திட்டம் நான் கேள்விப்பட்டதுபோல் இருக்குமானால் உண்மையில் தாங்கள் கிருஷ்ணராயனுடைய கண்களைப் பிடுங்கி வந்திருப்பீர்கள். இந்தச் சோதனைக்காக என்னை மன்னியுங்கள். உங்களைப் புரிந்தும், புரியாதவனாக நடித்து விட்டேன். இது என் மரண காலக் கோளாறு! என்னை மன்னியுங்கள், திம்மராயரே!"

மன்னர் வீரநரசிம்மர் குழந்தை போல் கேவினார்.

"மகாராஜா! உங்கள் சோதனையால் நான் மேலும் பெருமையடைந்தேன்! இதற்கு மன்னிப்பு என்ன வேண்டியிருக்கிறது?"

"உண்மை பிரதானியாரே! ஒரு விஷயம் தெரியுமா?"

"என்ன சொல்லுங்கள், மகாராஜா?"

"அந்தக் குருட்டு ஆட்டைக் கொண்டு வந்த ஒற்றன் மிகவும் சாமர்த்தியக்காரன். உங்களைப் பின்தொடர்ந்து நடப்பனவற்றைக் கவனித்து ஆட்சியை நிலைநிறுத்தப் பெரிதும் துணை புரிந்தவன். அவனைப் பார்க்க வேண்டு மல்லவா? அதோ பாருங்கள்!"

திம்மராயர் ஆவலுடன் மன்னர் காட்டிய திக்கை நோக்கினார். ஓர் அறையிலிருந்து புன்னகை செய்த வண்ணமாகக் கிருஷ்ணராயன் வந்து கொண்டிருந்தான். இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். அடுத்து மன்னர் படுக்கையை நோக்கினர். வீர நரசிம்மர் வாழ்த்துக் கூறி மேலுலகுக்குப் பயணமாகிச் சில கணங்களாகி விட்டன. அவருடைய கண்கள் மூடிக் கிடந்தன.


மரகதச் சிலை

கதை : வாண்டுமாமா சித்திரம் : வினு




இனிப் பயமில்லை ஓடி விட்டாள்.
அவள்
குதிரை, ஆடு, மான் இவைகளின் உடலும் மனிதத் தலையும் உள்ள விசித்திரப் பிறவிகளைக் கண்டு வெங்கை மார்பன் ஓட்டமெடுக்க, நிர்மலாவிற்கு அந்த மிருக மனிதர்கள் அடைக்கல மளிக்கின்றனர்.
நான் உங்கள் அன்புக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?
நாட்கள் நகர்கின்றன.
ஆதித்தனை எங்கு தேடுவேன்? பெற்றோருக்கு எப்படி விடுதலை கிடைக்கும்? ஈசா...!
காட்டு மனிதர்களிடையே நிர்மலாவிற்கு ஒரு குறையுமில்லை. ஆனால் உள்ளம் மட்டும்... ஒரு நாள் நிர்மலாவின் முன் அழகிய உருவமை இளைஞன் ஒருவன் தோன்றினான்.
யாரப்பா நீ? இந்தப் பகுதிக்குச் சாதாரணமாக யாரும் வர மாட்டார்களே.
என் பெயர் பத்மநாபன். என்னைக் கண்டு யாரும் பீதி கொள்ள வேண்டாம். நான் உங்களுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்க மாட்டேன். உங்களால் காவல் காக்கப்படும் இந்த அழகிய பெண்ணிற்கு என்னால் எந்தவித உதவி தேவையானாலும் மகிழ்வோடு செய்கிறேன்.


உங்கள் தோற்றம் என் உள்ளத்தில் நம்பிக்கையை உண்டாக்குகிறது.
நிர்மலா தன் சோகக் கதை முழுவதையும் அவனிடம் சொல்லுகிறாள்.
இனி நிர்மலாவை உங்கள் பொறுப்பில் ஒப்புவிக்கிறேன்.
கவலையே வேண்டாம். உங்களின் அன்பை நானும் மறக்கவே மாட்டேன்.
ஐயா, கூழ விறகு வெட்டியவரே! இந்தப் பக்கமாகக் குதிரை மீது அழகிய இளைஞன் யாராவது போகக் கண்டீர்களா?
வரும் வழியில் ஓர் ஓடைக் கரையில் நீங்கள் குறிப்பிடும் அடையாளமுள்ள ஒருவன் ஒருவரைக் காயப்படுத்தி விட்டுப் போவதைக் கண்டேன். உதவப் போன என்னையும் விரட்டி விட்டான்.
காயமடைந்து ஆபத்தாக இருக்கிறாரோ என்று அஞ்சுகிறேன். அந்த மந்திரவாதியை விரட்டியடித்தது அவர்களுக்குத் தெரியுமா?
அந்தக் குறவன் குறிப்பிட்ட முரடன் இவனாகத்தான் இருக்க வேண்டும். ரத்தக் கறை படிந்த கையை ஓடையில் கழுவிக் கொண்டிருக்கிறான் போலும்.
ஐயோ! இவன் என்னைக் கட்டி இழுத்துச் சென்ற கொடியவனல்லவா......?
நிர்மலாவின் பீதிக்குக் காரணமான வேங்கை மார்பனுடன் போராடி அவனைத் தன் வாளுக்கு இரையாக்கி விட்டுத் திரும்பினான் பத்மநாபன்.
நில் நிர்மலா, நில்! ஓடாதே உன்னைத் துன்புறுத்தியவனை ஒழித்துக் கட்டி விட்டேன். ஓடாதே!
தொடரும்

எந்நாளிலும்  பீச்சஸ் 

பாலைவனத்தில்  சாப்பிடலாம்

அது வீணான யோசனையல்ல 

மிட்லண்ட் இருக்கும்போது  எங்

கும், எச்சமயத்திலும்  அற்புத

மானது. தனிமையாகச் சாப்பிட்டால்

சுவைமிகுந்தது  பாலாடை

யோடு  உண்டாலோ கேட்கவே

வேண்டாம். ஐஸ் க்ரீமுடன்  சாப்பிட்

டால் ஆஹா! திவ்யமாக இருக்கும்.

Midland

மிட்லண்ட் - சுவை மிகுந்த 23 வகைகள் பழங்களாகவும், மரக்கறிகளாகவும், ஜாம்களாகவும்,
ஜெல்லிகளாகவும், மற்றும் கெச்சப்களாகவும் கிடைக்கின்றன.

MIDLAND

தயாரிப்பாளர்கள்: மிட்லண்ட் ப்ரூட் அன்டு வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ் (இந்தியா) மதுரை.
ஏகபோக விநியோகஸ்தர்கள்: கார்ஸன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்., பம்பாய்
இந்தியாவிற்கான ஏஜென்டுகள்: பாரி அன்டு கம்பெனி லிமிடெட்.



கல்பனா

ஓவியன் அமர் காஷ்மீரத்தில் கட்டழகி கல்பனாவைக் கண்டான். கண்டதும் கருத்தில் பதிந்து விட்ட அவ்வெழில் அரசியை வண்ண ஓவியமாகத் தீட்டினான். அவனது கை வண்ணங் கண்டு கல்பனா வியந்தாள்; அவள் அழகைக் கண்டு அமர் அயர்ந்தான். தன் உள்ளங் கவர்ந்தவளின் இல்லந் தேடிச் சென்ற அமருக்கு வாசற் கதவில் தொங்கிய பூட்டு பதில் கூறிவிட்டது. ஏமாற்றமடைந்த அமர் பம்பாயை நோக்கிப் பிரயாணமானான்; ரயில் பெட்டியில் அழகி ஆஷாவைச் சந்தித்தான்; அவன் பம்பாயில் நடத்தும் பாரதிய கலா கேந்திரத்தில் அவளை நடன ஆசிரியையாக நியமித்தான். கல்பனாவை ஒரு நாள் அமர் நடன மேடையில் சந்தித்தான். பிறகு அவள் அவன் வீடு தேடி வந்தாள்; ஆஷாவின் இதயம் அமருக்காகத் துடிப்பதை அறிந்து கொண்டாள். கல்பனாவைக் கண்ட ஆஷா கருவினாள். கல்பனாவை மணந்து கொள்வது என்று அமர் தீர்மானித்த சமயம் அதைக் கெடுக்க ஒரு வில்லன் தோன்றினான். தாகூர் திலிப் சிங் என்ற முரட்டு மனிதன், கல்பனாவின் தாய் ஒரு விலைமாது என்று கூறி அந்த விவாகத்தைத் தடுக்க முயன்றான்.

உள்ளம் உருகி, உருக்குலைந்து, கண்ணீர் பெருக்கி, கவலையில் கரையும் கல்பனாவின் பாகத்தை நம் தமிழ் நாட்டுப் புகழ் பெற்ற நட்சத்திரமான பத்மினி ஏற்றிருக்கிறார். அவருக்குத் தகுந்த பாகம் அது. ஹிந்திமொழியை அழகாக உச்சரித்து, அருமையாக நடித்திருக்கிறார். கல்பனாவின் உள்ளக் குமுறல்களுக்குக் காரணம், அவள் குடும்பத்தில் இருந்த நெறி தவறிய நிலைதான். ஆனால் இதை வெளிப்படையாகக் காட்டி, கதையை விரஸமாக்காமல் உள்ளோட்டமாகவே விட்டிருப்பது பாராட்டுக்குரிய விஷயம். பத்மினி ஆடியிருக்கும் நடனங்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன. அவற்றுள், ஆஷாவும் கல்பனாவும் சிவபெருமான் சன்னதியில் ஆடிய நடனம் சிகரமாயிருக்கிறது.

அமருக்கு எதிரில், ரயில் வண்டி என்பதையும் மறந்து ஆஷா நாட்டியமாடத் தொடங்கியது, சுத்தப் பைத்தியக்காரத்தனமாகவே தோன்றியது. கல்பனாவைக் கண்டு பொறுமைப்பட்ட போதும், கல்பனாவும், அமரும் கடைசியில் ஒன்றுபட்டு விட்டதைப் பார்த்துக் கண்ணீருடன் வெளியேறிய போதும் ஆஷாவின் பாகம் உயிருள்ள பாத்திரமாகிவிட்டது. ராகினி ஆஷாவாக மிக நன்றாக நடிக்கிறார்.

ஹிந்திப் படங்களின் நிரந்தரக் கதாநாயகனான அசோக்குமார் அமராக வருகிறார். பழைய காலத்துப் படங்களில் காதலனாகவே வருவார். இப்பொழுது அந்த வயது தாண்டிவிட்டபடியினால் தாரம் இழந்தவனாக வர ஆரம்பித்திருக்கிறார். தம் பாகத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

''கல்பனா'' படத்தில் அருமையான காஷ்மீரக் காட்சிகளைப் பார்த்து மகிழலாம்.

இரண்டு பெண்கள் ஓர் ஆடவனைக் காதலித்தால் அநேகமாக ஒருத்தி சாக வேண்டி வரும். அசோக் பிக்சர்ஸாரின் தயாரிப்பான ''கல்பனா''வில் அந்த முடிவு நன்றாக மாற்றப்பட்டிருக்கிறது. கண்ணீரில் கரைந்து, துயரத் தீயில் கருகிக் கொண்டிருந்த கல்பனாவைக் கடைசியில் சந்தித்த அமர், அவள் களங்க மற்றவள் என்பதை அறிந்து கொள்கிறான்: கல்பனா பிழைத்துக் கொள்ளுகிறாள்: அவள் காதலும் உயிர் பெறுகிறது. ஆஷா ஆசாபங்கமடைந்து ஓடி மறைகிறாள்.

பாடல்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன. கண்குளிரப் பார்த்துக் களிக்கவும், காது இனிக்கக் கேட்கவும், உள்ளம் விம்மி உருகவும் - காட்சிகளும், பாடல்களும், நிகழ்ச்சிகளும் ''கல்பனா''வில் நிறைய இருக்கின்றன.

காந்தன்

இந்தத் தலைப்பைப் பார்த்ததும் ஒரு படத்தின் பெயரென்று யாரும் நினைக்க மாட்டார்கள். "The sword and the dragon" என்ற ருஷ்யப் படத்துக்குத்தான் தமிழில் ''கத்தியும் காலசர்ப்பமும்'' என்று தலைப்புக் கொடுத்திருக்கிறேன்.

புராணக் கதைகளும், இதிகாசக் கதைகளும் நம் நாட்டில் மட்டும் இல்லை; உலகத்து நாடுகளிலெல்லாம் இருக்கின்றன. "Ilya Muromets" என்று ருஷ்ய மொழிப் பெயருள்ள இந்தப் படம் அந்நாட்டில் பன்னெடுங் காலமாக வழங்கி வரும் பிரசித்தி பெற்ற கதை.

இலியா மாபெரும் வீரன். ஆனால் அவன் கால், கைகள் சுவாதீனம் இழந்திருந்தன. அவன் கண்ணெதிரிலேயே, பயங்கரக் கொள்ளைக் கூட்டத்தினர் புகுந்து அவனது நாட்டு மக்களையே அல்லற் படுத்தினர். இலியாவின் அன்புக்குகந்த ஆரணங்கான வாஸிலிஸாவைக் கடத்திக் கொண்டு போயினர். சேனைத் தலைவனான மிஷாகா கொள்ளைக் கும்பலால் சிறை பிடிக்கப்பட்டுக் கொடுமைக்குள்ளாக நேரிடுமோ என்ற அச்சத்தினால் பகைவர்களுக்கு மறைமுகமாகத் துணையாயிருக்க ஒப்பந்தம் செய்துகொண்டான்.

இலியாவுக்கு மந்திர வாளும், அசுர பலமும் கிட்டுகின்றன. புத்துயிரும், புது பலமும் அளிக்கவல்ல தீர்த்தமும் கிடைக்கிறது. இலியா விறுகொண்டெழுந்து ஒரு புரவியில் ஏறிக்கொண்டு கொடியவர்களை ஒழிக்கப் புறப்பட்டு விடுகிறான்; கனத்தகரமான ஒரு வனாந்திரத்தை அடைகிறான். அங்கு ஒரு வெள்ளைக் கோபுரத்தில், பின்வருமாறு எழுதப் பட்டிருக்கிறது: ''வலது பக்கமாகப் போனால் பணக்காரனாகலாம்; இடது பக்கமாகப் போனால் மணமகனாகலாம்; நேராகப் போனால் மரணத்தை அடையலாம்'' இலியா நேரே தன் குதிரையைச் செலுத்திக் கொண்டு போய், கொள்ளைக்காரன் நைட்டிங்கேலைச் சந்திக்கிறான். அவன் விட்ட பயங்கர மூச்சுக்காற்றினால் மரங்களெல்லாம் வேரோடு பறிக்கப்பட்டுப் பறக்கின்றன. இலியா மட்டும் அசைவற்று நின்று அவன்மீது அம்பு விட்டு அடக்கி ஒடுக்குகிறான். மன்னன் விளாடிமிர் இலியாவுக்குப் பல பரிசுகள் வழங்குகிறான். சேனைத் தலைவன் மிஷாகாவின் சூழ்ச்சியினால் இலியா பாதாளச் சிறையில் அடைக்கப் படுகிறான்; கொள்ளைக் கூட்டத்தினரின் ஆக்கிரமிப்பைச் சமாளிக்க முடியாமல், மன்னன் விளாடிமிர் இலியாவை விடுவித்து அவன் உதவியை நாடுகிறான். இலியாவின் குமாரனே இலியாவை எதிர்க்கிறான். தந்தையும் மகனும் ஒருவரையொருவர் அறியாமல் போரிடுகின்றனர்; கடைசியில் உண்மை தெரிந்து ஒன்றுபடுகின்றனர். இறுதியாகப் பகைவன் காலசர்ப்பத்தை ஏவுகிறான்.



ஆரம்பத்திலிருந்து அற்புதமாகப் படமாக்கப் பட்டிருக்கிறது. இலியாவாக நடிப்பதற்குத் தகுந்த நடிகரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அமானுஷ்ய பலமும், அமித பராக்கிரமமும் கொண்டிருந்த புராண காலத்து மனிதனாகவே தோன்றுகிறார் அவர்.

கொள்ளைக்கூட்டத்தினரின் அட்டகாசமும் கொள்ளைக்காரனின் கொடுமையான மூச்சுக் காற்றின் கொடூர விளைவுகளும் அற்புதமாயிருக்கின்றன. ஆனால், காலசர்ப்பத்துடன் இலியா போரிடுவதுதான் பெரிய ஏமாற்றமாயிருக்கிறது! வாழைக் குலைகளை வெட்டி வீழ்த்துவது போல் மிகச் சுலபமாக அதன் தலைகளைத் துணித்து விடுகிறான் இலியா. படத்தின் பெயர்தான் பயங்கரமாயிருக்கிறது! படம் ஆங்கிலத்தில் 'டப்' செய்யப் பட்டிருக்கிறது.

பிரதான படத்தைவிட 'A million in a bag" என்ற கார்ட்டூன் படம் மிகவும் நன்றாயிருக்கிறது. ஓர் ஓவியனின் கைவண்ணத்தில் எழும் அதிசயங்களும், ஒரு கலைஞனின் வயலின் இசையிலிருந்து எழும் வண்ண வண்ணப் பூக்களும் வியப்பை உண்டாக்குகின்றன. பணத்தாசை பிடித்த ஒரு பிரபுவின் பேராசையும், அந்தப் பேராசையை ஓவியன் தீர்த்து வைத்த விதமும் மிகவும் தமாஷாயிருக்கின்றன. கடைசியில் ஓவியன் உண்டாக்கிய பணப் பைக்குள்ளேயே பேராசைக்காரன் அகப்பட்டுக் கொள்கிறான்.

பொழுது போக்கு அம்சத்தில் சிறந்து விளங்கும் இப்படங்களை யாருமே கண்டு களிக்கலாம். ருஷ்யப் படஉலகம் அடைந்து வரும் மிகத் துரிதமான முன்னேற்றத்தையும் கண்டு வியக்கலாம்!

ஸ்பென்ஸர்ஸ் கிரைப் ஸிரப்

குழந்தைகளுக்கு சிறந்தது



இது ஸ்பென்ஸ கம்பெனியாரின் உயர்ந்த தயாரிப்பு

Sole Distributors For Spencer's GRIPE SYRUP for Madras State :
THE DRUG HOUSE, SALEM - 1
Branch: MADRAS

"மூலம் தீராத வினையன்று"

பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்–புதிய நிவாரணி அரிப்பு, எரிச்சல் மற்றும் வலியிலிருந்து குணமளிப்பதுடன் மூலத்தையும் சுருக்குகிறது.



உலகப் பிரசித்தமான ஆராய்ச்சிக் கூடமொன்று மூலத்தைச் சுருக்குவதுடன், வலியற்றமுறையில் குணப்படுத்தக்கூடிய புதிய பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறது. அப்பொருள் சில நிமிடங்களிலேயே அரிப்பையும் வலியையும் போக்குவதுடன் பாதிக்கப்பட்ட தசைநார்களையும் குணப்படுத்துகிறது. உண்மையாகவே, சுருக்கமும் ஏற்படுகிறது. டாக்டர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளும்–10, 20 வருஷங்களான கேஸ்களில்கூட–இதை நிரூபித்தன. மேலும் வியக்கத்தக்கதென்னவென்றால், இந்த நல்ல முன்னேற்றம் பல மாதங்களுக்கு நீடித்திருந்தது. உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள், இதனால் அடைந்த பூரணக் குணத்தைக் கண்டு வியந்து "மூலம் தீராத வினையன்று" எனக்கூறினார்கள். இவ்வளவு பலன்களும், எந்த விதமான போதை தரும் மருந்துகளோ, அல்லது துவர்ப்பு பொருள்களோ, மயக்க மருந்துகளோ, உபயோகிக்காமல் அடையப் பெற்றவை; இரகசியம் என்னவென்றால், இந்த விசேஷமான புதிய நிவாரணி (பயோ-டைன்*) புண்ணான இடத்தைச் சீக்கிரத்திலேயே குணப்படுத்தி, மறுபடியும் ஆரோக்கியமான தசை துரிதமாக வளர உதவுகிறது. இப்பொருள் களிம்பு வடிவத்தில் ப்ரிப்பரேஷன் H* என்ற பெயரில் கிடைக்கிறது. உண்மையாகவே மூலத்தைச் சுருக்குவதுடன்–ப்ரிப்பரேஷன் H*, வழவழப்பாக்குவதன் மூலம், கழிவுப் பொருள் வெளியேறும் போதுள்ள வலியைக் குறைக்கிறது. அது மூலத்தின் முக்கிய காரணமான இரணம் பரவுவதையும் தடுக்கிறது.

இப்பொழுது இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜாப்ரே மானேர்ஸ் & கோ (பி) லிட்.
டிரேட்மார்க் உரிமையாளர்கள்:
ஒயிட்ஹால் லாபரட்டரீஸ், U.S.A.
ப்ரிப்பரேஷன் H*
களிம்பு

*டிரேட் மார்க்.


தாரமங்கலத்துக் கயிலாயர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

இராமகாதை எல்லோரும் நன்கு அறிந்த தொன்று. எல்லா நற்குணங்களும் நிறையப் பெற்றவனாக இருந்தவன் காப்பியத் தலைவன் சக்கரவர்த்தித் திருமகனான ராமன். அந்த ராமனுமே நிலை பிறழ்ந்து விடுகிறான். நீதியினின்றும் வழுவி விடுகிறான் என்பர், அக்கதையில் வரும் வாலி வதத்தைப் படிப்பவர்கள். வாலியும் சுக்ரீவனும் வானர வீரர்கள்; அண்ணன் தம்பியர். இருவரும் வரம்பில் ஆற்றல் உடையவர்கள். இவர்களை எதிர்த்த அவுணன் ஒருவனைத் துரத்திக் கொண்டு செல்கின்றனர். அவுணனோ ஒரு பிலத்துக்குள் புகுந்து கொள்கிறான். வாலி தன் தம்பியைப் பிலத்துவாரத்தில் நிறுத்தி விட்டு, பிலத்தினுள் புகுந்து அவுணனுடன் போர் புரிகிறான். பிலத்தினுட் சென்ற வாலி பல நாட்களாகியும் வராதது கண்டு பில வாயிலை அடைத்து விட்டுச் சுக்ரீவன் நாடு திரும்புகிறான். வாலி இறந்து விட்டான் என்று எண்ணிய கிட்கிந்தை வானரர்கள் சுக்ரீவனுக்கு முடிசூட்டி வைக்கின்றனர். பிலத்தினுள் பெரும் போர் செய்து அவுணன் உயிர் குடித்துத் திரும்பிய வாலி, முடிசூட்டிக் கொண்ட தம்பி சுக்ரீவன் பேரில் கோபம் கொண்டு அவனை நாட்டை விட்டே விரட்டி விடுகிறான். சுக்ரீவனும் கிஷ்கிந்தையை அடுத்த மலைச்சாரலிலே அநுமன் முதலிய வானர வீரர்களோடு மறைந்து வாழ்கிறான். பஞ்சவடியிலே இராவணன் சீதையை எடுத்துச் செல்ல அவளைத் தேடிக் கொண்டு வந்த ராம லக்ஷ்மணர்களை அநுமன் கண்டு தன் தலைவன் சுக்ரீவனிடம் அழைத்து வருகிறான். ராமனும் சுக்ரீவனது கதையைக் கேட்டு அவனுக்கு உதவி புரிய வாக்களிக்கிறான். ராமனது துணையுடன் போருக்குச் செல்கிறான் சுக்ரீவன். நடக்கும் போரிலே, 'யார் வாலி, யார் சுக்ரீவன்' என்று அறிய முடியவில்லை ராமனுக்கு. முதல் நாள் போரில் சுக்ரீவன் தோற்று விடுகிறான். இரண்டாம் நாள் போரிலே, இராமன் விரும்பியபடி சுக்ரீவன், கொடிப் பூமாலை ஒன்றை அணிந்து செல்கிறான். அன்று நடந்த போரில் இராமன் மறைந்து நின்று பாணம் எய்து வாலியை வீழ்த்துகிறான். ராமன் சுக்ரீவனுக்குத் துணை வந்தது சரிதானா? அந்த அண்ணன் தம்பி போரில், மறைந்து நின்று அம்பெய்து வாலியை வீழ்த்தியது அறம் கடவாத செயலாகுமா என்பதுதான் அன்று முதல் இன்று வரையில் அறிஞர்களிடையே நடக்கும் வாதம்.

இருவர் போர் எதிரும் காலை
இருவரும் நல் உற்றாரே;
ஒருவர் மேல் கருணை தூண்டி
ஒருவர் மேல் ஒளித்து நின்று,
வரிசிலை குழைய வாங்கி
வாய் அம்பு மருமத்து எய்தல்
தருமமோ பிறிதொன்றாமோ?

என்று வாலி கேட்கும் கேள்விக்கு ராமனால் பதில் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. இது கிடக்கட்டும். இந்தப் போர்க்களத்தில் எப்படி ராமனால் வாலி அறியாது மறைந்து நிற்க முடிந்தது என்பது மற்றொரு கேள்வி. பரந்த வெளியிலே நடக்கும் போரிலே, வாலி காணாது மறைந்து நிற்க ராமனால் இயலுமா என்பது, ராம காதையில் நம்பிக்கையற்றவர்களது வாதம். இந்த இரண்டாவது கேள்விக்கு விடை காண வேண்டுமானால் தாரமங்கலத்துக்குப் போக வேண்டும். அங்குள்ள சிற்ப வடிவங்களில் வாலி—ராமன் சிலைகளைக் காண வேண்டும். இரண்டு வடிவங்களையும் இரண்டு தூண்களில் செதுக்கி வைத்திருக்கிறான் சிற்பி. என்றாலும் ராமனது வடிவம் இருக்கின்ற இடத்திலிருந்து பார்த்தால் வாலியின் வடிவம் நன்றாகத் தெரிகிறது. ஆனால் வாலி வடிவம் இருக்கும் தூண் பக்கம் நின்று ராமனைப் பார்த்தால் பார்க்க முடிவதில்லை. இந்த நிலையிலே தூண்களையும் அந்தத் தூண்களில் வடிவங்களையும் அமைக்கத் தெரிந்திருக்கிறான் அச்சிற்ப வடிவங்களை அமைத்த கலைஞன். இந்த வடிவங்களை மாத்திரம் அல்ல, இன்னும் எண்ணற்ற சிற்பச் செல்வங்களைக் காணும் ஆவல் உடையவர்களெல்லாம் செல்ல வேண்டிய கோயில்தான் தாரமங்கலத்திலுள்ள கைலாசநாதர் கோயில். அந்தக் கோயிலுக்கே செல்கிறோம் நாம் இன்று. தாரமங்கலம் சேலம் ஜில்லாவில் ஓமலூர் தாலுக்காவில் உள்ள சிறிய ஊர். சேலத்துக்கு நேர் மேற்கே பதினாறு மைல் தொலைவில் இருக்கிறது. சேலம் ஜங்ஷனில் இறங்கி, பஸ்ஸிலோ காரிலோ செல்லலாம். இவ்வ



கோபுரவாயில்

வரும் சேலம் மேட்டூர் அணை ரயில் பாதையில் ஓமலூர் ஸ்டேஷனில் இறங்கி வண்டி வைத்துக் கொண்டு தென்மேற்காக ஆறு மைல் சென்றும் செல்லலாம். சேலம்—மேட்டூர் அணை ரயில் வழியாகப் போவதை விட சேலம் ஜங்ஷனில் இறங்கி பஸ்ஸில் போவதே வசதியானது. ஊர் வந்து சேர்ந்ததும் கோயிலுக்குச் செல்லலாம். கோயில் மேற்கே பார்த்த கோயில். ஒரு காலத்தில் இந்த வட்டாரம் முழுதும் ஒரே காடாக இருந்திருக்கிறது. தண்டகாரண்யமே இப்பகுதி தான் என்பர் ஒரு சாரார். அந்த இடத்திலே பக்கத்திலுள்ள அமர குந்தியைத் தலை நகராகக் கொண்டு ஒரு சிற்றரசன் ஆண்டு வந்திருக்கிறான். அவனிடம் பெரிய ஆநிரை இருந்திருக்கிறது. அந்த ஆநிரையில் உள்ள பசுக்கள் எல்லாம் அங்கு உள்ள காடுகளில் சென்று மேய்ந்து வந்திருக்கின்றன. அதில் ஒரு பசு மட்டும் தன்னிடம் உள்ள பாலையெல்லாம் ஒரு புதரிலே சொரிந்து விட்டு வந்திருக்கிறது. இதை மாடு மேய்க்கும் சிறுவன் பார்த்து அரசனிடம் சொல்லி யிருக்கிறான். அரசனும் உண்மையறியக் காட்டுக்குச் சென்று ஒரு மரத்தில் ஏறி இருந்து பார்த்திருக்கிறான். அன்றும் அந்தப் பசு தன் மடியில் உள்ள பாலையெல்லாம் அந்தப் புதரிலேயே சொரிவதைக் கண்டிருக்கிறான். அரசன் அந்தப் புதரை வெட்டியிருக்கிறான். அந்தப் புதருக்குள்ளே சுயம்பு லிங்கராக இறைவன் இருப்பதைக் கண்டிருக்கிறான். உடனே அவரையே அங்கு கைலாசநாதராகப் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டி யிருக்கிறான். இது நடந்தது கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். இந்தக் கதையை மெய்ப்பித்துக் கொண்டிருப்பவை, இந்தத் தலத்துக்குப் பக்கத்தில் உள்ள மாட்டையாம்பட்டி, இளங்கன்றுச்சாலை என்னும் சிற்றூர்கள். இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று. ஹொய்சல மன்னனான ராமநாத ராஜா 1286ல் இக்கோயில் கட்டி முடித்தான் என்று கூறும். இன்றைக்கு இருக்கும் கோயில், கோபுரம், சிற்ப வடிவங்கள் நிறைந்த தூண்களெல்லாம் பதினாறும் நூற்றாண்டிலே கெட்டி முதலியார் வகையறா கட்டினார்கள் என்பதும் வரலாறு. அந்தப் பிரபலமான தல்லிக்கோட்டைச் சண்டைக்குப் பின் விஜயநகர சாம்ராஜ்யம் உலைந்திருக்கிறது. அதன்பின் இந்த வட்டாரத் தலைவனாக இருந்தவன் கெட்டி முதலி என்பவன். இக்கோயில் கட்டும் பணியில் இவனுக்கு உற்ற துணையாக இருந்தவர்கள் எல்லமன், நல்லுடையப்பர் முதலியோர். இவர்கள் கோயிலுக்கு எட்டு கிராமங்களையே எழுதி வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் இப்போதே ஏன் சொல்கிறேன் என்றால், கோயிலுள் நுழைந்து அங்குள்ள சிற்பச் செல்வங்களைக் கண்டு களிக்க ஆரம்பித்துவிட்டால், மற்றைய விஷயங்களிலெல்லாம் மனம் செல்லாது. அதற்காகவே கோயில் ஏற்பட்ட வரலாற்றை முதலிலேயே சொல்லிவிட முனைகிறேன்.



ஊர்த்துவ தாண்டவர்

இனி இவ்வூருக்குத் தாரமங்கலம் என்று ஏன் பெயர் வந்தது என்று கேட்பீர்கள். 'தண்டகாரண்யம் என்றீரே, இதை அடுத்துத் தான் கிஷ்கிந்தை இருந்ததோ? அந்தக் கிஷ்கிந்தை மன்னன் வாலியின் மனைவி தாரையின் பெயரால் ஏற்பட்ட ஊரோ?' என்றுதானே சந்தேகிக்கிறீர்கள். அப்படியெல்லாம், வானர வீரன் வாலியின் மனைவி தாரைக்கும் இந்த ஊருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. தாரகணங்களான நக்ஷத்திரங்கள் எல்லாம் வழிபட்ட தலம் ஆனதால் தாரமங்கலம் என்பர். இதுகூடச் சரியான வரலாறு அல்ல. கயிலையில் வாழ்ந்தாலும், இந்தப் பரமசிவனுக்கு உகந்த இடமாகத் தமிழ்நாடுதான் இருந்திருக்கிறது. அவர் தம் திருமணத்தை இந்தத் தமிழ் நாட்டிலே நடத்திக் கொள்ளத்தான் ஆசைப்பட்டிருக்கிறார். அப்படி இறைவன் விரும்பிய திருமணத்தை நடத்திக் கொடுத்தவர் மகா விஷ்ணு. தன் தங்கையாகிய பார்வதியை முறைப்படி கயிலாயநாதருக்குத் தாரை வார்த்துக் கொடுத்துத் திருமணம் முடித்து வைத்த தலம் ஆனதால் தாரைமங்கலம் என்று பெயர் பெற்றிருக்கிறது. தாரைமங்கலமே தாரமங்கலம் என்று குறுகி யிருக்கிறது பின்னே. இனி கோயிலுள் செல்லலாம். மேற்கு நோக்கிய கோயில் வாயிலை ஐந்து நிலைக் கோபுரம் ஒன்று அழகு செய்கிறது. தமிழ் நாட்டில் மதுரை போன்ற நகரங்களில் உள்ள கோபுரத்தின் காம்பீர்யத்தை இங்கே காண முடியாது. ஏதோ சட்டிபோல் அடியில் பெருத்து மேலே அளவுக்கு அதிகமாகக் குவிந்தே காணப்படும். கோபுரத்தை விடக் கோபுர வாயிலை அடைத்து நிற்கும் மரக் கதவு அழகானது. அந்தக் கதவில் 129 இரும்புக் குமிழ்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம் என்றால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். கோபுரத்தை வெளியிலிருந்து பார்ப்பதைவிடக் கோயிலுள் நுழைந்து மேற்கே திரும்பிப் பார்த்தால் நன்றாயிருக்கும். கோபுரம் ஒரு தேர் போலவும் அதை இரண்டு பக்கத்திலும் இரண்டு யானைகள் இழுத்துப்

போவது போலவும் அமைத்திருக்கிறார்கள். கோயில் மதில் நீண்டு உயர்ந்தது. கோயிலின் வடமேற்கு மூலையில் சகஸ்ரலிங்கம் இருக்கிறது. இங்கேயே தல விநாயகரும் அவிநாசி அப்பரும் வேறே கோயில் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இந்த வெளிப் பிராகாரத்திலேயே மூன்று விநாயகர் சந்நிதிகள். இவர்களைப் பிரதிஷ்டை செய்தவர்கள், கெட்டி முதலி, மூடிகெட்டி முதலி, மும்முடிக் கெட்டி முதலி என்பர். எல்லோரும் ஒரு குடும்பத்தினரே என்றாலும் எல்லோருக்கும் விநாயகரிடத்தில் நிரம்பிய ஈடுபாடு இருந்திருக்கிறது. ஆகவே தனித் தனியாக விநாயகரைப் பிரதிஷ்டை செய்து மகிழ்ந்திருக்கிறார்கள். உட்கோயிலின் வாயிலில் வேட்டையாடும் குதிரை வீரர்கள். இவர்கள் நடத்தும் போர்கள், இவையெல்லாம் வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் கல்யாண மண்டபத்தின் முகப்புச் சிற்பங்களை நினைவூட்டும். எல்லாம் நிரம்பத் தத்ரூபமானவை; அழகானவை. இவற்றையெல்லாம் கண்ட பின்னரே உட்கோயிலில் நுழைய வேணும். கோயில் வாயிலில் வழக்கம்போல் மேலே பச்சை வண்ணனான விஷ்ணு தன் தங்கை பச்சை நாயகியைக் கைலாயநாதருக்கு மணம் முடித்துக் கொடுக்கும் காட்சி. மங்கையைக் கைப்பிடித்த மணவாளன் கயிலாயநாதன் கோயில் கொண்டிருக்கும் தலம் ஆனதால் மங்கை நகரம் என்றும் அழைக்கப்படுகிறது. கோயில் உள்ளே சென்றால் சிற்ப வேலைகள் நிறைந்த தூண்கள்தான் எங்கு பார்த்தாலும்; விதானம் எல்லாம் தாமரைகள், அந்த மலர் இதழ்களைக் கொத்திக் கொண்டு இருக்கும் கிளிகள்தாம். எல்லாம் கல்லிலே உருப் பெற்றிருக்கின்றன. கற் சங்கிலிகள், சிங்கங்களின் வாயில் கல் உருளைகள் இன்னும் அஷ்டதிக்குப் பாலகர்கள் என்றெல்லாம் எண்ணற்ற சிற்பச் செல்வங்கள்.

கோயிலுள் கயிலாயநாதர் மேற்கு நோக்கிக் கருவறையில் இருக்கிறார். ஒவ்வொரு வருஷமும் மாசி மாதம் 9, 10, 11 தேதிகளில் மாலை ஆறு மணி அளவில் சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் சூரிய ஒளி வாயில்களைக் கடந்து, சந்நிதியில் உள்ள நந்தியின் கொம்புகளின் இடைவழியாகச் சென்று இறைவனது லிங்கத் திருவுருவில் விழுகிறது. இதை நாம் மற்றும் பல தலங்களிலும் பார்த்திருக்கிறோம் என்றாலும் நந்தியம் பெருமானின் கொம்புகளின் இடைவழியாய் ஒளி வருவது இத்தலத்தில் மட்டுந்தான். இந்த இறைவனை வணங்கிய பின் பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றலாம். அங்குதானே தாரமங்கலத்துப் புகழ்பெற்ற சிற்ப வடிவங்கள் இருக்கின்றன? அதற்கும் முந்தி அம்பிகையாம் சிவகாமி அம்மையையும் தரிசித்துவிடலாமே. அவளது கோயில் சுவாமி சந்நிதிக்கு வடக்கே கிழக்கு நோக்கி இருக்கிறது. நல்ல அழகொழுகும் வடிவம். அந்தச் சந்நிதிக்கும் தெற்கேதான் ஆறுமுகனும் தனித்தொரு கோயிலில் இருக்கிறான். இவர்களையும் வலம் வந்து பின்னர், வடக்குப் பிராகாரத்துக்கு வரலாம். அங்குதான் இறைவன் பிக்ஷாடனக் கோலத்தில் வருவதையும், அவருக்குப் பிச்சையிட வந்த ரிஷிபத்தினிகள் எல்லாம் கலை இழந்து நிற்பதையும் காணலாம். இவர்களில் ஒருத்தி,

சொல்நலம் கடந்த காமச்சுவையை
ஓர் உருவமாக்கி
இன்நலம் தெரிய வல்லார்
எழுதியது என்ன நின்றாள் —
பொன்னையும் பொருவு நீராள்
புனைந்தன எல்லாம் போக
தன்னையும் தாங்க லாதாள்
துகில் ஒன்றும் தாங்கிநின்றாள்.

என்று கம்பன் வர்ணிக்கும் மிதிலை நகர்ப் பெண்போலவே நிற்கிறாள். நழுவும்சேலையைப் பிடித்துக் கொண்டு அவள் வரும் அழகையே வடித்திருக்கிறார்கள் சிற்பக் கல்லில். இன்னும் இந்த வடக்குப் பிராகாரத்திலேதான் காஞ்சி காமாட்சியும் ரிஷபவாகன ரூடரான கயிலாயநாதரும் காட்சி கொடுப்பர். மகாவிஷ்ணு எடுத்த மோகினி அவதாரம், நடராஜர் ஆடிய ஊர்த்துவ தாண்டவம், பதஞ்சலி வியாக்கிரபாதர், பிருங்கி ரிஷியுடன் கூடிய அர்த்தநாரி எல்லாம் நிற்பர். தெற்குப் பிராகாரத்தில்தான் இத்தலத்துக்குச் சிறப்பான ரதி, மன்மதன் சிலைகளும் மற்றச் சிலைகளும் இருக்கின்றன. ஆரம்பத்திலேயே சொன்ன வாலி வதக் காட்சி, ராமர் மறைந்திருந்து அம்பெய்தல் எல்லாம் சந்நிதி எதிரேயுள்ள தூண்களில் இருக்கின்றன.

இக்கோயிலில் பெரும் பகுதியைக் கட்டி இங்குள்ள சிற்ப வடிவங்களையெல்லாம் அமைத்தவர் கெட்டி முதலியாரே. அவர் சிறந்த சைவர். சொன்ன சொல் தவறாதவர். அவரைப்பற்றியும் ஒரு பாடல் வழங்குகிறது.

செங்கதிர் பன்னிரண்டு, ஈசர்
பதினொன்று, திக்கும் பத்து,
கங்கையும் ஒன்பது, வெற்புஎட்டு,
எழுகடல், கார்த்திகை ஆறு,
ஐங்கணை, நான்மறை, முச்சுடர்,
சாதியவை இரண்டே என்னும்
மங்கை வரோதயன் கெட்டி
முதலியார் வார்த்தை ஒன்றே.

கெட்டி முதலியின் பெருமையை விளக்க எழுந்த பாட்டிலே, நாட்டிலுள்ள பொருள்களைப் பன்னிரண்டிலிருந்து படிப்படியாய்க் குறைத்துக் கணக்கிட்டு விடுகிறார் கவிஞர்.

மனத்தகத்தான், தலைமேலான்
வாக்கின் உள்ளான், வாயால்
தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான், இமையவர் தம்
சிரத்தின் மேலான், ஏழண்டத்து
அப்பாலான், இப்பால் செம்பொன்
புனத்தகத்தான், நறுங் கொன்றைப்
போதில் உள்ளான், பொருப்பிடையான்
நெருப்பிடையான், காற்றில் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து
உச்சி உள்ளான் காளத்தியான்
அவன் என்கண் உள்ளானே

என்று அப்பர் பெருமான் பாடியதுபோல இவ்வூர்க் கயிலாயநாதனும் எல்லோருடைய கண்களிலும் நிறைந்து நிற்பான்.


என்னால் எதுவுமே செய்யமுடியவில்லை. வகுப்புநேரங்களில்கூட அடிக்கடி கோபம் வந்துகொண்டிருந்தது.
அனந்த் அதைக் கவனித்துவிட்டுச் சொன்னான். தினமும் இரண்டு வேளை போர்ன்-விடா அருந்தினால், பழைய நிலை வந்துவிடும் என்று.
அவனுடைய டாக்டரும் அதையேதான் சொன்னாராம். நானும் அதைக் கடைப்பிடித்தேன். விரைவில் குணமடைந்தேன்.
இப்பொழுது பழைய சக்தி வந்தது மட்டுமல்ல-ஐம்பது பேர்கொண்ட வகுப்பையும் எளிதாக சமாளிக்க முடிகிறது.
எல்லாம் போர்ன்-விடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் என் வேலையைச் செய்வதற்கு சக்தியளித்தது
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்

நல்ல நாடகம்!

கோமதி சுவாமிநாதன்

"இந்த மாசமாவது கொஞ்சம் பார்த்து....'' என்று நீட்டினார் மளிகைக் கடை அப்துல் காதர்.

கையிலிருந்த கரன்ஸி நோட்டுக்களை எண்ணுவதில் ஈடுபட்டிருந்த சுதர்சனம் ஒரு கணம் எண்ணுவதை நிறுத்தி விட்டுத் தலைநிமிர்ந்து அப்துல் காதர் முகத்தை உற்றுப் பார்த்தார். பார்வையினூடே புகை படருவது போன்ற உணர்ச்சி. நிதானமாகவே பேசினார்:

''இந்தாப்பா காதர்! என்னவோ எப்படியோ என் யோக்கியதையிலே ஒரு மாத்து கம்மியாகத்தான் போய் விட்டது. நீ என்னத்தையாவது சொல்லி அயோக்கியத் தனத்தின் எல்லைக்கே என்னை விரட்டிவிடாதே! கம்மியாய்ப்போன அந்த ஒரு மாத்தையும் மீட்டுக்கொள்ள நான் என்ன பாடு படுகிறேன் என்று ஆண்டவனுக்குத் தெரியும். ஏன்! உனக்கும்தான் தெரியும். இந்தா! இந்த நூற்றுப் பத்தையும் வரவு வைத்துக்கொள்: வழக்கம்போல் மூன்றும் மாதத்துக்கான பணம்தான்.''

பதினொரு பத்து ரூபாய் நோட்டுக்களை மீண்டும் எண்ணி முன்னால் கிடந்த 'பாக்கெட் சைஸ்' வரவு செலவு நோட்டுக்குள் வைத்துக் கொடுத்தார். நவம்பர் மாதத்துக்கான மளிகைச் சாமான்கள் வாங்கிய வகைக்கு ஜனவரி மாதம் இரண்டாம் தேதி கைமாறும் பணம் அது.

சுதர்சனத்தின் குரலில் எந்தவித சலனமுமில்லை. ஆனால் வார்த்தைகள் என்னவோ ஒவ்வொன்றும் சோகத்தில் முக்கி எடுத்ததாக வெளிவந்தது.

அப்துல் காதர் முதலில் பதில் சொல்லவில்லை. பக்கங்களைப் பின்புறமாகத் திருப்பி ரூபாயை வரவு வைத்துக் கொண்டார். ''கொஞ்சம் சிரமம்! புதுவீடு ஏகமாகச் சாப்பிட்டு விட்டது!...'' என்று பட்டதும் படாததுமாகப் பின்னர் அவர் பதில் சொன்னார்.



இருவருமே சம வயதினர்தான். வெகு நாளையப் பழக்கமும் கூட. சுதர்சனத்தின் நாணயத்தில் அபார நம்பிக்கை உள்ளவர் அப்துல் காதர். அதன் காரணமாகத்தான் ஆறு மாதங்களுக்கு முன் ஒருநாள் முதல் தேதி சுதர்சனம் மாதாந்திரப் பாக்கியைக் கொண்டு வந்து கொடுக்காத போது அதைப் பொருட்படுத்தவில்லை. அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து பணம் ஒழுங்காக வந்து கொண்டிருந்தது. ஆனால் ஒரு மாதப் பணம் நிரந்தர இடைவெளிப் பணமாகவே இருந்து வந்தது.

கணக்கு நோட்டை வாங்கிப் பையில் வைத்துக் கொண்ட சுதர்சனம் வீட்டை நோக்கிக் கிளம்பினார். அவர் எந்த நினைவூட்டல் அப்துல் காதரிடமிருந்து வரக்கூடாது என்று நினைத்தாரோ, அந்த நினைவூட்டல் இன்று வந்துவிட்டது. உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த பதிலைச் சொல்லி விட்டோம் என்ற வகையில் ஒரு திருப்தி. இந்த மாதத்திலேயே தீர்த்துவிட முடிந்தால் என்ற ஆவல்! ஆனால் எங்கிருந்து பணம் வரும் என்ற ஏக்கம் எழுந்தது. அவர் முன் நோக்கி நடந்தார். சிந்தனை என்னவோ பின்னோக்கி நகர்ந்தது.

சமீபத்தில் ஆறுமாதங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிதான். வெகு நாட்களாக அவர் கண்களுக்குத் தென்படாத உறவுக்காரப் பையன் ஒருவன் தடபுடலாகப் பம்பாயிலிருந்து வருவதாகச் சொல்லிக் கொண்டு வந்தான். சுதர்சனத்திடம் குழைந்து குழைந்து பேசினான். ''மாமா! உங்கள் நாடகம் பம்பாயிலே அமர்க்களப்பட்டது. மாமா! நான்கூட அதில் அசோக் வேஷம் போட்டுக் கொண்டேன்! நல்லபேரு!'' என்று சொன்னான். சுதர்சனம் நிஜமாகவே பெருமைப் பட்டுக் கொண்டார்.

இடையே ஒரு சம்பள தினம் வந்தது. காரியாலயத்திலிருந்து வாங்கிவந்த இருநூற்றுச் சில்லறையையும் அலமாரியில் வைத்தார். சம்பளம் வாங்கிய தினத்திலேயே அதைத் தீர்த்துக் கட்டிப் பட்டுவாடா செய்வது என்ற கொள்கையை அவர் கடைப்பிடிப்பதில்லை. காற்றுப் பறக்கும் அந்த ரூபாய்கள் ஒரு மாத உழைப்புக்காக ஒரு நாளாவது தன்னுடன் உறவு கொண்டாடி விட்டுப் போகட்டுமே என்ற நல்ல நினைப்புத்தான் காரணம்.

மறு நாள் காலையில் திண்ணையில் படுத்திருந்த பம்பாய்ப் பிள்ளையாண்டானைக் காணவில்லை. படுக்கை மாத்திரம் சுருட்டிப் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. சற்று நேரம் கழித்துத்தான் பையன் மாத்திரம் அந்தர்தானமாகவில்லை, கூடவே முதல் நாள் இரவு அலமாரியில் வைத்த பணத்தில் கணிசமான பகுதியும் மறைந்து விட்டது என்று தெரிந்து கொண்டார். பையன் அலமாரியில் கைவைத்த

அவசரத்தில் செருகித் தள்ளிப் போய்த் துணிகளுக்கிடையே விழுந்தவற்றைக் கவனிக்கவில்லை. அந்த ரூபாய்கள்தான் சுதர்சனத்தின் அந்த மாதச் சில்லறைச் செலவுக்கு உதவின. அப்துல் காதர் கடைபாக்கி அப்படியே நின்று விட்டது.

சுதர்சனம் போலீசுக்கெல்லாம் புகார் செய்யவில்லை. பம்பாயிலிருந்த நண்பர்களுக்கு எழுதி விசாரித்ததில் பையன் ஆறு மாதங்களுக்கு முன்பே வேலையிலிருந்து நீக்கப்பட்டு விட்டான் என்று தெரிய வந்தது. நல்லவேளை! அவன் கிராமத்திலுள்ள பெற்றோர்களைத் தேடிப் போனதாகவும் தெரியவில்லை. அவர்கள் அதிருஷ்டசாலிகள்!

'என்னவோ போனா ஜன்மக்கடன்' என்று சும்மா இருந்தார் சுதர்சனம். ஆனால் அப்துல் காதரால் அப்படி இருக்க முடியுமா?

★

சிந்தித்தவாறே வீட்டுக்குள் நுழைந்த சுதர்சனம் அலுப்புடன் சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். முன்னிரவின் குளிர்ந்த காற்று அவருக்கு என்னவோ அன்று இதமாக இல்லை.

"கடைக்காரர் பாக்கி கேட்டாரோ?" என்ற கேள்வியுடனேயே அவரை அணுகினாள் அவர் மனைவி லட்சுமி. "இல்லை! இல்லை!" என்ற அவருடைய பதிலில் ஏன் அத்தனை படபடப்பு கலந்திருந்தது என்று அவளுக்குப் புரியவில்லை. அனாவசியமாகத் தொணதொணக்கும் ரகத்தைச் சேர்ந்தவளில்லை லட்சுமி. சுதர்சனம் இப்படி அடிக்கடி தன்னை மறந்த நிலையில் உட்கார்ந்திருப்பது அவளுக்குச் சகஜமானதுதான். பதில் பேசாமல் உள்ளே போனாள். அவர் ஒரு நாடக ஆசிரியரல்லவா?

மாடியிலிருந்து ரேடியோ இசை கிடுசென்று ஒலிப்பியது. ஆனால் பாட்டு சங்கீத ரசனைக்கு அவரை இழுத்துச் செல்லவில்லை. அதற்குப் பதிலாக மாதாந்திர வாடகை பற்றிய சிந்தனையில் இழுத்துச் சென்றது. மாடியில் வசிக்கும் வீட்டுச் சொந்தக்காரருக்கு மறுநாட் காலையில் கண்டிப்பாக வாடகைப் பணம் வைத்தாக வேண்டுமே! முதல் தடவையாக இந்த வாடகை விஷயத்திலுமல்லவா இந்த மாதம் சோதனை ஏற்பட்டு விட்டது!

மூன்று மாதங்களில் திருப்பிக் கொடுப்பதாகக் காரியாலயத்தில் வாங்கியிருந்த விசேஷக் கடன் தொகையான அறுபது ரூபாயை, என்னவோ புதுச் சட்டத்தைக் கிளப்பிக்கொண்டு வந்து முன்னறிவிப்பில்லாமல் மொத்தமாக அன்றையச் சம்பளத்தில் பிடித்து விட்டார்கள். அந்தப் பற்றாக்குறையில், எஞ்சிய ரூபாய்க்கும் ஏதாவது செலவு வந்துவிடக் கூடாதே என்ற அச்சத்தில் முதல் தேதி செலவழிக்காத கொள்கையைக் காற்றில் விட்டு விட்டு அப்துல் காதர் கடைக்கு ஓடினார். இரண்டாவது மாதமும் துண்டு விழுந்தால் அந்த மளிகைக் கடை இருக்கும் தெரு வழியாக எப்படி நடப்பது? அவர் [illegible]?

★

வாசலில் வந்து நின்ற மோட்டார் சத்தம் அவர் சிந்தனையைக் கலைத்தது. திரும்பிப் பார்த்தார் உட்கார்ந்தவாறே. டாக்ஸி மாதிரிதான் தோன்றியது. மாடிக்காரரைப் பார்க்க யாரும் அடிக்கடி டாக்ஸியில் வருவதுண்டு. மீண்டும் தம் பழைய பண வேட்டைச் சிந்தனைக்குத் திரும்ப நினைத்தார்.

'டாக்ஸி மீட்டர்' மணி அடிக்காததிலிருந்து அது காத்திருக்கப் போகிறது என்று ஊகித்தார். ரேழி வரையில் வந்த ஒரு நபர், கூடத்தைப் பார்த்து விட்டு 'ஐயா இருக்காருங்க' என்று காரில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்துக் குரல் கொடுத்தான். கதவு திறக்கும் சத்தத்தைத் தொடர்ந்து, கனத்த மனிதர் ஒருவர் இறங்கி வந்தார். "வணக்கமுங்க!" என்ற குரலும் எழுந்தது.

அப்போதுதான் சுதர்சனமும் நிமிர்ந்து உட்கார்ந்து திரும்பிப் பார்த்தார். "வணக்கம், வாங்க!" என்று சொல்லி எதிர்த்தாற்போலிருந்த நாற்காலியைக் காட்டி விட்டு வந்திருப்பவர் யாராக இருக்கக் கூடும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

ஆசாமி நல்ல உயரம். உயரத்துக்கேற்ற கனம். ஜரிகை வேட்டி. பஞ்சகச்ச பாணியிலே! சில்க் ஜிப்பா, அங்கவஸ்திரம், பெரிய மீசை. ரோல்டு கோல்டு பிரேம் கண்ணாடி. குங்குமப் பொட்டு. இழைய வாரப்பட்ட தலை. பெரிய மனிதக் களை அப்படியே சொட்டிக் கொண்டிருந்தது.

புன்சிரிப்புத் தவழ அந்த நாற்காலியில் உட்கார்ந்தார் வந்தவர். இடது கையில் இருந்த பத்திரிகை ஒன்று, வீசிக் கொண்டிருந்த காற்றை மதிக்காது அவ்வப்போது விசிறியாக வேலை செய்தது. வலது கை மீசையைச் சரி செய்து கொள்வதில் ஈடுபட்டிருந்தது.

சுதர்சனத்துக்கு ஊகம் உதவி செய்யவில்லை. பேச்சைத் தொடங்கலாமே என்ற எண்ணத்தில் "என்ன விசேஷம்?" என்று பொதுப்படையாக ஆரம்பித்தார்.

"அதிசயம் புரொடக்ஷன்ஸ்னு கேள்விப்பட்டிருப்பீங்களே! 'ஆசை இங்கே அன்பு அங்கே' என்ற எங்கள் படத்தைப் பார்த்திருப்பீர்களே!"

"ஆமாம்! ஆமாம்!" சுதர்சனம் அந்தப் பெயரைக் கேள்விப்பட்டதே யில்லை. வருத்தத்துக்கு ஒரு லிமிடப் பார்ப்பவர் அவர்.

"நான்தான் அதிசயம் புரொடக்ஷன்ஸ் நிர்வாகி. புதுப் படத்துக்கான கதை விஷயமாக உங்களைப் பார்த்துப் போக வந்தேன்."

"சார்! மன்னிக்கணும்! நான் மாசச் சம்பளத்துக்கு ஓர் இடத்தில் வேலை பார்ப்பவன். ஆத்ம திருப்திக்கு நாடகம் எழுதுகிறேன். எனக்கும் உங்கள் துறைக்கும் பொருத்தம் என்று நினைக்கவில்லை."

வந்தவர் சில விநாடிகள் விசிறிக் கொண்டார்; சில விநாடிகள் மீசையை முறுக்கிக் கொண்டார்.

"சார்!...நீங்க 'பண்பும் பரிவும்' என்ற புது நாடகம் எழுதியிருக்கிறீர்களாமே?"

"ஆமாம்! அது எப்படி உங்களுக்குத் தெரியும்? அது இன்னும் மேடையில் அரங்கேற்றப்படவில்லையே!"

"எனக்கு எட்டாத செய்தியும் உண்டா, சார்! எனக்கு அந்த நாடகக் கதை கூடத் தெரியும். அதற்காகத்தான் இப்போது உங்

விடம் வந்தேன்! ஒரு தொகை சொல்லுங்க. உங்களுக்கு நடப்பு விவகாரம் தெரியும். நீங்க கதையைக் கொடுங்க. நான் பணத்தைக் கொடுக்கிறேன்."

"யோசிக்கணும் சார்!" சுதர்சனம் தலையைச் சொறிந்து கொண்டார். அடுக்களை ஜன்னல் வழியாக அவரையே பார்த்துக் கொண்டிருந்த அவர் மனைவியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. இந்த மனிதர் சட்டென்று ஒரு தொகையைச் சொல்லித் தீர்க்க அபூர்வமான வாய்ப்பைக் கண்டு ஏன் யோசிக்கிறார், என்ற எரிச்சல் அவளுக்கு.

"யோசிப்பதற்கு என்ன சார் இருக்கிறது? உங்கள் கதையை நாங்கள் கொஞ்சம்கூட மாற்றப் போவதில்லை. உங்கள் நாடக வசனத்தை அப்படியே உபயோகிக்கப் போகிறோம். திரைக்கேற்ப சில இடங்களில், நீங்கள் இங்கிருந்தவாறே மாற்றிக் கொடுத்தால் போதும். மேலும் நாங்கள் உங்கள் பெயரை நல்ல முறையிலேயே விளம்பரம் செய்வோம். கதாசிரியர் தான் திரைப்படத்தின் வெற்றிக்கு ஒரு வித்து என்ற கொள்கையுடையவர்கள் நாங்கள். கதையை எடுங்கள் சார்!"

சுதர்சனம் அசையவில்லை. ஆனால் லட்சுமி முகத்தில்தான் எத்தனை உணர்ச்சி மாற்றங்கள்! அவள் அப்போதே இன்பக் கனவுகள் காண ஆரம்பித்து விட்டாள். அவள் உடலைச் சுற்றிக் கொண்டிருந்த கோடம்பாக்கம் நூல் புடவை அப்போதே ஆரணிப் பட்டு ஜரிகைப் புடவையாக மாறி விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கணவனைப் பார்த்து ஏதோ சைகையும் முகத்தையும் ஆட்டினாள். ஆனால் சுதர்சனம் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

"என்ன சார்! ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளத் தயங்குகிறீர்களே? பணத்தைப் பற்றி யோசிக்கிறீர்களா? நீங்கள் சொல்லும் தொகையை நாங்கள் அப்படியே ஒப்புக்கொண்டு விடுவோம்! சொல்லுங்கள்."

"அதற்கில்லை சார்! நீங்கள் எதற்கும் நாளைக் காலையில் வாருங்களேன். முடிவாகச் சொல்கிறேன்" என்றார்.

வந்தவர் எழுந்திருக்குமுன்பே சுதர்சனம் எழுந்து நின்றார். பேச்சு முடிந்து விட்டது என்று அறிகுறி.

"சரி! காலையில் வருகிறேன். ஐயாயிரத்துக்கு செக்குடன் வருகிறேன். ஒன்பது மணிக்கு வீட்டில் இருப்பீர். என்னவா.....? ரூபாயைக் கொடுத்துவிட்டே உங்கள் கதையை வாங்கிக் கொள்கிறேன். வணக்கம் சார்!"


பத்திரிகையால் விசிறிக்கொண்டே வந்தவர் வாசலை நோக்கி இறங்கிவிட்டார். காரும் புறப்பட்டு விட்டது. மரியாதைக்குக் கூட சுதர்சனம் வாசல் வரை போகவில்லை.

"வலிய வந்த பணத்தை விரட்டிவிட்டீர்களாக்கும்? நாளைக்குக் காலையில் உங்களை மறுபடியும் தேடிக்கொண்டு வர அவனுக்குப் பைத்தியமா என்ன? தரித்திரத்திலேயே உழலணும் என்று நம் தலையில் எழுதியிருக்கிறது. ஒரு நாடகம் எழுதிக் கொடுத்து விட்டுக் கைக்காசையும் நாசம் செய்து 'ரிஹர்சல்' பார்க்கப் போகணும் என்று உங்கள் தலையில் எழுதியிருக்கும்போது நல்ல வாய்ப்பு உங்களை எப்படி அணுகும்?"

லட்சுமியின் வார்த்தை ஒவ்வொன்றும் ஜுவாலை ஒளிவிட உதிர்த்தது. பாவம்! இது வரை ஒருநாள் கூட அவள் கணவனிடம் அப்படிப் பேசியதில்லை. இன்று பணத் தேவை, குடும்பச் சூழ்நிலை அப்படிப் பேசச் செய்தன.

சுதர்சனம் அவளை உற்றுப் பார்த்தார். "லட்சுமி! இலையைப் போடு! கவலைப்பட நமக்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இதையும்சேர்த்துக் கொள்ள வேண்டாம்." சுதர்சனம் முற்றத்திலிருந்த தண்ணீர் அண்டாவை நோக்கி நடந்தார்.

அன்றிரவெல்லாம் லட்சுமி கனவுக்கு மேல் கனவாகக் கண்டு கொண்டிருந்தாள். எல்லாம்



இன்பக் கனவுகள். மறுநாள் அந்தப் புரொட்யூசர் பத்தாயிரம் ரூபாயாகக் கொண்டு வந்து கொடுத்து விட்டான் என்ற அடிப்படைக் கனவில் எழுந்த கற்பனைகள்! ஒரு காட்ரேஜ் பீரோ கூட அல்லவா அவள் கனவில் வந்தது!

சுதர்சனம் தூங்காமல் புரண்டு கொண்டிருந்தார் என்பது அவளுக்குத் தெரியாது. காரியாலயத்தில் அறுபது ரூபாய் பிடிபட்டது பற்றியோ, மறுநாள் வாடகைக்கு என்ன வழி பண்ணுவது என்பது பற்றியோ அவர் அவளிடம் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் அவளே கதை நோட்டை எடுத்து அந்தப் புரொட்யூசர் முன்னால் வைத்திருப்பாளோ என்னவோ?

★

மறுநாட் காலையில் அதிசயம் புரொடக்ஷன் நிர்வாகியும் வரவில்லை. ஆனந்தா பிக்சர்ஸ் முதலாளியும் வரவில்லை. ஏமாந்து போன லட்சுமியின் சமையலில்தான் இரண்டு உப்பு அதிகம் வந்திருந்தது. சுதர்சனம் இரண்டையுமே பொருட்படுத்தாமல் காரியாலயம் போய்ச் சேர்ந்தார்.

நல்ல வேளை! நண்பர்களிடையே கொஞ்சம் கைமாறு புரண்டது. மாலையில் வீடு திரும்பியதும் வாடகைப் பணத்தைக் கொடுத்து விட்டார். மனத்திலே ஒரு தெம்பு ஏற்பட்டது. அமைதியாகச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார். நேற்று இதே நேரத்தில்தான் அந்த மகானுபாவன் வந்திருந்தான்!

இன்று அந்த நேரத்தில் வாசலில் மோட்டார் ஒன்றும் வந்து நிற்கவில்லை. அமெச்சூர் குழுவில் பங்கெடுத்துக் கொள்ளும் அவருடைய நடிக நண்பன் பஞ்சுதான் சைக்கிளில் வந்து இறங்கி, சைக்கிளை வாசலில் சாய்த்து விட்டு "அண்ணா! நமஸ்காரம்!" என்றான்.

"உட்காரப்பா!" என்று நாற்காலியைக் காண்பித்தார் சுதர்சனம். ஆனால் அவன் உட்காருவதற்கு முன்பே, "என்ன மிஸ்டர் பஞ்சாபகேசன்! நேற்று மொத்தம் என்ன செலவாயிற்று?" என்றார் நிதானமாகவே.

பஞ்சு என்ற பஞ்சாபகேசன் திடுக்கிட்டு நிமிர்ந்து திரும்பினான். உட்காரவில்லை.

"என்ன அண்ணா கேட்கிறீர்கள்? நேற்று என்ன செலவா? எனக்குப் புரியவில்லையே!" பஞ்சு சுதர்சனத்தை உற்றுப் பார்த்தான்.

"அதுதானப்பா! நேற்று புரொட்யூசர் வேஷம் போட மேக்-அப் செலவு டாக்ஸி வாடகை எல்லாம் சேர்த்து என்ன செலவாயிற்று என்று கேட்டேன்!..."

பஞ்சு ஒரு கணம் திகைத்தாற்போல் நின்றான். "அண்ணா!...கண்டுபிடித்து விட்டீர்களா?... எப்படி என் வேஷம்? எப்படி என் நடிப்பு?... இப்போதாவது சொல்லுங்கள்! உங்கள் அடுத்த நாடகத்தில் எனக்கு 'ஹீரோ' வேஷம் கொடுக்கும்படி சிபாரிசு செய்வீர்களல்லவா?"

பஞ்சு பெருமிதத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தான். இந்தப் பேச்சை மேலும் கேட்க விருப்பமில்லாமல் சலித்த முகத்துடன் அடுக்களை ஜன்னலிலிருந்து லட்சுமி முகத்தை உள்ளிழுத்துக் கொண்டாள். இவனா புரொட்யூசராக வந்தான்?

சுதர்சனம் நிதானமாக உதட்டைப் பிதுக்கினார். "பஞ்சு! உன் நேற்றைய நடிப்பும் வழக்கம்போல் சுமாராகத்தான் இருந்தது. ஆகையால் கதாநாயகன் பற்றிய என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வதற்கில்லை!"

"அண்ணா!...நிஜமாகவா?"...பஞ்சு அலறியே விட்டான். "பத்து ரூபாய்க்குமேலல்லவா முதல்நாள் கோட்டை விட்டிருக்கிறேன்?"

"ஆமாம் பஞ்சு!... நீ வந்து உட்கார்ந்த சில நிமிடங்களில் தெரிந்து கொண்டேன்; ஆனால் காண்பித்துக் கொள்ளவில்லை. எனக்குமே உனக்கு நாடக மேடையில் மீசை சரியாக ஒட்டியிராது என்ற பயம் உண்டு. நடிக்கும்போதே அடிக்கடி பிடித்து அழுத்திக் கொள்வாய். அதை நேற்று என்னுடன் பேசும் போதும் செய்தாய்!"

"அண்ணா! நீங்கள் எமகாதகர்!"

"அதை விட்டுத் தள்ளு!... சாதாரண விஷயம்! முக்கியமாக நீ நடிக்கத் தேர்ந்தெடுத்த பாத்திரத்தின் குண விசேஷத்தைப் புரிந்து கொள்ளாமலல்லவா நடித்தாய்! அந்தத் திறமை உனக்கு வரும்போது கதாநாயகன் பாத்திரமும் தன்னால் வரும். பொறுத்திரு, பஞ்சு!" என்றார் சுதர்சனம்.

"என்ன அண்ணா சொல்கிறீர்கள்?"

"பஞ்சு!...கதையைப் பார்க்காமல் எந்தப் புரொட்யூசராவது பணம் கொடுக்கிறேன் என்பாரா?... அப்படியே கதையைப் படித்தாலும் அதில் குறைந்த பட்சம் பத்துக் குறைகளைச் சொல்லி எழுதியவனின் தன்னம்பிக்கையைக் குறைக்காமலிருப்பாரா? எதிராளி பேசும்போது அவன் முகத்தைக் கவனித்து அவனுக்கு எங்கு தயக்கம் ஏற்படுகிறது என்று கவனித்து, அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பாரா? இல்லை, எந்த உத்தம புரொட்யூசராவது பணத்தைக் கொடுத்து விட்டுப் பிறகு கதையை வாங்கிக் கொண்டதாக நீ கேள்விப்பட்டதுண்டா? பஞ்சு! நீ ஒரு புரொட்யூசர் மாதிரி தோற்றம் அளித்திருக்கலாம். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்தப் பாத்திரத்தின் குணாதிசயங்களை நீ பிரதிபலிக்கவில்லையே! தோற்றமும் நடிப்பும் ஒன்றாகக் கலக்கும்போதுதான் அந்தப் பாத்திரம் பூரணத்துவம் அடைகிறது; உயிர் பெறுகிறது. பார்ப்பவர்களின் உள்ளத்தில் உண்மையின் சாயையைப் படர வைக்கிறது. உனக்கு ஏன் கதாநாயகன் பாத்திரம் கொடுக்க நான் தயங்குகிறேன் என்று தெரிகிறதா?"

பஞ்சு கொட்டாவி விட்டுக் கொண்டே எழுந்திருந்தான். அவன் நடிப்புத்தான் இங்கேயே தோல்வியடைந்து விட்டதே!

அன்றிரவு லட்சுமிக்குத் தூக்கமே வரவில்லை. முதல்நாள் முன்னிரவு நிகழ்ச்சி இப்படி வெறும் பகல் தூக்கமாகப் போய் விடும் என்று அவள் நினைக்கவேயில்லை! பத்தாயிரம் ரூபாய் 'செக்' அவள் மனத்திரையில் ஆடிக் கொண்டிருந்ததே!

சுதர்சனம் என்னவோ நிம்மதியாகத் தூங்கினார். வீட்டு வாடகையைக் கொடுத்து விட்டோம் என்ற திருப்தி! அவர் முகத்தில் சலனமே இல்லை.



உங்கள்
கேசத்திற்கும்
தலைக்கும்
ஆரோக்கியத்தையும்
பொலிவையும் அளியுங்கள்!
கால்கேட் ஹேர் டானிக் லெனோலின் என்ற ஒர் அற்புதமான எண்ணெயுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது தலையில் இயற்கையாக உண்டாகும் எண்ணெய்களை வற்றாது புதிப்பித்து... கேசத்தை ஆரோக்கியத்துடனும், செழிப்பாகவும் இருக்க உதவுகிறது.
COLGATE
HAIR TONIC
புதிய கால்கேட் ஹேர் டானிக்
லெனோலின் கலந்தது



'அனஸின்'
இப்பொழுது சுகாதார முறையில் ஸீலிட்ட புதுமாதிரியான ஸெல்லோபேன் பாக்கட்டுகளில் கிடைக்கிறது
4 மருந்துகள்
அடங்கியுள்ள
அனஸின் மிகச் சிறந்தது
ANACIN
Registered User : GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD.

லிப்டன்

லாவோஜி டீ



சிக்கனத்தின்
சின்னம்
சிறப்பின் சிகரம்

LIPTON (INDIA) LTD

சொர்க்கத்தின் நிழல்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் பத்தொன்பது

'சென்றொழியும் விநாடிகள் மட்டுமே நமக்குச் சொந்தமானவை. அடுத்துவரும் விநாடிகள் அத்தனையும் நமக்கு அன்னியமே. அவற்றில் ஆயிரம் மர்மங்கள் ஒளிந்திருக்கும். நடப்பவை நடந்தே தீரும். அவை பற்றிய தீர்க்கதரிசனம் என்பது வெறும் யூகங்களே. யூகங்கள் எப்போதும் மூளியாகத்தான் இருக்கும்; முழுமை பெறுவதில்லை. எதிர்காலத்தை எண்ணிப் பார்த்து நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம் தான்; ஆனால், எதிர்காலம் நம்மைவிட எச்சரிக்கையுடன் இருந்து தன் விதிப்படி இயங்கிவிடும் என்பதை மறக்கலாகாது. வாழ்க்கை என்னும் பனிமலையில் நாம் ஏறியுள்ள படிகள் ஒவ்வொன்றும் நமது அசந்தர்ப்பமான வெற்றிகள்; அந்த மலையிலிருந்து நாம் வழுக்கி விழுந்த படிகள் ஒவ்வொன்றும் நமது நிச்சயமான தோல்விகள். அதனால்தான் "வெற்றியைக் கண்டு மகிழாதே, தோல்வியைக் கண்டு வருந்தாதே" என்று நம் முன்னோர்கள் நம்மை எச்சரித்துச் சென்றிருக்கிறார்கள். இறந்த காலம் நம்முடைய சேமிப்பு; எதிர்காலம் விதியின் கையிருப்பு. அதிலே முத்திரை நாணயங்களும் உண்டு; செல்லாக் காசுகளே மிகுதி. நாம் வர்ணக் குருடர்கள். சமயா சமயங்களில் மட்டுமே நமக்குக் கண் தெரியும். அப்போது ஒருசில நாணயங்களைப் பொறுக்கியெடுப்போம் அதிலும் செல்லாக் காசுகள் கலந்திருக்கும். மற்றப்படி நாம் எப்போதும் எதிர்காலம் என்னும் இருளைத் துழாவிக் கொண்டிருக்க வேண்டியதுதான். அதை எண்ணிக் கவலைப்படவோ, கண்ணீர் சிந்தவோ நமக்கு உரிமை இல்லை.'

கன்னங்களில் வாய்க்காலெடுத்து வழிந்த கண்ணீர்த் தாரைகளைச் சட்டென்று துடைத்துக் கொண்டு நிமிர்ந்த கோமதி அந்த அறையைச் சுற்றி வளைத்துப் பார்த்தாள். பிறகு தன் எதிரே திறந்து கிடந்த ஒரு சிறிய பெட்டியை அருகில் இழுத்து அதனுள் அலங்கோலமாகத் திணித்து வைத்திருந்த துணிமணிகளை மேலும் கீழுமாகப் புரட்டித் துழாவி எதையோ அவசரம் அவசரமாகத் தேடினாள். ஒரு நூல் புடவையின் அடியில், காலஞ்சென்ற சிவகாமி அம்மாளின் புகைப் படம் இருப்பது தெரிந்தது. "சரி; இவ்வளவு போதும்" என்றவாறு எழுந்து நின்றாள்.

கலைந்திருந்த தலைக் கேசத்தைக் கோதி ஒதுக்கிவிட்டுக் கொண்டு பழைய மேஜையொன்றின் எதிரில் போய் அமர்ந்து, பழுப்பேறிக் கிடந்த ஒரு 'லெட்டர்-பேடை' இழுத்து வைத்துக் கொண்டு ஏதோ எழுதுவதற்காகப் பேனாவைத் தேடினாள். சிவப்புப் பென்சில்தான் கிடைத்தது. அந்தப் பென்சிலின் சிவப்பு முனையையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர்த்துளிகள் உருண்டு கடிதக் கத்தையின் மேல் விழுந்தன. "நான் போகும் இடம் எனக்கே தெரியாதபோது, கடிதம் எதற்கு? வேண்டாம்!" என்று முனகியவாறு பென்சிலைப் போட்டுவிட்டு எழுந்தவள் விரைந்து போய்த் தன் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினாள்.

வாசல்வரையில் சென்ற கோமதி சட்டென்று நின்று பின்னால் திரும்பிப் பார்த்தாள். அந்த அறைச் சுவரில் மாட்டப் பெற்றிருந்த சாரங்கனின் படமொன்றின்மீது அவளுடைய பார்வை சென்று பதிந்தது. அந்தப் படத்தையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்ற அவள், "அண்ணா! என்னை ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்? தயவுசெய்து உங்கள் அன்புக் கண்களைக் கொஞ்ச நேரமாவது மூடிக் கொண்டிருங்கள், அண்ணா! உங்களது தூய சகோதர பாசப் பிணைப்பிலிருந்து தூர விலகிச் செல்லும் இந்தத் துர்ப்பாக்கியப் பெண்ணைத் தடுத்து நிறுத்துவதுபோல் பார்க்கிறீர்கள். அண்ணா!" என்று விம்மிப் பொருமிக் கூறியவாறு போய், நடுங்கும் கைகளால் அந்தப் படத்தைச் சுவர்ப் பக்கம் திருப்பி மாட்டிவிட்டு, அறைக் கதவை வெறுமனே இழுத்துச் சாத்திக் கொண்டு, இருள் மண்டிக்கிடந்த மாடிப் படிகளில் மளமள வென்று இறங்கிச் சென்று விட்டாள்

தீ அணைந்தது. தெருவெல்லாம் ஒரே தண்ணீர் மயம். எரிந்து கருகிய

கீற்றுப் பந்தலின் சாம்பல் சேறாகக் குழம்பிக் கமறலெடுத்தது. நல்லவேளையாக அக்கம்பக்கத்திலுள்ள கட்டிடங்களுக்குத் தீ பரவவில்லை. சபா மண்டபமும் தப்பிவிட்டது. ஆனால், மேகப் பொதிகள் போல் சுழன்று எழும்பிய கரும் புகை மட்டும் இன்னமும் அந்த மண்டபத்தினுள் கப்பிக்கொண்டுதான் இருந்தது.

போலீஸாரின் கேள்விகளுக்கெல்லாம் திக்கித் திணறிப் பதில் சொல்லிவிட்டுச் சோர்வுடன் வந்து மதில் சுவரின் மேல் சாய்ந்து நின்றார் அந்தச் சங்கீத சபாவின் காரியதரிசி.

"என்ன சார், என்ன நடந்தது?" என்று கேட்டுக் கொண்டே அங்கு விரைந்து வந்தான் விவேகானந்தன்.

உலக வாழ்க்கையே கசந்துபோன மாதிரி தலைமேல் கை வைத்துக்கொண்டு நின்றிருந்த சபாக் காரியதரிசி அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், "அதெல்லாம் எனக்குத் தெரியாது. டிக்கெட் பணத்தை வாபஸ் பண்ண முடியாது. வேண்டுமானால் மிச்சம் மீதியுள்ள பந்தலைக் கொளுத்திவிட்டுப் போம்!" என்று ஜன்னி கண்டு உளறுவது போல் உரத்த குரலில் கூவினார். பாவம், கடந்த ஒன்றரை மணி நேரமாக அவர் இதே வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்ததால், யார் வந்து எது கேட்டாலும் இதைத் தவிர வேறெதும் சொல்லத் தோன்றாத நிலைக்கு ஆளாகி விட்டிருந்தார்.

"மிஸ்டர், நான் உங்கள் கச்சேரிக்கு டிக்கட் வாங்கியவனல்ல. இங்கே என்ன நடந்தது என்றுதான் கேட்கிறேன்" என்றான் விவேகானந்தன் தன்னை மீறிய படபடப்புடன்.

"என்ன ஐயா இது கேள்வி? இதோ, பந்தலெல்லாம் பஸ்மீகரமாகிநிற்கிறதே, உமக்குத் தெரியவில்லையா?" என்று சினத்துடன் சீறி விழுந்தவாறு திரும்பிய காரியதரிசி சட்டென்று ஒரு துள்ளுத் துள்ளி, "அடடே! நீங்களா சார்? வந்து......ஏதோ யோசனையில், அடையாளம் தெரியாமல், என்னமோ சொல்லி விட்டேன் சார்! எக்ஸ்கியூஸ்-மீ, சார்!" என்று வார்த்தைக்கு வார்த்தை 'சார்' போட்டு ஒரேயடியாகக் குழைந்தார். விவேகானந்தனை அவருக்கு அறிமுகமில்லாவிட்டாலும் அவன் யார் என்று தெரியாமல் இருக்க முடியுமா?

"பரவாயில்லை" என்று புன்முறுவல் பூத்த விவேகானந்தன், "நான் இந்தப் பக்கம் அசந்தர்ப்பமாக வந்தேன். இங்கே என்ன நடந்தது? ஏன் இந்தக் குழப்பம், கலாட்டா? பந்தலுக்குத் தீ வைத்தது யார்?" என்று கேட்டான் கண்களை இடுக்கிக்கொண்டு.

"கேளுங்கள் சார், அநியாயத்தை! அந்தப் படுபாவி மோகனசுந்தரத்தை நம்பி நாங்கள் அவன் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தோம். கச்சேரி செய்ய வராமல் எங்கோ கம்பி நீட்டி விட்டான். சாயந்திரம் நான்கு மணியிலிருந்து அவனைத் தேடாத இடம் பாக்கியில்லை. ஆறு மணிக்குக் கச்சேரி ஆரம்பமாக வேண்டியது; ஏழு மணியாகியும் ஆளே வரவில்லை. டிக்கட் வாங்கிய ஜனங்களின் பொறுமை கட்டு மீறிப் போய்விட்டது. கலாட்டா செய்ய ஆரம்பித்து விட்டார்கள்" என்று அழ மாட்டாக் குறையாகச் சொல்லி மூச்சு வாங்கினார் காரியதரிசி.

"ஓகோ! பழைய கதைதான்!" என்று அலட்சியமாக முணுமுணுத்த விவேகானந்தன். "அவன் இங்கே வந்து கச்சேரி செய்திருந்தாலும் இந்தக் கலாட்டா தான் நடந்திருக்கும்!" என்றான் வெறுப்புடன். மீண்டும் தொடர்ந்து, "அது சரி; இன்னும் அவன் இங்கு வரவில்லையா?" என்று கேட்டான் விவேகானந்தன்.

"ஐயோ! அவன் இப்போது இங்கே வராமலிருப்பதே நல்லது சார்! வந்தால் ஏதேனும் விபரீதம் நடந்துவிடும்."

"நடக்கட்டுமே! அவனுக்குப் புத்தி மதி கற்பிக்க வேண்டாமா?"

"வேண்டாம, சார்! அவனுக்கு ஏதாவது நேர்ந்தால் அது சங்கீதக் கலைக்கே நேர்ந்த மாபெரும் நஷ்டமாகி விடும் சார்! அவ்வளவு பெரிய நஷ்டத்துக்கு எங்கள் சங்கம் காரணமாகிவிடக் கூடாது சார்!"

"உங்களைப் போன்ற பித்துக்குளி ஆசாமிகள் இருப்பதால்தான் அவன்



இப்படியெல்லாம் ஒழுங்கீனமாக நடந்து கொள்கிறான்!'' என்று உள்ளடங்கிய கடுகடுப்புக் குரலில் சொன்னான் விவேகானந்தன்.

''ஆமாம், சார்! அன்றாடப் பத்திரிகைகளைப் படித்துவிட்டு நீங்களும் நானும் மேடையேறிப் பேசிவிடலாம்; ஆனால், அவனைப் போலப் புல்லாங்குழல் வாசிக்க நம்மால் முடிவதில்லையே சார்!'' என்று கூழைச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே ஓர் அடிவெட்டு வெட்டினார் காரியதரிசி.

விவேகானந்தனின் முகம் சுண்டியது. ''ஆமாம், ஆமாம்! கலையின் பெயரால் பொது ஜனங்களின் பணத்தைக் கொள்ளையிடுகிறவர்கள் இப்படித்தான் பேசுவார்கள். எதையெதையோ சர்க்கார் தேசியமய மாக்குகிறார்களே, இந்தச் சங்கீதம், சினிமா, நடனம், நாடகம் முதலானவற்றை நடத்தும் உரிமையை எல்லாம் அவர்கள் முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்!'' என்று வலக்கையால் இடக் கையில் குத்திச் சொன்னான்.


''அருமையான யோசனை, சார்! இந்தப் பிரச்னையையே உங்கள் தேர்தல் இலட்சியமாகப் பிரகடனித்தால் நிச்சயமாக வெற்றி உங்களுக்குத்தான் சார்!'' என்றார் காரியதரிசி குறும்புக் குரலில்.

விவேகானந்தனுக்குக் கோபம் குமுறி விட்டது. ''இங்கே பாருங்கள் மிஸ்டர்! உங்கள் தந்திரமெல்லாம் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்கள்? அந்தப் புல்லாங்குழல் வித்வானுக்கு ஐந்தோ, பத்தோ கொடுத்து அவன் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகு நீங்களே அவனைக் கச்சேரி செய்ய வரவேண்டாமென்று சொல்லிக் கொடுத்து எங்கோ அனுப்பி விட்டீர்கள் என்று நான் சொல்கிறேன்! இதை உங்களால் மறுக்க முடியுமா?'' என்றான் அழுத்தந் திருத்தமாக.

திடுக்கிட்டு விட்ட சங்கக் காரியதரிசி சற்று முன்னால் வந்து, ''சார்! நீங்கள் என்ன சார் சொல்கிறீர்கள்? நாங்கள் ஏன் சார் அப்படிச் செய்யப் போகிறோம்? அதனால் எங்களுக்கு என்ன லாபம் சார்?'' என்று படபடப்புடன் கேட்டார்.

''ஏன் செய்யக்கூடாது? கச்சேரி நிகழ்ச்சியை நிச்சயமாக நடத்துவதென்று தீர்மானித்துக் கொள்ளாமல், சும்மா விளம்பரம் செய்வது; கணிசமாக டிக்கட் விற்பனையானால், கச்சேரி செய்ய ஆளைக் கொண்டு வருவது; டிக்கட் விற்பனையாகாமல் கையைக் கடிக்கும் போல் இருந்தால், ஆளை அழைத்து வராமலே அவன்மேல் பழியைப் போட்டுப் 'புரோகிராமைக் கான்சல்' செய்து விடுவது! இதனால் உங்களுக்கோ, கச்சேரி செய்ய ஒப்புக் கொண்டவனுக்கோ நஷ்டமில்லை.





ஜனங்களுக்குத்தான் நஷ்டம், கஷ்டம் எல்லாம்! இப்படி ஏன் நீங்கள் செய்திருக்கக் கூடாது?"

"சார்! சார்! அபாண்டம் பேசாதீர்கள் சார்! இந்தமாதிரி குயுக்தியான யோசனை இதுவரை எந்தச் சர்க்காருக்கும் தோன்றியே இருக்காது சார்!"

"எல்லாம் வெறும் வேஷம். நான்தான் அந்த மோகனசுந்தரத்தை இன்று மாலை ஆறு மணிக்குப் பரங்கிமலையில் பார்த்தேனே? அங்கிருந்து அவன் திரும்பி வந்ததையும் பார்த்தேன். நீங்கள் இரண்டு பேரும் கூட்டுச் சதி செய்து தான் இந்தக் குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறீர்கள்! இன்னொன்றுகூட எனக்குத் தோன்றுகிறது. அதாவது, உங்கள் சபாக் கட்டிடத்தை இன்ஷ்யூர் செய்துகொண்டு, குறுக்கு வழியில் பணம் பெற நீங்களே பந்தலுக்குத் தீ வைத்தும் இருக்கலாம்!"

"சார்! சார்!"

"இருக்கட்டும், இந்த விஷயத்தை நான் இதோடு விடப்போவதில்லை. சட்டசபை வரையில் கொண்டுபோய் உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்!"

"சார்! உங்கள் மனம் நோக நான் ஏதாவது சொல்லியிருந்தால் தயவு செய்து மன்னித்து விடுங்கள், சார்! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் சார்!...ஆனால் நீங்கள் கற்பனை செய்வதுபோல இங்கே எதுவும் நடக்கவில்லை சார்! நான் சொல்வதை நம்புங்கள் சார்" என்று பயந்து நடுங்கிக் குழறிக்கொண்டே போய் விவேகானந்தனின் இரு கைகளையும் பற்றிக் கொண்டார் அந்த அப்பாவிக் காரியதரிசி.

விவேகானந்தனுக்கு உள்ளூரச் சிரிப்புப் பொங்கியது. அந்தக் காரியதரிசி சற்றுமுன் அரசியல் பேச்சாளர்களை அலட்சியப் படுத்திப் பேசியதற்குச் சரியாகப் பழி வாங்கி விட்டோம் என்று எண்ணிக் குதூகலித்தான். தன்னுடைய பேச்சுத் திறமையாலும், அறிவின் குயுக்தியான உருட்டல் மிரட்டலாலும் ஒன்றிரண்டு நிமிஷங்களில் ஒரு மனிதனைப் பணிய வைத்துவிட்டதை நினைத்துத் தனக்குள் பெருமைப்பட்டுக்கொண்டான். ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "சரி, சரி; இங்கே நடந்த கலாட்டாவில் யாருக்காவது ஏதாவது விபத்து நேர்ந்ததா மிஸ்டர்?" என்று மிடுக்கான குரலில் கேட்டான்.

"தெய்வாதீனமாக அப்படியொன்றும் நேரவில்லை, சார்! ஆனால் ஒரே ஒரு பெண்ணுக்கு மட்டும் ஏதோ விபத்து நேர்ந்ததாம். புகை மூட்டத்தால் மூச்சுத் திணறி, ஜனநெரிசலில் சிக்கிக்கொண்டு மூர்ச்சையாகி விட்டாளாம். உடனே அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தோம்" என்று பணிவுடன் சொன்னார் காரியதரிசி.

"யார் அந்தப் பெண்?"

"அது விவரம் தெரியவில்லை, சார். பார்த்தால் பெரிய இடத்துப் பெண் போல் இருந்தாள். சொந்தக் காரில் வந்தவளாகவும் இருக்கும். ஏனென்றால் அவள் கையில் கார் சாவியும் இருந்ததாம்!"

விவேகானந்தன் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து விட்டான். 'மூர்ச்சையாகி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயிருக்கும் பெண் ஒருகால் தேவகியாய் இருப்பாளோ?' — சபைக் காரியதரிசியிடம் ஒன்றுமே சொல்லிக் கொள்ளாமல் சரேலெனத் திரும்பிச் சாலையை நோக்கி விரைந்தான் விவேகானந்தன்.

அங்கே, நெருப்பின்மேல் நிற்பவர் போல் தவித்துக் கொண்டு நின்றிருந்த சிவப்பிரகாசம் அவசரமாக விவேகானந்தனின் எதிரே சென்று, "என்ன தம்பி! தேவகி இங்கே வந்தாளா? விசாரித்துப் பார்த்தீர்களா?" என்றார்.

"வாருங்கள் சீக்கிரம்! காரில் ஏறி உட்காருங்கள்! ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்க்க வேண்டும்!" என்று பரபரப்புடன் சொல்லிக் கொண்டே காரில் பாய்ந்து ஏறினான் விவேகானந்தன்.

திடுக்கிட்ட சிவப்பிரகாசம், "என்ன தம்பி? என்ன நடந்துச்சு?" என்று குழறிக் கேட்டவாறு குடுகுடுவென்று ஓடி வந்து காரினுள் புகுந்தார். விவேகானந்தன் பதிலேதும் சொல்லாமல் காரை வேகமாகச் செலுத்திச் சென்றான்.

"உனக்கு மிகவும் சிரமம் கொடுத்து விட்டேன், இல்லையா தேவகி?" என்று புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டே காரிலிருந்து கீழே இறங்கினான் மோகனசுந்தரம்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை!" என்று இனிய குரலில் கூறியவாறு தேவகியும் காரை விட்டு இறங்கினாள். அவளிடம் ஏதோ ஒருவிதப் படபடப்புத் தென்பட்டது. ஆனால் மோகனசுந்தரமோ தன் சுபாவத்துக்கு மீறிய அமைதியுடன் காணப்பட்டான். சிவப்பிரகாசத்தின் பங்களா காம்பவுண்டு வாசலுக்கு வெளியே தெருவோரம் அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

"இப்போது நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள்?" என்று ஏதோ சிந்தனையில் மெல்லக் கேட்டாள் தேவகி.

"கச்சேரி செய்யத்தான் போகப் போகிறேன்! ஏன், போக வேண்டாம் என்கிறாயா?" என்றான் மோகன்.



இப்பொழுது
வெகு துரிதமாக
வேலை செய்ய
அதிக
சக்தியுடன்
கூடியது
குளிர்
ஜலதோஷம்
வலிகள்
மற்றும்
ஜுரங்கள்
C.A.Q
FORT
8 காப்ஸ்யூல்கள்
கொண்ட
எளிதாகத் திறக்கும்
பெட்டி
ஸ்பென்ஸர் & கோ., லிட்.
சென்னை - பம்பாய் - கல்கத்தா - டில்லி மற்றும் கிளைகள்


பேதி
மருந்துக்கு
அடிமையாகாதீர்
GENUINE
PHILLIPS
MILK OF MAGNESIA
பிலிப்ஸ்
உண்மையான மில்க் ஆப் மக்னீஸியா
டெஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்

''இல்லே. இப்போதே மணி எட்டாகி விட்டதே! இதற்கு மேல் போய்...''

''அதனுலென்ன? இன்று எனக்கு ஏற்பட்டிருக்கும் மன நிம்மதியில் இரவு முழுவதும்கூட என்ருல் கச்சேரி செய்ய முடியும்!''

தேவகி அவனை அநுதாபத்தோடு ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு தணிந்த குரலில், ''நான் சொல்வது என்னவென்ருல், அங்கே அந்தச் சங்கீத சபாவில் ஏதோ கலவரம் நடந்து கொண்டிருந்ததே! இந்தச் சமயத்தில் நீங்கள் அங்கு போனுல்?...'' என்று இழுத்தாள்.

மோகன் இதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்தான் ''போனுல் என்ன, தேவகி? என்னேக் கொன்று போட்டு விடுவார்கள்? சந்தடி செய்யாமல் மேடையில் போய் உட்கார்ந்து, முதல் எடுப்பிலேயே ஜனரஞ்சனி இராகத்தில் ஒரு பாட்டை வாசித்தேனுல், எல்லாரும் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவார்கள். எனக்கு இதெல்லாம் பழக்கமான விஷயம். உற்சாகமாக நான் விளையாடும் ஒரு விளையாட்டு என்றும் சொல்லலாம்!'' என்று சொல்லி மீண்டும் சிரித்தான் அவன்.



தேவகி அவனை வியப்புடன் இமைதட்டாமல் பார்த்தாள். அவன் சொன்னதில் அவளுக்கு வியப்பேதும் ஏற்படவில்லே. ஏனென்ருல், அதை அவள் முன்ஞெரு நாள் - அந்த நவயுக வாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழா கலை நிகழ்ச்சியில் - கண்கூடாகவே பார்த்திருக்கிருள் அல்லவா? எனவே, அவள் அதிசயப்பட்டதற்குக் காரணம், அங்கே அவ்வளவு பெரிய கலவரக் குழப்பங்களைப் பார்த்த பின்னும் அவற்றை ஒரு விளையாட்டு விஷயமாக அவன் எண்ணிக் கொண்டிருக்கிருனே என்பதுதான்.

அந்தச் சங்கீத சபாவின் பந்தல் தீயிடப்பட்ட விஷயம் தேவகிக்குத் தெரியாது. மோகனசுந்தரமும் அதைப் பார்க்கவில்லே. அங்கே அவர்கள் போன போது ஜனங்கள் அமளிதுமளி பண்ணிக் கொண்டிருந்ததைப் பார்த்துப் பயந்து விட்டாள் தேவகி. இந்தச் சமயம், மோகன் உள்ளே போனுல் ஏதாவது விபரீதம் ஏற்படும் என்று அஞ்சி, காரைத் தன் வீட்டுப் பக்கம் திருப்பிக் கொண்டு வந்துவிட்டாள். அதன்பிறகு தான் அங்கே பந்தல் தீப்பற்றிய சம்பவம் நிகழ்ந்தது!...

''தேவகி! நான் புறப்படட்டுமா?'' என்று சொல்லிச் சற்றே பின்ருல் நகர்ந்தான் மோகனசுந்தரம். தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவனுடைய அழகிய முகம் ஒரு புதுப் பொலிவுடன் திகழ்வது தெரிந்தது.

பிரேமை வழியும் கண்களால் அவனேக் கூச்சத்துடன் பார்த்து நின்ற தேவகி, ''இவ்வளவு தூரம் வந்து விட்டுக் காப்பி கூடச் சாப்பிடாமல் போகிறேன் என்கிறீர்களே?'' என்ருள் தேன்கசக்கும் நீங்குரலில்.

''காப்பிதானே? அதைவிட ஆயிரம் மடங்கு உயர்வான அமுத பானத்தை இன்று நீ எனக்கு வழங்கி யிருக்கிருயே! அந்தப் பல்லாவரம் மலேச்சாரலிலே, உனது அற்புதமான வசன கவிதையின் மந்திரகானம் இன்னமும் என்செவிகளில் தேனகை நிறைத்து இனித்துக்கொண்டிருக்கிறது. தேவகி! அதனுல்தானே இப்போது நான் இத்தனே உற்சாகத்தோடு உன் எதிரில் நின்று கொண்டிருக்கிறேன்!'' என்று உணர்ச்சி வயப்பட்ட குரலில் சொல்லி எழில் சிந்தச்சிரித்தான் மோகனசுந்தரம்.

தேவகி இதைக் கேட்டுக் 'களுக்' கென நகைத்தாள். மோகனும் அந்தச் சிரிப்பில் தன் சிரிப்பைக் கலந்தான். ஆனுல் அவ்விருவரின் சிரிப்பிலும் எவ்வளவு வேறுபாடு! இருவருமே அந்த வேறுபாட்டை உணர்ந்ததாகத் தெரியவில்லே.

சட்டென்று எதையோ நினைவுகூர்ந்து கொண்டவன்போல் ஓரடி முன்ருல் வந்து, ''தேவகி! நாளேக்குப் பூரண சந்திர தினமல்லவா? அன்றையதினம் நான் எனது வீட்டு மொட்டை மாடியில் அமர்ந்து விடிய விடியப் புல்லாங்குழல் வாசிப்பது வழக்கம். என் குருநாதர் எனக்குச் சொல்லித் தந்த இசைப் பயிற்சி முறைகளில் இதுவும் ஒன்று. உனக்கு வரச் சந்தர்ப்பப் பட்டால் நாளேக்கு என் வீட்டுக்கு வா. உன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பேன்!'' என்ருன்

தன்னே மறந்த ஏதோ ஒரு பரவச நிலேயில் நின்று அவனேயே பார்த்துக் கொண்டிருந்தாள் தேவகி. அவள் ஒன்றுமே பதில் சொல்லவில்லே.

“சரி, தேவகி! நான் விடைபெற்றுக் கொள்கிறேன். இப்போது நேரே அந்தச் சங்கீத சபாவுக்குத்தான் போகப் போகிறேன்!” என்று சொல்லி அங்கிருந்து திரும்பிச் சற்றுத் தூரம் சென்ற மோகனசுந்தரம், அந்தத் தெருவின் மறுபக்க நடைபாதையின்மேல் யாரோ ஒரு பெண் கையிலொரு பெட்டியுடன் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருப்பதை விளக்கொளியிலே பார்த்துத் திடுக்கிட்டு நின்றான். பிறகு சடாரெனப் பாய்ந்து அவளைப் பின்தொடர்ந்து ஓடலானான்.

அத்தியாயம் இருபது

காரின்மேல் ஒயிலாகச் சாய்ந்து நின்றவாறு, தொலை தூரத்தில் யாரோ ஒரு பெண்ணைப் பின்தொடர்ந்து விரைந்து செல்லும் மோகனசுந்தரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் தேவகி. அவளுடைய அந்தப் பார்வையில் என்ன கோளாறு நேர்ந்ததோ தெரியவில்லை. ஏனென்றால், மோகனின் உருவம் மட்டும்தான் அவள் கண்களுக்குத் தென்பட்டதே தவிர, அவனுக்கு முன்னால் வேகமாகச் செல்லும் அந்தப் பெண்ணின் உருவம் தட்டுப்படவே யில்லை.

“தேவகி! தேவகி! என்னம்மா இது, உன்னை எங்கெல்லாம் தேடி அலைவது?” என்று கம்மிக் கரகரத்த குரலில் கேவுவது போல் கேட்டுக்கொண்டே காரிலிருந்து இறங்கி ஓடி வந்தார் சிவப்பிரகாசம்.

திடுக்கிட்டு நிமிர்ந்த தேவகி சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய காருக்கு மிக அருகில் அந்தக் கறுப்புச் சிறிய கார் வந்து நின்று கொண்டிருந்தது.

“என்ன மகளே? என்ன நடந்தது? ஏன் வீட்டுக்குள்ளே போகாமல் இங்கே தெருவிலேயே காரை நிறுத்திவிட்டு நிற்கிறாய்? எங்கே போனாய்? எப்போது வந்தாய்? அந்தக் கல்யாண விருந்துக்கு ஏன் வரவில்லை?” என்று கேள்விக்குமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டே தேவகியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார் சிவப்பிரகாசம்.

தன் தந்தையிடம் எந்த ஒரு விஷயத்தையும் மறைத்தறியாதவளான தேவகி, நடந்த நிகழ்ச்சிகள் அவ்வளவையும் ஒரே மூச்சில் சொல்லிவிட வேண்டும் என்று பரபரத்தாள். அப்படிச் சொன்னால் அவர் கோபிப்பாரா, சிரிப்பாரா, வருந்துவாரா என்பதைப் பற்றி அவள் கவலைப்படவே இல்லை. அது அவளுடைய சுபாவம்.

“என்னம்மா, தேவகி! ஏன் பேசாமல் நிற்கிறாய்? என்மேல் கோபமா?” என்று குழந்தையிடம் கொஞ்சுவது போல் கொஞ்சல் குரலில் கேட்டார் சிவப்பிரகாசம். அவருக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சியும் படபடப்பும் இன்னமும் அடங்கினதாகத் தெரியவில்லை.

தேவகி ஏதோ சொல்லத் தலைநிமிர்ந்தாள். இப்போதுதான் எதிரே நின்ற அந்தச் சிறிய கார் யாருடையது என்ற விஷயம் அவள் நினைவில் சைதன்யமாகியிருந்தது. சொல்ல நினைத்ததை மறந்து, அந்தக் காரைப் பரபரப்புடன் பார்த்த அவள் முகம் வெளுத்துச் சிறுத்தது. விவேகானந்தனும் இப்போதுதான் காரிலிருந்து கீழே இறங்கினான்.

“நல்ல பிள்ளைதான் போ! புளுட் கச்சேரிக்குப் போனாயே, அதை என்னிடம் ஒரு வார்த்தை போனில் கூப்பிட்டுச் சொல்லியிருக்கப்படாது?” என்று செல்லமாகக் கடிந்து கேட்டார் சிவப்பிரகாசம்.

தேவகியின் மனம் ‘பகீர்’ என்றது. ஆரம்பம் முதல் தன்னைப் பின்தொடர்ந்து வந்த விவேகானந்தன், தான் போன இடம் வந்த இடம் எல்லாவற்றையும் தன் தந்தையிடம் சொல்லி விட்டிருப்பானோ என்று எண்ணிப் பெரிதும் குழம்பினாள். இல்லையானால் அவள் கச்சேரிக்குப் போக முயன்ற விஷயம் அவருக்கு எப்படித் தெரியும்? பாங்கிமனையில் மோகனசுந்தரத்துடன் உல்லாசமாகப் பாடிக்களித்த விஷயமோ, பிறகு அவனுடன் சங்கீத சபாவுக்குப் போன செய்தியோ தன் தந்தையின் காதுக்கு எட்டிவிட்டது என்பதற்காக அவள் அப்படித் திகிலடையவில்லை. அவற்றை அவளே அவரிடம் சொல்லிவிட வேண்டுமென்றுதான் இப்போது வாய் திறந்தாள். பிறகு ஏன் இந்தத் திகைப்பும் குழப்பமும்? தன் வாயிலாக அல்லாமல், மூன்றாம் ஆளான விவேகானந்தனின் மூலம் அந்த விவரங்களைத் தன் தந்தை கேட்டறிந்திருந்தால் அவரின் தன்மையே வேறு விதமாக மாறிவிடுமே என்றுதான் அவள் அப்படிக் கவலையும் திகிலும் அடைந்தாள்.

ஆயினும் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, “ஆமாம், அப்பா! அந்தக் கச்சேரிக்குத்தான் போக நினைத்தேன். ஆனால் போக முடியவில்லை!” என்று தணிந்த குரலில் சொன்னாள் தேவகி.

“நல்ல காரியம் செய்தாய், மகளே! நீ அங்கு போகாமல் கடவுள்தான் தடுத்திருக்க வேண்டும். போயிருந்தால்

அங்கே நடந்த கலவரங்களிலும், பந்தல் தீப்பற்றி எரிந்த கலாட்டாவிலும் சிக்கிக் கொண்டு என்னபாடுபட்டிருப்பாயோ!"

தீயை மிதித்தவள்போல் துடித்து நிமிர்ந்த தேவகி, "அப்பா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? பந்தல் தீப்பற்றி எரிந்ததா? எங்கே? எப்போது?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"அந்தப் பயங்கரத்தை நீ பார்க்கவில்லையா, மகளே? என்னவோ, கச்சேரி செய்ய ஒப்புக் கொண்டவன் வரவில்லையாம். டிக்கட் வாங்கிய ஜனங்கள் ஆத்திரமடைந்து கீற்றுப் பந்தலுக்குத் தீவைத்து விட்டார்களாம். அந்தக் கண்ணறாவிக் காட்சியை என் கண்ணாலேயே பார்த்தேன்... படுபாவிப் பயல், அந்தச் சபாக் காரியதரிசி உளறினதைக் கேட்டு, உனக்குத்தான் ஏதோ ஆபத்து நேர்ந்து விட்டது என்று அலறியடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினேன். அங்கே வேறு யாரோ ஒரு பெண் நெற்றியில் பலத்த காயம் பட்டுப் படுத்துக் கிடந்தாள். கடவுள் என்வயிற்றில் பாலை வார்த்தார்! அப்பாடா, என்ன அலைச்சல்! என்ன தவிப்பு!" என்று பெருமூச்சு விட்ட சிவப்பிரகாசம் சட்டென்று திரும்பி, "ஏங்க தம்பி, அங்கேயே நிற்கிறீங்க? வாங்க, வீட்டுக்குள் போகலாம். என்னாலே உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்? எவ்வளவு தொல்லை!...வாம்மா, தேவகி! டிரைவர் வந்து காரை எடுத்துக்கொண்டு வருவான்!" என்று சொல்லிக்கொண்டே தம் பங்களாவை நோக்கி நடந்தார். விவேகானந்தன் ஓரக்கண்ணால் தேவகியைப் பார்த்துக் கொண்டே தயங்கித் தயங்கி அவரைப் பின்தொடர்ந்தான்.

ஆனால் தேவகியோ அப்படியிப்படி அசையாமல் அங்கேயே நின்றாள்.

'மோகனசுந்தரம் எங்கே? சங்கீத சபாவுக்குத்தான் போயிருக்கிறானா? தீப் பற்றி எரிந்து கொண்டிருக்கும் சமயத்தில் அவன் அங்கு போனால் என்ன நடக்கும்?'

வீட்டுக்குப் போவதா, அல்லது மோகனை அந்தச் சபாவுக்குப் போகாமல் தடுக்கச் செல்வதா என்ற பெருங் குழப்பத்தில் துடித்து நின்றாள் தேவகி.

பூனையைக் கண்டு அஞ்சிப் பயந்தோடும் புறாவைப் போலக் கால்போன திக்கெல்லாம் ஓடி, எழெட்டுத் தெருக்களையும் கடந்து ஒரு நெடுஞ்சாலையில் ஏறி நின்ற கோமதி, மேல்மூச்சு வாங்கப் பின்னால் திரும்பிப் பார்த்தாள். அவள் ஓடிவந்த தெருவின் கடைக்கோடியில் மோகனசுந்தரம் தலை தெறிக்க ஓடி வருவது விளக்கொளியில் மங்கலாகத் தெரிந்தது.

'இது என்ன சோதனை! அந்த மனிதனின் கண்ணிலிருந்து எப்படி மறைவது?' என்று தவிப்புடன் முனகிய கோமதி சுற்றுமுற்றும் அவசரமாகப் பார்த்தாள். டாக்ஸியோ, ரிக்ஷாவோ எதுவும் தென்படவில்லை. கடைசி ரயிலுக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. ஆயினும் இந்த விடாக்கண்டனிடமிருந்து இப்போதைக்குத் தப்ப வேண்டுமே!

காலடியில் பெட்டியை வைத்துக் கொண்டு மிரட்சியுடன் அங்குமிங்கும் பார்த்த கோமதியின் பார்வையில் எதிரேயிருந்த ஒரு பெரிய ஹோட்டல் தென்பட்டது. அன்றொரு நாள், விவேகானந்தனுக்குக் காப்பி வாங்கிக் கொடுத்து உள்ளம் குளிர்ந்தாளே, அதே ஹோட்டல்தான் அது!

ஒரு கண யோசனைக்குப் பின் அந்த ஹோட்டலை நோக்கிச் சரேலென்று விரைந்தாள் கோமதி.

அன்று அவள் உட்கார்ந்த அந்த குளிர்ச் சாதன அறையின் அதே மேஜைக்கு எதிரில் போய் அமர்ந்தாள். இப்போதுதான் அவளுக்கு நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

ஹோட்டல் சர்வர் 'மெனு கார்டை'க் கொண்டு வந்து அவள் எதிரில் வைத்தான். அன்று அந்த அழகு ரசிகையைப் பார்த்து அசட்டுமயமாகச் சிரித்தானே, அதே சர்வர்தான் அவன்.

"ஒரு கப் காப்பி, அவ்வளவுதான்" என்றாள் கோமதி. உடனே, மோகனசுந்தரம் இங்கே வந்து விட்டால் என்ன செய்வது என்று ஓர் எண்ணம் தோன்றவே அவசரமாக நிமிர்ந்து, "இந்தாப்பா, சற்றுச் சீக்கிரமாகக் கொண்டு வா!" என்றாள். அவள் மனம் 'திக், திக்' கென்று அடித்துக் கொண்டது. தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள அந்த அழகிய கண்ணாடி அறையைச் சுற்றி மேலோட்டமாகப் பார்வையைச் செலுத்தினாள்.

அவளுக்குப் பின் வரிசையிலிருந்த ஒரு வட்டமேஜைக்கு எதிரில் மூன்று ஆடவர்கள் உட்கார்ந்திருப்பது எதிர்ப்பக்கமிருந்த கண்ணாடிச் சுவரில் தெரிந்தது. அவர்களைப் பட்டும் படாததுமாகப் பார்த்தாள் கோமதி.

அந்த மூவரில் இருவர், நல்ல வாலிபப் பருவத்துடன் கட்டைத் துண்டுகள் போல் கறுத்த மேனியராய்க் காட்சியளித்தனர். அவர்கள் அணிந்திருந்த தடபுடலான உடைக்கும் அவர்களது முகத் தோற்றத்துக்கும் கொஞ்சங்கூடப் பொருத்தமில்லை. பலவகையான உணவு வகைகளை மேஜையைச் சுற்றிப் பரப்பி வைத்துக் கொண்டு பத்து நாட்கள்

பட்டினி கிடந்த பகாசுரர்கள்போல் வாரி வாரி விழுங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு எதிரில் சுமார் ஐம்பது வயது மதிக்கத் தகுந்த ஒரு பெரியவர் அமைதியாக உட்கார்ந்திருந்தார். கண்ணியமான பெரிய மனிதர்போல் காணப்பட்ட அவர் எதுவும் சாப்பிடாமல் ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்தார். இடையிடையே ஏதோ தணிந்த குரலில் சொல்வதும், பிறகு சிந்தனையில் ஆழ்வதுமாக இருந்தார் அவர்.

கோமதிக்கு மூன்று பேரையும் எப்போதோ பார்த்த ஞாபகம். யார் அவர்கள்?......

சந்தேகமில்லை. அன்றொரு நாள் இரவு விவேகானந்தனுடன் டாக்ஸியில் வந்து இறங்கி அவளிடம் இருபது ரூபாய் பணம் பெற்றுக்கொண்டு போன அந்தத் 'தேர்தல் காலத் தொண்டர்கள்' அல்லவா அவ்விரண்டு பேரும்?...சரி; அந்த மூன்றாம் மனிதர் யார்? இப்போது அவரை ஒரு சிறு குழந்தை கூட இன்னதென்று அடையாளம் தெரிந்து கொள்ளும். எப்படியென்றால், அவருடைய பெரிய புகைப் படம் அச்சிட்ட சுவரொட்டிகள் நகரத் தெருக்களெங்கும் பளிச்சிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆம்; அவர்தான் திருவாளர் நீலமேகம்! விவேகானந்தனுடன் தேர்தல் போட்டியிடும் பழைய அபேட்சகர்!

அன்றொரு நாள், டாக்டர் ராமநாதனின் மருத்துவ விடுதியிலிருந்து கொண்டு, யூ-என்-ஓவிடம் பேசப் போவதாகப் 'பிரசங்கம்' பண்ணிக் கொண்டிருந்தாரே, அவரா இவர்? அவரேதான்! ராமநாதனுல் கைவிடப்பட்டு, வில்லன் புருக்குக்கு ஐயாயிரம் ரூபாய் வரை கொட்டி அழுது விட்டு, கடைசியில், 'உபதேர்தல் வருகிறது' என்ற மந்திரச் சொற்களைக் கேட்டதும் உடனே சித்தப்பிரமை நீங்கப் பெற்ற சாட்சாத் அந்த நீலமேகம்தான் அவர்! மயில் ராவணனின் உயிர் ஏதோ ஒரு பறவையின் கூட்டில் இருந்ததாகக் கதை உண்டு; அது போல் இந்த நீலமேகத்தின் சித்தமும் சீவனும், 'தேர்தல்' என்ற காண்டாமிருகத்தின் கூட்டுக்குள் அடக்கம் என்பதைப் பாவம், அந்த அப்பாவி டாக்டர் ராமநாதனுல் எப்படி அறிந்து கொள்ள முடியும்?

திருவாளர் நீலமேகம் மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "என்ன, அச்சா?" என்றார்.

"ஐயா! புண்ணியத்திலே திருப்தியாகச் சாப்பிட்டோம்" என்று கூறிப் பெரிய ஏப்பம் விட்டுக் கொண்டு நிமிர்ந்தனர் அவ்விரண்டு பேரும்.

"சரி; அந்த விவேகானந்தனை நீ எப்போ போய்ப் பார்க்கிறதாக உத்தேசம், துரை?" என்று கண்களை இடுக்கிக்கொண்டு கேட்டார் நீலமேகம்.

காப்பியை மெல்லப் பருகிக் கொண்டிருந்த கோமதி இதைக் கேட்டு ஒரு குலுங்குக் குலுங்கினாள். தன் செவிப்புலனைக் கூர்மையாக்கிக் கொண்டு அவர்கள் பேசுவதை உற்றுக் கவனித்தாள்.

துரை என்று விளிக்கப்பட்டவன் தனது காக்காய்க் கூண்டு கிராப்பை ஒதுக்கி விட்டுக் கொண்டு நிமிர்ந்து, 'என்னங்க இப்படிக் கேட்கிறீங்க? இன்னைக்கு ராத்திரி எத்தனை மணியானாலும் அவனைப் பார்த்துக் காரியத்தை முடிக்காமல் ஒரு இனைப் பச்சைத் தண்ணி கூடக் குடிக்க மாட்டோமுங்க!" என்றுன் குதிரை கனைப்பதுபோல் சிரித்துக் கொண்டு.

"ஆமாம்; தேர்தலுக்கு இன்னும் எட்டே நாட்கள்தான் இருக்கின்றன. அதற்குள் காரியத்தை முடித்துவிட வேண்டும். முதலில் ஒன்பதாயிரத்தை நீட்டு. அதற்கு அவன் மசிந்தால் பத்தாயிரமாகக் கொடு! இதிலே அவனுக்குப் பாதிக்குப் பாதி லாபம்தான் பரவாயில்லை. பணத்தை அவன் பெற்றுக் கொண்டால்,உடனே உங்கள் எதிரேயே, அவனுடைய அபேட்சைப் பத்திரத்தை வாபஸ் பெற்றுக் கொண்டதாகத் தேர்தல் கமிஷனருக்கு ஒரு கடிதம் எழுதி வாங்கிக் கொள்ள வேண்டியது. அவ்வளவுதான். 'ஆகா, ஊஹூ, அதெல்லாம் முடியாது' என்று அவன் முரண்டு பண்ணினால்? ... அப்புறம் நீங்கள்....ஆமாம்; சரியாக ஒரு 'பார்வை' பார்த்துவிட்டு வந்துவிட வேண்டியது!" என்று கூறிச் சிரித்தார் நீலமேகம்.


"இது என்னங்க, எங்களுக்கு ஒரு பொடி விஷயம்! இரண்டிலொன்றை முடித்து, நீங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது. இவ்வளவுதானே? கவலைப்படாதீங்க! காரியத்தை நாங்க முடிச்சுடறோம்!" என்று கரகரத்தான் துரை.

"அப்புறம் எங்கள் கமிஷன்?..." என்று இழுத்தான் இன்னொருவன்.

"அதுதான் முதலிலேயே சொல்லி விட்டேனே! ஆளுக்கு ஐந்நூறு ரூபாய்! ஆனால், ஒன்று; இங்கே என்னிடமும் வாங்கிக்கிட்டு, அங்கே அவனிடமும் கைநீட்டி ஏதாவது குள்ளமால் வேலை செய்தீர்களோ, உங்களைத் தொலைத்து விடுவேன் தொலைத்து!"

மூவரும் சிரித்துக் கொண்டே புறப்பட்டார்கள். கோமதியின் உடலும் உள்ளமும் திடுக்கென்று ஆட்டங் கண்டு நடுங்கின. (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam



Registered No. M. 4302
Registered as a Newspaper in Ceylon